# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

நவம்பர் 20 -26, 2013

பக்கம் - 24

30/-




ஒளிப்படம்: விருமாண்டி

## அமோக வரவேற்பும் அடைக்கப்பட்ட வேலியும்



## நவம்பர் - 26; எதிரும் புதிரும்










# அமோக வரவேற்பும் அடைபட்ட வேலியும்

— அக்கினிபுத்திரன்

இந்தியா இரு தரப்பினரை ஒரே சமயத்தில் திருப்திப்படுத்த இரு வெடிகளைக் கொளுத்திப் போட்டது. அவை பெரும் சத்தத்துடன் வெடித்துப் புழுதி கிளப்புமெனவே எதிர்பார்க்கப் பட்டது.

எதிர்பார்ப்பில் இடி விழுந்ததேயொழிய வேறு எந்த ஒரு அதிர்வும் ஏற்படவில்லை. வெடிகள் புஸ்வாணமாகிவிட்டன.

முதலாவது வெடி இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்பது. இப்படி ஒரு அறிவித்தலை விடுப்பதன் மூலம் இந்தியா இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதை எதிர்த்து நடத்தப்படும் போராட்டங்கள் முடிவுக்கு வந்து விடும் எனக் கருதப்பட்டது.

நடக்கவில்லை! தமிழகத்தில் இன்னும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. அது மட்டு மன்றி இந்தியா சார்பில் பொதுநலவாய மாநாட்டில் எவரும் கலந்து கொள்ளவும் கூடாது எனச் தமிழகச் சட்ட சபையில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.



ஏனெனில் மன்மோகன்சிங் கலந்து கொண்டாலென்ன கலந்து கொள்ளா விட்டாலென்ன இந்தியா பொதுநலவாய மாநாட்டில் இலங் கையைப் பாதுகாக்க உச்சக்கட்ட முயற்சிகளைக் மேற்கொள்ளும் என்பதை தமிழக மக்கள் நன்கறிவர். எனவே மன்மோகன்சிங் இலங்கையில் இடம்பெறும் பொது நலவாய மாநாட்டில் கலந்து கொள் ளாமல் விடுவது வெறும் கண் துடைப்பு என்பது எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டு விட்டது.

எனவே தமிழகத்தில் போராட் டங்கள் தொடர்ந்தன. அந்த வெடி பயனற்றுப் போய் விட்டது. அடுத்த வெடி இலங்கையில் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை அம்பலப்படுத்த காணொலிகளை தயாரித்து வெளியிட்ட ஹெலும்மக்ரேக்கு இந்தியா விசா வழங்க மறுத்து விட்டது. இதன் மூலம் இலங்கையிடம் "நல்லபிள்ளை" எனப் பெயர் கேட்கலாம் என்பது இந்தியாவின் நப்பாசை. இதற்கு இலங்கை நேரடியாகப் பதில் வழங்கவில்லை. ஆனால் இலங்கை ஹெலும் மக்ரேக்கு விசாவைப் வழங்கி இந்தியாவுக்கு வழங்க வேண்டிய பதில் கௌரவத்தை வழங்கிவிட்டது.

இரண்டாவது வெடியிலும் இந்தியா மூக்குடைபட்டு விட்டது. எத்தனை தரம் மூக்கென்ன, முகமே உடைந்து உருமாறி போனாலும் இந்தியா, இலங்கை ஆட்சியாளரின் பக்கம் தான்.

## பிரமாண்டமான வரவேற்பு!

ஹெலும் மக்ரேக்கு இந்தியா விசா வழங்க மறுத்தபோதும் இலங்கை ஏன் வழங்கியது என்பதன் மர்மம், அவர் இலங்கைக்கு காலடி வைத்த மறுகணமே உலகுக்கு புரிந்தது.

ஹெலும் மக்ரே கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய மறுநொடியே கொடிகள், பதாகைகள், கூக்குரல்கள் என விமான நிலை யமே அதிர்ந்தது.வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் திகைத்துப் போய் விட்டனர். எரிக்சொல்ஹய்முக்கும், சனல் -4 ற்கும் எதிராகக் கோஷங்கள். திரும்பிப்போ என்ற கத்தல்கள். ஆனால் அவர்கள் திரும்பிப் போகவா வந்தார்கள்?

ஆர்ப்பாட்டம் முடிந்ததும் ஹெலும் மக்ரே நேரடியாக எங்க ளுக்கு வேறு எந்த ஒரு நாட்டிலும் இப்படிப் பிரமாதமான வரவேற்பு வழங்கப்படவில்லை" என்று அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத் துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெலவிடம் தெளிவாகவே சொல்லியிருந்தார்.

ஹெலும் மக்ரேக்கு இந்தியா விசா வழங்க மறுத்தமை அவர்களின் சொந்த விவகாரம். எம்மைப் பொறுத்தவரையில் நாம் ஒரு ஜனநாயக நாடு என்ற முறையில் நாம் ஊடகவியலாளர்களை வரவேற்கின்றோம். அவர்கள் இங்கு வந்து நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று செய்தி சேகரிக்க முடியும். ஹெலும் மக்ரே இலங்கைக்கு எதிராகச் செயற்பட்ட போதிலும் நாம் அவரை இங்கு வர அனுமதித்தோம். அவர் வடக்கு கிழக்கு உட்பட எங்கு சென்றும் செய்திகளைச் சேகரிக்க முடியும். இலங்கையின் யதார்த்த நிலைமைகளைப் பார்த்த பின்பு அவர் தனது கருத்துக்களை மாற்றிக் கொள்வார் என நம்புகின்றோம் இப்படிச் சொன்னார் அமைச்சர் ஹெகலிய. உடனேயே நம்பமுடியவில்லை! நம்பமுடியவில்லை! எனப்பாட வேண்டும் போல் தோன்றுகின்றதா? உப்புக்கடல் நீரும் சர்க்கரையாகலாம் இவர் சொன்னது எப்படி உண்மையாகலாம் என அடுத்த வரியையும் பாட வேண்டும் போல் தோன்றுகிறதா? ஆனால் சொன்னார்.சொல்லியேவிட்டார்!

ஹெலும் மக்ரேயும் அவரின் சக ஊடக நண்பர்களும் யாழ். தேவி தொடரூந்தில் தேசத்தின் மகுடம் பெட்டியில் ஏறிப் புறப்பட்டு விட்டனர். எல்லாமே நன்றாக நடந்தது. யாழ்தேவியும் நன்றாகவே பயணம் செய்தாள். அனுராதபுரம் ரயில் நிலையத்தில் தொடரூந்து நின்ற போது ஒரு குழுவினர் தேசத்தின் மகுடம் பெட்டியைச் சுற்றி வளைத்தனர். வெள்ளைப்புலி, பிரிவினைவாதி, திரும்பிப்போ எனப் பலவிதமான ஆக்ரோஷக்கோஷங்கள்! ஹெலும்மக்ரே குழுவினர் தாம் ஜனாதிபதியின் அனுமதியுடனேயே வடக்குக்குப் போவதான ஆதாரங்களை ஆர்ப்பாட்டக்காரரிடம் காட்டினர்.

## பருப்பு வேக மறுத்தது!

மூன்று மணி நேரத்தின் பின்பு அவர்கள் வேறு ஒரு வாகனத்தை ஏற்பாடு செய்து கொழும்பு திரும்பிவிட்டனர்.

அது பற்றி அமைச்சரவைப் பேச்சாளர் கருத்து வெளியிடுகையில் ஹெலும் மக்ரே குழுவினர் வடக்குக்குச் செல்வதில் ஆபத்து ஏற்படும் எனக் கருதியதாலேயே திருப்பி கொழும்புக்கு அவர்களைக் கொண்டு வரவேண்டியதாகிவிட்டது. அவர்களைக் காப்பது எங்களின் கடமை என்று கூறி விட்டார்.

அவரின் பொறுப்புணர்வுக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும். எனினும் ஒரு நெடுந்தூரப் பயணம் செய்யும் தொடரூந்தை ஒரு சில காடையர்கள் மூன்று மணி நேரம் தடுத்து வைத்திருந்த போது பொலிஸார் என்ன செய்தார்கள்?

வெலிவேரியாவிலும், கட்டுநாயக்காவிலும் தங்கள் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் செய்த மக்களை போக்குவரத்தைத் தடை செய்தார்கள் எனச் சொல்லிச் சுட்டுக் கொல்ல முடியுமானால் ஏன் அனுராதபுரத்தில் மட்டும் தொடரூந்தைத் தடை செய்த வன்முறையாளர்களை தொடரூந்தைத் தடை செய்த வன்முறையாளர்களை விரட்டியடிக்க முடியவில்லை?

## இன்னுமொரு சம்பவமும் உண்டு

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர. ஹெலும் மக்ரே குழுவினரை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறி கோத்தாவுக்கு அழைத்துச் சென்று பேச்சுகளை நடத்தினாராம். அது தொடர்பாக அரசு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளதாம். எனினும் பொதுபலசேனாவால் பொறுக்க முடியுமா? அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சிறிகோத்தாவிற்குள் புகுந்தும் கலகம் விளைவித்து விட்டனர். இது அவர்களின் மஞ்சள் அங்கிப் பஞ்சசீலக் கொள்கை போலிருக்கிறது.

இலங்கை அரசு ஊடகவியலாளர்களை இரு கரம் நீட்டி வரவேற்றது. அவர்களும் வர வேற்பை நம்பி வந்தனர். அவர்கள் இலங்கையில் புதிதாக எழுப்பப்படும் புதிய கட்டடங்களையும், அகன்ற நெடுஞ்சாலை களையும் பார்த்துவிட்டு இலங்கையைப் புகழ்ந்து எழுத வேண்டும் என்பது தான் அரசின் விருப்பம்.

வடக்குப் பகுதிக்கு நேரில் சென்று பார்த்து இலங்கை அரசின் இன ஒதுக்கல் கொள்கைகளையும் அவர்கள் கண்டு விடக்கூடாது என்பதில் அரசு குறியாக இருந்தது.

எனவே இக்காலப்பகுதியில் கட்டு நாயக்கா- பலாலி நேரடி விமான சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டு விட்டன. புகையிரதத்திலோ, பேரூந்திலோ அல்லது தரை வழியாக வேறு எந்த வாகனத்திலோ சென்றால் அதை தடுத்து நிறுத்தவென்றே கூலிப் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டன

இந்தியா விசா வழங்க மறுத்தது. இலங்கையோ விசா வழங்க மறுக்கவில்லை, வழங்கியது.ஆனால் நடமாடமுடியாதபடி நாலு பக்கமும் முள்வேலி போட்டு விட்டது?

உண்மைக்கு வேலி போட முடியாது என்பதை காலம் காலமாக வரலாறு கற்றுத் தந்துள்ளது? இன்னும் இன்னும் கற்றுத் தரும்!

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

**நா**ன் வெளியே காலடி எடுத்து வைத்த நாள் இன்னும் நல்ல ஞாபகம். பிரிவுத் துயரம் பொங்கி வழிந்தது. இன்று கூட, அந்த நினைவு வரும்போது, அன்றைய அதே. விம்மல் நெஞ்சினுள் பொருமுகிறது. அன்று கடும் வெய்யில். ஒரே அவியல். இருபத்தியிரண்டு வயதை நான் எட்டிக் கொண்டிருக்கும் பருவம். எனக்குள் ஒரு ஆற்றாமை உணர்வு. சாப்பிட முடியவில்லை. முதற் தடவையாக நாட்டை விட்டு வெளியேறும் ஒரு பயணி. உலகின் மறுபக்கத்துக்கே செல்வது போலல்லாமல் வேறொரு உலகத்துக்கே செல்வது போன்ற உணர்வுடனான பிரியா விடை. விமானத்திலே கூட பின்புறத்திலேயே எனக்கு இருக்கை ஒதுக்கப்பட்டிருந்தது. அதன்படி உணவோ, பானமோ பரிமாறப் படும் போது, கடைசியாகத் தான் எனக்குக் கிடைக்கும். விமானத்தில் ஏறிய மறுகணமே எனது கனத்த உணர்ச்சிகள் எல்லாம் அகன்று, பாரம் கழன்றது போல, தோள் இலகுவாக இருந்தது. விமானம் புறப்படுமுன்னரே; அகோரப்பசி வயிற்றைப் பிறாண்டியது.

எனது வெளிநாட்டுப் பயணம் எனது வாழ்வில் ஒரு சந்திப் பிரிவாக அமைந்தது. அவுஸ்திரேலியாவை விட்டு வெளியேறிய முப்பது ஆண்டுகளில் ஒரு தடவை மட்டும் நான் அங்கு சென்றிருக்கிறேன். அவுஸ்திரேலியாவிலிருந்து எனது வெளியேற்றம் எனது வாழ்வின் ஒரு அத்தியாயத்தை மூடியது; எனது சிந்தனையிலும் எனது ஈடுபாடுகளிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வழிகோலியது. வாழ்க்கை நீரோட்டத்தில் மூழ்கி, உலகின் வெவ்வேறு பாகங்களிலிருந்து வருபவர்களுடன் ஊடாடும் போது, என்னை முழுமையாக ஆட்கொள்ளும் போகும் இந்த அற்புத அனுபவ வேறுபாடுகளிலிருந்து நான் பயன் அடைவதனால், எனது கருத்து, சிந்தனை, நடத்தை ஆகியவற்றுக்கு நேரும் சவால்களுக்கு முகம் கொடுப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

அவுஸ்திரேலியச் சிநேகிதிகள் இருவருடன் இலண்டனையும், ஐரோப்பாவையும் சுற்றிப் பார்த்தேன். இந்தப் பயணம் முழுவதிலும் சரி, இங்கிலாந்தில் நான் சீவித்த போதும் சரி, பல அவுஸ்திரேலியர்களுடன் பழகக் கிடைக்காதது என் அதிஷ்டம். இல்லையென்றால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எனது அவுஸ்திரேலியாக் கலாசாரத்தையும், உறவுகளையும் இடம்பெயர்ப்பதாக மட்டும் இருந்திருக்கும்.மாறாக நான் தரிசித்த நாடுகளில் உள்ளூரவர்களோடு கூடி வாழவும் பணியாற்றவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தமை பெரிதுதானே ? உதாரணமாக றோம் நகரில் ஒரு மேட்டுக் கோபுர மாடிக் கட்டிடத்தில் குடியிருந்து கொண்டு தனியார் இருதய மருத்துவமனை ஒன்றில் தாதித் தொழில் பார்த்தேன். பின்னர், மிகச் சொற்ப காலத்துக்கு நான்கு இத்தாலியப் பிள்ளைகளின் செவிலித் தாயாக நான் புரிந்தேன். ஐரோப்பிய நாடுகளில் சீவித்து வேலை பார்த்ததால் அங்கெல்லாம் மக்களின் கலாசார மற்றும் மொழி ஊடாட்ட வாழ்க்கையில் பங்கு பற்றவும் அதைக் கூர்ந்து அவதானிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. உல்லாசப் பயணப் பகுதிகளை மட்டும் தொட்டுத் தொட்டுத் தரிசித்து இந்த ஆழ்ந்த அனுபவத்தைப் பெற்றிருக்க முடியாது. கையில் உள்ள காசு கரைந்து விட்டால் இங்கிலாந்து திரும்புவோம். அங்கே தொழில் முகவர் மூலம் வசதியான மருத்துவத் தாதிப் பணி புரிந்து கைநிறையச் சம்பாதித்துக் கொண்டு மீண்டும்



ஐரோப்பாவின் மத்திய அல்லது வடபகுதிக்கு உலா புறப்பட்டு விடுவோம். இரண்டு ஆண்டுகள் இந்த மாதிரியான வாழ்வு. அதன் பின் இரண்டு சிநேகிதிகளும் அவுஸ்ரேலியா திரும்ப, நான் எனது வாழ்வை மீளாய்வு செய்ய லண்டனில் தனியே விடப்பட்டேன்.

அந்த நாடோடி வாழ்க்கை சில ஆண்டுகளே நிலைத்தது. ஆனால் எனக்குக் கிடைத்த அந்த அனுபவமே இணையற்றது. உலகமே அதற்கு ஈடாகாது. ஆனாலும் நான் அடுத்த கட்டத்துக்கு சென்றாக வேண்டும் என்று உணரும் காலம் வந்தது. மேலே படிக்கலாமா என்றும் சிந்தித்தேன். ஆனால் எனது தன்னம்பிக்கையின்மை உணர்வு இன்னமும் என்னை விட்டு அகலவில்லை. பட்டப்படிப்பை நாடுவது என்றாலும் "ஏ" லெவல் உயர்தரச் சித்திகள் இல்லை. ஆகவே அது வீண் கனவு என்றே அஞ்சினேன். அதன் பின், ஓராண்டுகால மூலாதார உடல் நலப் பராமரிப்புக் கல்வி கற்கலாமா என்று சிந்தித்தேன். இதுவே எனது வாழ்வின் அடுத்த ஏணிப்படியாக அமைந்தது. உண்மையில் சமுதாயம் சார்ந்த இந்த உடல் நலப்பராமரிப்பு பயிற்சி எனக்கு வெகுவாகப் பொருந்தி வந்தது. அடிப்படை மருத்துவ அறிவை மருத்துவத் தாதிப் பயிற்சி தந்திருந்தது; அதன் பின் மருத்துவிச்சிப் பயிற்சி மிகத் தேவை யானதாக அமைந்தது. ஆனால் எனது ஐரோப் பிய பயணமே தான், பிறமக்கள், பிறகலா சாரங்கள், பிறஇனங்களில் இருந்து நான் ஒதுங்கி வாழாது இருக்க உதவியது. அதுவே தான், பல இனசமுதாயம் ஒன்றில் சமுதாயப்பணி புரிய மிகத் தகுதி வாய்ந்தவளாக என்னை ஆக்கியது. ஒருபுலமைக் கல்வி கற்பதற்குத் தேவையான "ஏ லெவல்" தகைமைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக எனக்கு ஏற்கனவே கிடைத்த பயிற்சித் தகைமைகளும் தொழில் அனுபவங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சவுத்பாங் பல்கலைக் கழகத்தில் மூலாதார உடல்நல பராமரிப்புக் கல்விக்காக அனுமதிக்கப்பட்டேன். உடல் நல தரிசித்தல் புலமைக்கான ஓராண்டுக் கல்வி இது. மருத் துவ நிலையங்களில் இருந்து வெளியே சென்று , சமுதாயத்துக்குள் நுழைந்து ஆரம்ப உடல் நல பராமரிப்புப் பணியாளராகக் கடமை புரிவதற்குத் தேவையான பயிற்சியையும் ஆற்றலையும் எனக்கு இது ஊட்டியது.

ஒரு பெரிய வட்டகையில் பணி நியமனம் கிடைத்தது. வெவ்வேறு சமூக மட்டங்களும் கலாசாரங்களும் உள்ள பகுதி இது. சிக்கலான, அதே நேரம் படிமானமாகாத பல பிரச்சனைகளை நான் எதிர்நோக்க நேர்ந்தது. ஒரு புறம் மூலாதார உடல் நலப்பராமரிப்பு ஏற்பாட்டு அமைப்பு, மறுபுறம் நான் தீர்க்க வேண்டிய சமூகப் பிரச்சனைகள். இவற்றிடையே நான் ஊடாட வேண்டிய நிர்ப்பந்தம். இரண்டுமே சுவையான அனுபவங்கள். அதே நேரம் சவாலாக வும் இருந்தன. எனது மனதில் புதிய கேள்விகளையும் அவை தொடுத்தன. அரசின் நிதி தொடர்பான கொள்கைகள் சரியா? முன்னுரிமைகள் சரியா? என்று வினாத் தொடுத்தேன். அரச சேவையின் ஆற்றலின்மையைக்

**விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 10**

கண்டித்தேன். ஆட்களைப் பற்றி அறிக்கை எழுதி, வகைப்படுத்தி, பட்டியலிடுவது தொடர்பான ஒழுங்குமுறை எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. அதாவது நிறுவன அமைப்பின் மீதே நான் கேள்விகள் தொடுத்தேன் எனலாம். சமூக அமைப்புத் தொடர்பான ஆழமான அறிவு பெறுவேன் என்றால், நான் கேட்கும் கேள்விகளுக்கும் சிந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கும் தெளிவு கிடைக்கும். அதுவே எனக்கு நன்மை பயக்கும் என்றும் நம்பினேன். சமுதாய ஓட்டம் தொடர்பான எனது அறிவு போதாது என்று என் உள் உணர்வு கூறியது. ஆகவே, துணிச்சலைத் திரட்டி, சமூக விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கத் தீர்மானித்தேன். சமூகக் கருவறை தொடர்பாக, ஒழுங்கான, நேர்த்தியான அறிவு ஆழத்துக்கு ஈடு கொடுக்கும் ஆற்றல் எனக்கு உண்டாஎன்ற சந்தேகம் என்னைக் குடைந்தது. ஒரு பட்டப்படிப்புக்கான சவாலை எதிர்கொள் ளும் தகைமை எனக்கு இருப்பதாக சவுத் பாங்க் பல்கலைக்கழகம் கருதி, சமூக விஞ்ஞானப் பட்டப்படிப்புக்காக என்னை ஏற்றுக் கொண்ட போது, மகிழ்ச்சி கரை புரண்டோடியது. அறிவு நிரம்பியதும், அறிவு ஆழத்தோடு நான் புழங்க வேண்டியதுமான முற்றிலும் வேறுபட்ட ஒரு சமூ கச் சூழலுக்குள் நான் நுழைவது, எனது இரு பத்தியேழு வயதில் எனக்கு ஒருசவாலே. ஆனாலும் அதற்காக ஆவலோடு காத்திருந்தேன்.

(பதிவுதொடரும்)

நீலன்

1978இல் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா ஒரு தொலைத் தொடர்புக் கோபுரத்தை அமைத்தது. (அச்சமயத்தில் அது 2001 இல் இரட்டைக் கோபுரத் தாக்குதல் வரை செல்லும் என அமெரிக்கா கனவிலும் எதிர்பார்க்கவில்லை) இந்தத் தொலைத்தொடர்புக் கோபுரத்தின் முக்கிய நோக்கம் சோவியத் ஒன்றியத்தை உளவு பார்ப்பதுதான். இதனால் ஆத்திரமடைந்த சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானுக்குப் படை எடுத்தது. இதுவும் சோவியத் ஒன்றியம் என்ற கோபுரத்தின் வீழ்ச்சிக்கு ஒரு காரணியாக அமைந்தது.

ஆப்கானிஸ்தானில் நுழைந்த சோவியத் ஒன்றியத்தின் படைகளுக்கு எதிராக முஜாஹிதீன்கள் உருவானார்கள். ஏற்கனவே சோவியத்துடன் தீராப்பகை கொண்டிருந்த அமெரிக்கா சூறாவளி நடவடிக்கை என்னும் படை நடவடிக்கை மூலம் திரைமறைவில் பல உதவிகளை ஆப்கானிஸ்தான் விடுதலைப் போராளிகளான முஜாஹிதீனுக்குச் செய்தது. முஜாஹிதீன் அமைப்பில் பின்லேடன் ஒரு புகழ் மிக்க படைத்தளபதியானார்.




சோவியத் படைகளுக்கு எதிராகப் போராடுபவர்களுக்கு சோவியத்தின் பொதுவுடமைவாதம் இஸ்லாத்திற்கு எதிரானது என்று போதிக்கப்பட்டது. சவூதி அரேபியாவில் பிறந்த ஒசாமா பின் லேடன் இஸ்லாமியச் சட்டமான ஷரியாப்படியே இஸ்லாமிய நாடுகள் ஆளப்பட வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். கம்யூனிசம், சோசலிசம், மக்களாட்சி போன்ற ஆட்சி முறைகள் இஸ்லாமுக்கு எதிரானவை என்ற கொள்கை உடையவர். சோவியத் ஒன்றியப் படைகளுக்கு எதிராகப் போரிடுபவர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஈரான் ஆகிய நாடுகள் உதவி செய்தன.

1989 இல் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறின. ஆயினும் ஆப்கானிஸ்தானில் போர் தொடர்ந்தது. சோவியத் ஒன்றியம் பதவியில் அமர்த்திய நஜிபுல்லா 1992 இல் பதவியில் இருந்து விலக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து மோசமான உள்நாட்டுப் போர் தொடரவே செய்தது. அத்துடன் ஆயுதம் ஏந்திய குழுக்கள் பல அங்கே உருவெடுத்தன. ஆப்கானிஸ்தானில் சீர்குலைந்து போன சட்டத்தையும் ஒழுங்கையும் சீர் செய்ய முஜாஹிதீன் போராளி அமைப்பின் தலைவர்களுள் ஒருவராக இருந்த முல்லா சலாம் அப்துல் சயீன் பல போராளிக் குழுக்களை ஒன்றிணைத்து தலிபான் அமைப்பை 1994 ஆம் ஆண்டு உருவாக்கினார். தலிபான் என்றால் மாணவர்கள் என்று பொருள்படும். அல்-ஹெய்தா மேற்கு நாடுகளுக்கு எதிராகத் தனது நடவடிக்கைகளை உலகெங்கும் பரவச் செய்தது. ஆனால் தலிபான் அமைப்பு தனது நடவடிக்கைகளை ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் மட்டுமே மேற்கொண்டது.

1996 இல் தலிபான் அமைப்பு ஆப்கான் தலைநகரான காபூலைக் கைப்பற்றியது. பல போராளிக் குழுக்களால் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தலிபான் இல்லாமல் செய்தது. மக்களின் போக்குவரத்துக்களை இலகுவாக்கியது. இஸ்லாமியச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பத்து வயதிற்கு மேற்பட்ட பெண்கள் படிக்கக் கூடாது எனச் சொல்லப்பட்டது. ஆண்கள் தாடி வளர்க்க வேண்டும், பெண்கள் முகத்தை திரையிட்டு மூட வேண்டும் என உத்தரவிடப்பட்டது. ஈரானின் நட்பு நாடாக ஆப்கான் மாறுவதை கடுமையாக எதிர்த்தது அமெரிக்கா. அதன் விளைவாக ஆப்கானிஸ்தானில் போராளிகள் குழுக்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் முறுகல் வலுத்தது. ஆப்கானிஸ்தானில் இருந்து செயற்படும் பின்லேடன் தலைமையிலான அல்-ஹெய்தா இயக்கம் மேற்கு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது தாக்குதல்களைத் தொடுத்தது. 1998 இல் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் உள்ள அல்-ஹெய்தா நிலைகள் மீது குண்டுகளை வீசித் தாக்கியது. 1999 இல் அமெரிக்கா, பின்லேடனைப் பிடித்துத் தன்னிடம் தரும்படி ஆப்கானை மிரட்டியது. தன் கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்க ஆப்கான் மீது பொருளாதார தடையையும், விமானப் பறப்புத் தடையையும் அமெரிக்கா விதித்தது. ஆனால் இதற்கு பதில் வேறுவிதமாகக் கிடைத்தது. அல்-ஹெய்டா அமைப்பின் உச்சக்கட்ட தாக்குதல் மூலம், விமானங்களால் மோதப்பட்டு. 2001 செப்ரெம்பரில் அமெரிக்க இரட்டைக்கோபுரம் தகர்க்கப்பட்டது.

அதே ஆண்டு ஒக்ரோபரில் அமெரிக்கா தலைமையில் நேட்டோப்படையினர் ஆப்கான் மீது படையெடுத்தனர். 2004 இல் ஆப்கானில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு புதிய அதிபராகத் ஹமித் கர்சாய் தெரிவு செய்யப்பட்டார். 2006இல் ஆப்கான் முழுவதும் நேட்டோப் படைகளின் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனினும், பல இடங்களில் தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்ந்தன. 2009 இல் அமெரிக்கா தனது அணுகுமுறைகளை மாற்றியது. அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ஆப்கானியர்களுக்கு சண்டைப்பயிற்சி வழங்குவதும் அதிகரிக்கப்பட்டது. 2011 இல் நேட்டோ படைகளில் ஒன்றான பிரிட்டன் படையினர் ஆப்கானில் இருந்து வெளியேறினர். 2012 இல் நேட்டோ நாடுகள் 2014 இல் ஆப்கானில் இருந்து நேட்டோ படைகளை விலக்கிக் கொள்வதென முடிவெடுத்தன. 2012 ஜனவரியில் தலிபான் அமைப்பு அமெரிக்காவுடனும், ஆப்கான் அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்த டுபாயில் தனது பணிமனையைத் திறப்பதற்கு ஒப்புக் கொண்டது. 2012 ஜூலையில் ஆப்கானுக்கான ரோக்கியோ நன்கொடை மாநாடு நடைபெற்றது. அதில் ஊழலற்ற நிர்வாகம் நடைபெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஆப்கானுக்கு 16 பில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டது. 2013 ஜூனில் நேட்டோவிடமிருந்து ஆப்கான் படைகள் நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக் கொண்டன. ஆனால் அதன் பின்னர் திடீர் திருப்பமாக தலிபானுடன் அமெரிக்கா நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த முயன்றது. இது ஆப்கான் அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா 2002 இல் இருந்து செய்த செலவு ஏழு பில்லியன் அல்லது ஏழு இலட்சம் கோடி அமெரிக்க டொலராகும். ஆப்கான் அரசின் மொத்தச் செலவில் 80% மேற்கு நாடுகளால் வழங்கப்படும் நிதியில் இருந்தே செய்யப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் தற்போது எட்டு இலட்சத்துக்கும் மேலானவர்கள் வேலையின்றி இருக்கின்றார்கள். தற்போது பல ஆப்கானியர்கள் நேட்டோ படைகளுக்கான சேவைகளை வழங்குவதன் மூலம் தங்களது வாழ்க்கையை ஓட்டுகின்றனர். நேட்டோ படையினர் வெளியேறிய பின்னர் இவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழப்பர். இந்த நிலையில் இவர்களில் பலர் தமக்கு தலிபானுடன் இணைவதைத் தவிர வேறு வழியில்லை என்கின்றனர். பலர் போதைப்பொருள் உற்பத்தியிலும் ஈடுபடலாம்.

நேட்டோ படைகள் விலகிய பின்னரும் கூட ஆப்கானிஸ்தான் முழுவதையும் தலிபான்களால் கைப்பற்ற முடியாது. ஏனெனில் அதற்குரிய படைவலுவும், ஆட்பலமும் அந்த அமைப்பிடம் இல்லை. 2014 ஆம் ஆண்டு நேட்டோப் படையினர் வெளியேறிய பின்னர் ஆண்டுதோறும் ஆப்கான் படைத்துறையையும், காவல்துறையையும் மேம்படுத்த நான்கு பில்லியன் டொலரையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த மேலும் நான்கு பில்லியன் டொலரையும் கொடுப்பதாக நேட்டோ நாடுகள் உறுதியளித்துள்ளன. ஆயினும் .அதற்கு முதல் ஆப்கான் அரசு ஊழலை ஒழிக்க வேண்டும் என அந்தநாடுகள் கோரியுள்ளன.

இதேவேளை ஆப்கானிலிருந்து நேட்டோப் படைகளுக்கு முற்றாக வெளியேறும் எண்ணம் இல்லை . எத்தனை நேட்டோப் படையினரைத் தொடர்ந்தும் ஆப்கானிஸ் தானில் வைத்திருப்பது? எப்படி வைத்திருப்பது? என்பது தொடர்பாக நேட்டோவுக்கும் ஆப்கான் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை இழுபறி நிலையில் இருக்கிறது. எஞ்சி இருக்கும் நேட்டோ படையினர் ஆப்கானிஸ் தானிய சட்டத்துக்கு உட் பட்டவர்களாக இருக்க வேண்டும் என ஆப்கா னிஸ்தான் அரசு கருது கின்றது. ஆனால் அவர்கள் தொடர்ந்து தமது தாய் நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகள் வலியுறுத்துகின்றன. இந்தப் பிரச்சினையை ஆப்கானிஸ்தானின் நாடாளுமன்றம் தீர்மானிக் கட்டும் என்கிறார் ஆப்கானிஸ்தானின் அதிபர் ஹமீத் ஹர்சாய்.

ஆப்கான் அதிபர் ஹமீத் ஹர்சாயும் அமெரிக்க அரச துறைச் செயலர் ஜோன் ஹெரியும் 2013 ஒக்ரோபர் 12 ஆம் திகதி சந்தித்துப் பேசி 2014 இன் பின்னர் செய்ய வேண்டியவை தொடர்பாக ஒரு உடன்பாடு கண்டுள்ளதாகத் தெரிவித்தனர். ஆனால் எஞ்சி இருக்கும் படைகள் எந்த நாட்டுச் சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் என்பது தொடர்பாக உடன்பாடு எதுவும் எட்டப்பட்டமை பற்றிய தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

தற்போது ஆப்கானிஸ்தானில் 62, 000 நேட்டோப் படையினர் இருக்கின்றனர். இதில் 2 ஆயிரம் படையினர் 2013 இன் இறுதியில் வெளியேறலாம். இதற்காக அமெரிக்க பாதுகாப்புத் துறையான பென்ரகன் மூன்று கட்டங்களைத் திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டம் - ஆப்கானில் எஞ்சியுள்ள 6, 000 படைவீரர்கள் மட்டும் ஆப்கானிஸ்தானில் இருந்து அரச படைகளுக்கு ஆதரவு கொடுத்தலும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதலும்.

இரண்டாவது கட்டம் - மேற்படி இரு நடவடிக்கைகளுடனும் ஆப்கான் படையினருக்கு பயிற்சி வழங்குதல்.

மூன்றாவது கட்டம் - மேற்படி மூன்று நடவடிக்கைகளுடன் சில பிராந்தியங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவது.

இந்த நிலையில் ஆப்கானில் உள்ள அதிபர் ஹமீத் ஹார்சாயின் அரசு நேட்டோவுக்குத் தெரியாமல் திரைமறைவில் தலிபான்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கின்றது.

இப்படி இரகசியமாக தலிபான்களுடன் பேச்சுவார்த்தை செய்து கொண்டே தலிபான் அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான ஹக்கிமுல்லா மொஹசுட் என்பவரைத் தனது ஆளில்லாப் போர் விமானத் தாக்குதலில் கொன்றுள்ளது அமெரிக்கா. இது ஆப்கான் அதிபர் ஹமீத் ஹார்சாயை ஆத்திரப்படுத்தியுள்ளது. தலிபான்களுடன் அமெரிக்காவும் பேச்சு வார்த்தை நடத்துவதும் உண்டு. அமெரிக்கா தனியே பேச்சுவார்த்தை நடத்துவதை அதிபர் ஹமீத் ஹார்சாய் விரும்பவில்லை. அதே மாதிரி , அதிபர் ஹார்சாய்யும் தனியே பேச்சுவார்த்தை நடத்துவதை அமெரிக்கா வெறுக்கிறது. தம் தலைவர் கொல்லப்பட்டதற்கு தலிபான்களும் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி இடியப்பச் சிக்கலான விடயங்களால் ஆப்கானிஸ்தான் விடயம் எவரும் ஊகிக்கமுடியாத மர்மத்தொடராக நீள்கிறது.

# கமரூனின் பின்னால் கிளம்பும் அபாயங்கள்

பூழகன்

வழமைபோலவே ஆரவாரம் .வீதி எங்கும் பொலிஸார்.யாரோ வாராங்கள் போல இருக்கு. ஊரெல்லாம் ஒரே கதை. வழமைபோல இந்த முறை இராணுவம் குவிக்கப்படாததால் யாரோ அப்பரசிண் கள்தான் வருங்கள் என்று கருத்து. பத்திரிகைகளில் பிரித்தானியப் பிரதமர் வருகிறார் என்ற செய்தி. அவரின் வரு கைக்கான எதிர்பார்ப்புக்கள் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

வெளிமாவட்டங்களில் இருந்துகூட ஆட்கள் வந்து குவிந்திருந்தனர்.பொது நூலகத்தை சுற்றி மக்கள் கூட்டம். நேரம் மாலை மூன்றுமணியை எட்டுகிறது. ஆரவாரம் கூடுகிறது. பொலிஸ் வாகனம் வந்து நிற்கிறது.

நெடுத்த மனிதர் கம்பீரமாக இறங்குகிறார். யாழ்.பொது நூலகத்துக்கு உள்ளே சந்திப்பு.முடிந்து வெளியே வரும்வரை மக்கள் காத்திருக்கின்றனர். தடுப்பு மிரு கங்களையும்தாண்டி உணர்வுகள் ஆர்ப் பரிக்கின்றன.

ஒரு குழந்தைப்பெண்ணின் ஓலம் வெளிநாட்டு ஊடகர்களது காதில் விழுகிறது. என் அண்ணாவைத்தாங்கோ என் அண்ணாவைத்தாங்கோ....... அவள் கதறுகிறார். அவளது கதறலை எப்படி மொழிபெயர்த்து கதறுவது?

கமரூன் வாகனத்துக்குள் இருந்து நடப்பதை அவதானித்தார். அவர்களது பயணம் நேர ஒழுங்குக்கு உட்பட்டது. பாதுகாப்பானது ஆகையால் அவர் வாகனத்தை விட்டு இறங்கவில்லை. ஆனாலும் உறவுகளைத் தொலைத்துவிட்டு நாளும் பொழுதுமாய் கதறியழும் மக்கள் சிலர் அவரது வாகனத்தை நெருங்கி ஆவணாங்களைக் கொடுத்தனர்.

கொண்டு தான் மக்களுக்கு செய்யக்கூடியது எது என்பவற்றை வெளிப்படுத்தினார்.

அகதிமுகாமில் அவலப்படும் மக்களை சந்தித்து அவர்களோடு அளவளாவி அவர்களின் மனாங்களுக்குள் நொடியில் புகுந்து



விட்டார் என்றுதான் சொல்லவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் வைத்தே அவர் தனது முடிவை அறிவித்திருந்தார். இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதற்கு இலங்கை அரசு கூறும் காலக்கெடு தேவை தான். ஆனால்

பூர்களது வாக்குத்தான் கமரூனின் ப்தவியைத் தீர்மானிக்கும் என்பது நடைமுறைக்கு அப்பாற்பட்ட பொய்.

தென்னிலங்கை அரசியல் வாதிகளில் எவர் ஒருவர் தமிழ்மக்களது பிரச்சினை குறித்து சரியாக குறித்து வைத்திருக்கிறார்.

ஏன் தமிழ் தலைவர்கள் சிலர் கூட பொறுப்புடன் நடந்துகொள்வதே இல்லை. இப்படியிருக்கையில் வெளிநாட்டுத் தலைவர் ஒருவர் மக்களை அணுகி பிரச்சினையைக் கேட்டறிவது அவர்களுக்கு வயித் தெரிச்சலாய்தானே இருக்கும்.

### விளையாட்டு அரசியலல்ல.

ஒரு விளையாட்டு வீரன் அத் துறையில் இருந்து அதையே நோக்க மாகக் கொண்டு செயற்பட்டால் மட் டுமே அவனுக்கு வெற்றியும் நாட் டுக்கு புகழும் சேரும். அதையும் தாண்டி அரசியல் பேசவேண்டு மாயின் நாட்டு நிலையை யும் மக்கள் பிரச்சினையையும் சிறிதாவது புரிந்து வைத்திருக்க வேண்டும். அரைத் தமிழனாக இருக்கும் முரளிக்கு அரை வாசிகூடத் தமிழ்தெரியாது என்பது யாவ ரும் அறிந்தது.

இத்தகைய பெருமைகளைக் கொண்ட முரளி இப்போது பிரித் தானியப்பிரதமர் டேவிட் கமரூனுக்கு ஏதும் தெரியாது. அவரை சிலர் பிழையாக வழி நடத்தியுள்ளனர். வடக்கு கிழக்கு நிலைமைகளை நேரில் பார்வையிடாது சிலரது கருத்துக்களையே கமரூன் வெளியிட்டு வருகிறார்.ஒரு நாள் மட்டுமே வடக்கிற்கு சென்று உண்மைகளை கண்டறிந்து விடமுடியாது என்றும் முரளி கண்டு பிடித்திருக்கிறார்.

### சரியான தெரிவு

இலங்கை சுதந்திரம் அடைந்த தன் பிற்பாடு வடக்குக்குவரும் முதலாவது வெளிநாட்டு தலைவர் என்ற வகையில் தான் பெருமையடைவதாக குறிப்பிட்ட கமரூன் வடக்கில் தவறான பாதையில் செல்லவில்லை. அவர் சரியாகத்திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில்தான் இயங்கினார் என்பது உண்மையை அறிந்துகொள்ப

### மீட்பர் யோன் சோவ்?

சனல் 4 ஊடகவியலாளர் அந்த கூட்டத்திடையே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். மக்கள் கூட்டம் அவரை கட்டித்தழுவியது.

அழுது புலம்பியது.அவரும் அழுகிறார். அந்த இடம் கண்ணீர்காடாக ஒவ்வொருவரும் தமது தேடுதல்களைச் சமர்ப்பிக்கின்றனர். கமரூனுக்கு இருந்த மதிப்பைவிட அன்ற யோன் சோவ்க்கு மதிப்பு அதிகமாக இருந்தது.

அவரும் அக்கறையோடு செயற்பட்டார்.

### பிரதர் கமரூன்

வடபகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்தது முக்கியமானது. அவர் மக்கள் மனநிலையை முன்னரே புரிந்துவைத்திருக்கவேண்டும். அதைவிட அவரது நாடு ஜனநாயக நாடல்லவா! அந்த பண்புகளோடு மக்களை அணுகினார். மாபிளில் இருந்து மண்குடிசைக்குள் புகும் கமரூன் அதற்கான மரியாதையுடன் நடந்துகொண்டார்.மனிதப்பண்பு வெளிநாட்டு பிரநிதிநியாக இருந்து

அதை தவறாகப்பயன்படுத்தக்கூடாது. அரசு உரிய பாதையில் உரிய முறையில் செல்ல வேண்டும். பெரும் தன்மையோடு மக்களை நல்லிணக்கத்துக்கு அழைக்க வேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நல்ல முடிவு எடுக்கப்படாதவிடத்து போர்க்குற்ற விசாரணை தவிர்க்கமுடியாதது.அதை நான்கோருவேன் என அறிவித்தார். இதையே பகிரங்கமாக பொதுநலவாய மாநாட்டிலும் அவர் பிரகடனம் செய்தார்.

### தவறான விமர்சனம்

கமரூனின் வடக்கு பயணம் குறித்து விமர்சனம் எழுந்திருக்கிறது. அதாவது அவர் பிரித்தானிய தமிழர்களது வாக்குக்காகவே இந்த பயணத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளார் என்று.பிரித்தானியா 'வாழ் தமிழர்கள் பிரதமருக்கு அழுத்தம் கொடுத்திருந்தனர்.அதைவிட அந்த நாட்டு ஊடகங்கள் தொடர்ந்து சர்ச்சைக்குரிய விடயங்களை வெளியிட்டுவந்தன.

இவ்வாறான காரணங்களே அவரை வடபகுதிக்குச்செல்லத் தூண்டியிருக்க வேண்டும். ஆனாலும் புலம்பெயர் தமி

### முரளி எத்தனைதடவை யாழ்ப்பாணம் வந்தார்

இலங்கையை சேர்ந்த கலப்பு சமூகத்தில் வாழ்பவர் முத்தையா முரளிதரன். சிறந்த சுழற்பந்துவீச்சாளர்.ஒரு சாதனை வீரன்.இப்படி விளையாட்டு உலகில் இவருக்கான மதிப்பும் மரியாதையும் மட்டற்றவை.ஆனாலும் அவர் கிரிக்கெட் விளையாடும் அழகை கண்டு சிரிக்காதவர்கள் இல்லை.அப்படியானால் முரளிக்கு பந்தை வீசமட்டுமே தெரியும்.அதைக்கூட எறிகிறார் என்றுதானே விமர்சனம் வருகிறது.

வடபகுதி மக்கள் பட்ட இன்னல்கள் பற்றி எதுவுமே தெரிந்திருக்காத இலங்கையை சேர்ந்த இந்த மனிதர் யாழ்ப்பாணத்துக்கு எத்தனை தடவைகள் வந்திருக்கிறார்? அப்படி வந்திருந்தாலும் பாதிக்கப்பட்ட எத்தனை மக்களைச் சந்தித்து குறை விசாரித்திருக்கிறார்.? விளையாட்டு மைதானங்களுக்கு மட்டுமே இரண்டொரு தடவை வந்து சென்றவர் இவர். இங்கு எத்தனை திறமையான வீரர்கள் இருக்கிறார்கள் என்பதையே தெரியாதவர் இவர்.

வர்களுக்குத்தெரியும்.

அதற்காக வடக்கில் வாழும் எல்லா மக்களது வீடுகளையும் தட்டி நலன் விசாரித்துத்தான் வடக்கு நிலைமைகளைப் புரிந்துகொள்ளலாம் என்று இல்லை. மனிதாபிமானம் உள்ள எவரொருவர் வடக்குக்குவந்தாலும் இங்குள்ள ஒரு தமிழ் குடிமகனைச் சந்தித்தால் கூட வடக்கின் உண்மை நிலையை அறிந்துவிடலாம். அதற்காக பச்சோந்தி வேடத்தில் தெரு நீளம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ள மந்தி(மனிதர்கள்)களை சந்தித்தால் விளைவு பாரதூரமாகிவிடும்.

கமரூன் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்தார். ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தார். வழிநெடுகே அரசின் விசித்திரங்களை அவதானித்தார். இதைவிட என்னவேண்டியிருக்கிறது வண்டவாளத்தை அறிந்து கொள்ள. இதையெல்லாம் தெரிந்து கொள்ள கமரூன் வடக்கில் முகாமிட்டிருந்தால் இலங்கைப் படைகள் பிரித்தானியாவிலும் இசைப்பிரியாக்களை உருவாக்கி விடுவார்கள் கவனம்.

முரளிக்காக வெட்கப்படுங்கள்

நவ.20, – 26 , நவ., 2013
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# முரளியின் பந்தில் வீழாத கமரூன்

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு வந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன், அந்தச் சாட்டில் வடக்குக்கும் பயணித்து தமிழ் மக்களின் உண்மை நிலை குறித்து நேரில் கண்டறிந்தார். அரசு சொல்வது போல வடக்கில் பாலாறும் தேனாறும் பாயவில்லை என்பதை பார்த்த மாத்திரத்திலேயே உணர்ந்து கொண்டார். வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன், உதயன் ஊடகவியலாளர்கள், வலி. வடக்கு மக்கள் என நிகழ்ந்த அவரது சந்திப்புகள் வடக்கின் உண்மையான முகத்தை அவருக்கு காட்டின. மற்றைய தலைவர்கள் போன்று உங்கள் விடயம் பற்றி மஹிந்தவிடம் பேசுவேன் என்று வெறும் வாய்ச்சொல்லோடு மாத்திரம் நில்லாமல், அன்றைக்கே கொழும்பு திரும்பிய கையோடு இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தார்.

உங்களுடைய நல்லிணக்க செயற்பாடுகள் அவ்வளவு திருப்திகரமானவையாக இல்லை. உடனடியாக நல்லிணக்கம் தொடர்பான பரிந்துரைகளை மார்ச் மாதத்துக்குள் நடைமுறைப்படுத்துங்கள். இல்லாவிட்டால் சர்வதேச விசாரணைக்கு நாங்களும் வலியுறுத்துவோம் என்று வெட்டு ஒன்று, துண்டு ரண்டு என்ற ரீதியில் கறாராகச் சொல்லி விட்டார்.

இப்படியான நேரடித்தாக்குதலை மஹிந்த எதிர்பார்த்திருக்கவே மாட்டார். இந்தக் கமரூனை ஏன் மாநாட்டுக்கு அழைத்தோம்? என்று அந்தக் கணத்தில் நினைத்திருப்பார். ஒருவாறு பொதுநலவாயத்தை நடத்தி முடித்துவிட்டோம் என்ற சந்தோசத்தில் இருந்த மஹிந்தவின் முத்தில் கமரூனின் வார்த்தைகள் கரியைப் பூசிவிட்டன.

எப்படிக் கமரூனைச் சமாளிக்கலாம் என்று கணக்குப் போட்ட அரசு அதற்கு ஒரு கோடரிக்காம்பை தேடியது. வகையாய் அகப்பட்டவர் இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். மஹிந்தவைச் சந்தித்த அடுத்த நாள் கமரூன் முரளிதரனுடன் சிறிதுநேரம் செலவிடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விளையாட வந்தவருடன் உங்களை யாரோ தவறாக வழிநடத்தி இருக்கிறார்கள். வடக்கில் நீங்கள் சொன்ன மாதிரி மக்கள் கஷ்டப்படவில்லை என்கிற கணக்காக கதையளந்திருக்கிறார். ஏதோ முரளிதரன் எப்போதும் வடக்கிலேயே வாழ்ந்தவர் போலவும், அவர்களின் துன்ப துயரங்களை முற்று முழுதாக அறிந்த மீட்பர் போலவும் இப்படிச் சொல்லியிருக்கிறார்.

முரளிதரன் பந்துவீசும் போது எதிரணி வீரர்கள் எந்தளவு அச்சப்படுவார்களோ அதேயளவுக்கு அவர் துடுப்பாட வரும்போது விழுந்து விழுந்து சிரிப்பார்கள். சிலவேளைகளில் தன்னுடைய துடுப்பாட்டத்தைக் கண்டு முரளியே வெட்கித்து சிரித்ததுமுண்டு. அந்தளவுக்கு கோமாளித்தனமாக துடுப்பாடும் முரளி, அந்தக் கோமாளித்தனத்துக்கு கொஞ்சமும் பங்கம் வராத வகையில் வடக்கு மக்கள் பற்றிய க்ருத்தைச் சொல்லி, எல்லோரிடத்தும் நான் அரச விசுவாசி என்பதை இன்னொரு முறை நிரூபித்து இருக்கிறார்.

விளையாட்டு வீரர் விளையாட்டுடன் இருக்க வேண்டும். தனக்குத் துளியும் சம்பந்தமில்லாத விடயங்களில் மூக்கை நுழைப்பது கேலிக்குரியதாகி விடும். முரளியின் கருத்துக்களை கேட்டு விட்டு, சில நிமிடங்கள் முரளியின் பந்துவீச்சை எதிர்கொண்டு துடுப்பெடுத்தாடிய கமரூன் தன் ருவிட்டர் கணக்கில் பின்வருமாறு பதிவிட்டிருந்தார்.

முரளி என்னை எப்படியாவது வீழ்த்திவிட வேண்டுமென்று முனைப்பாக இருந்தார், ஆனால் நான் கடைசிவரை அவரது பந்தில் அவுட்டாகவே இல்லை

இது தனியே முரளியின் பந்தை மாத்திரம் குறித்து அவர் சொல்லவில்லை, வடக்குப் பற்றிய அவரது கருத்துக்கும் சேர்த்தே கமரூன் பதிலடி கொடுத்துள்ளார். இனியாவது கோமாளிகள் வாயை மூடிக்கொள்வார்களா?

# நவம்பர் - 26; எதிரும் புதிரும்

**அனுஷ்கன்**

நவம்பர் 26. தமிழர்களின் தலைவிதியை மாற்றிய இருவர் இந்தநாளில் தான் பிறந்தார்கள்.

முதலாமவர் தமிழினம் மீது இனவழிப்பு போர் ஏவிவிடப்பட்டு தமிழ் மக்கள் தெருவுக்கு தெரு வேட்டையாடப்பட்டபோது அதற்கெதிராக ஆயுதம் ஏந்திப் போராடி தமிழர்களின் நிம்மதியான கௌரவமான வாழ்வுரிமைக் கான கோரிக்கைகளை நகர்த்திச் சென்று உலகமே தமிழர் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். மற்றையவர் வேறு யாருமல்ல. சிங்கள தேசத்தின் மாபெரும் இனவாத விற்பன்னர், அடக்குமுறை நாயகன், தமிழ்மக்கள் மீதான 'லிபரேசன் ஒப்பிரேசன்' படை நடவடிக்கை புகழ் லலித்அத்துலத்முதலி தான். தமிழர்களின் விடிவுக்காக பிரபாகரன் எவ்வாறு போரடினாரோ அதே வன்மத்துடன் தமிழர்களை அழிப்பதில் அத்துலத்முதலி முன்னின்றார். எதிரும் புதிருமான தன்மை கொண்ட இந்தத் துருவங்கள் இரண்டினதும் பிறந்த தினம் ஒரே நாளாக அமைந்தது ஆச்சரியம் தான்.

## புலிகளின் தலைவர் பிரபாகரன் - சில குறிப்புகள்

மனதுக்குப் பிடித்த ஒரு புத்தகத்தை எத்தனை முறை வாசித்தாலும் மனம் புதிய உணர்வைப் பெறுவதைப் போலத்தான், பிரபாகரன் பற்றிய நிகழ்வுகளைப் படிப்பதும்.



தமிழனுக்கு வீரத்தின் அர்த்தத்தை தனது வாழ்க்கை மூலம் எடுத்துக் காட்டியவர் அல்லவா...

தம்பி எனத் தமிழர்களால் அழைக்கப்படும் அண்ணன். 30 ஆண்டு காலமாக இலங்கை அரசுக்குக் கிலியூட்டிய புலிப் படைத் தலைவர்.

வீரத்தின் விளைநிலமாக தமிழ் ஈழத்தை மாற்றிக்காட்டிய மனிதர்!

01.அரிகரன் - இதுதான் அப்பா வேலுப்பிள்ளை முதலில்வைத்த பெயர். ஒரு அண்ணன், இரண்டு அக்காக்களுக்கு அடுத்துப் பிறந்த கடைக்குட்டி என்பதால், துரை என்றுதான் எல்லாரும் கூப்பிடுவார்கள். பிறகு என்ன நினைத்தாரோ, பிரபாகரன் என்று மாற்றுப் பெயர் சூட்டியிருக்கிறார் அப்பா!

02.வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பெரியசோதி, சின்னசோதி, சந்திரன், குட்டிமணி, தங்கத்துரை, சந்திரன், பிரபாகரன் ஆகிய ஏழு பேர் சேர்ந்துதான் விடுதலை இயக்கத்தை முதலில் தொடங்கினார்கள். இதற்குப் பெயர் வைக்கவில்லை. பிரபாகரன்தான் அணியில் இளையவர் என்பதால், தம்பி' என்றார்கள். எல்லோருக்கும் அவர் தம்பியானதும் அப்படித்தான்!

03.பிரபாகரனுக்கு அரசியல் முன்னோடியாக இருந்தவர் பொ.சத்தியசீலன். பொலிஸ் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்கள் எடுக்க வேண்டும் என்று இவரைப் பார்த்து பிரபாகரன் சொல்ல, எடுத்தால் எங்கே வைப்பது? என்று சத்தியசீலன் திருப்பிக் கேட்க... அதன் பிறகுதான் காட்டு வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்!

04.பிரபாகரன் அடிக்கடி படித்த நாவல் - அலெக்ஸ் ஹேலியின் 'ஏழு தலைமுறைகள்'. அதில் 'இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது'. போராட்டம் நடத்தாமல் யாரும் எதையும் தர மாட்டார்கள்' என்ற வரிகளை அவர் அடிக்கோடு போட்டுவைத்திருந்தார்!

05.மிக மிக வேகமாக நடக்கும் பழக்க

முடையவர் பிரபாகரன். பள்ளிக்கூடம் போகும்போது சட்டைப் பையில் இருக்கும் பேனாவை இடது கையால் பிடித்துக் கொள்வாராம். அந்தப் பழக்கம் பிற்காலத்திலும் தொடர்ந்திருக்கிறது!

06.ஏன் எப்போதும் சீருடையில் இருக்கிறீர்கள்? என்று வெளிநாட்டுத் தமிழர் ஒருவர் கேட்டபோது பிரபாகரன் சொன்னது, யாரும் அணியத் துணியாதது இந்த உடைதான். அதனால்தான் எப்போதும் இதில் இருக்கிறேன்.

07.பிரபாகரன் ஒருபோதும் புகைத்தது இல்லை. மது அருந்தியதும் கிடையாது. மற்றவர்களிடமும் இப்பழக்கத்தை அவர் விரும்பவில்லை. விடுதலைப்புலிகள் அமைப்பில் புகைபிடிக்கும் பழக்கம் கொண்ட ஒருவரை பிரபாகரன் சகித்துக் கொண்டார் என்றால், அது அன்ரன் பாலசிங்கமாகத்தான் இருக்கும். பாலாவிடம் இருந்து வரும் சிகரெட் நொடி பிரபாகரனுக்குப் பிடிப்பதில்லை. எனவே, பிரபா முன்னிலையில் பாலாவும் சிகரெட் பிடிப்பதில்லை என்கிறார், பாலசிங்கத்தின் மனைவி அடேல்!

08.அக்காவின் திருமணத்தையொட்டி தனக்கு அணிவிக்கப்பட்ட மோதிரத்தை விற்றுத்தான் அமைப்புக்குத் துப்பாக்கி வாங்கப் பணம் கொடுத்தார் பிரபாகரன். அதன் பிறகு அவர், நகை அணிவதில்லை!

09.எந்த ஆயுதத்தையும் கழற்றி மாட்டி விடுவார். ஆயுதங்கள் தொடர்பான அனைத்து ஆங்கிலப் புத்தகங்களின் மொழிபெயர்ப்புகளும் அவரிடம் இருந்தன. ‘தொழில்நுட்ப அறிவு இல்லாதவன் முழுமையான போராளியாக முடியாது’ என்பது அவரது அறிவுரை!

10.ஒவ்வொரு நவம்பர் மாதமும் 25, 26, 27 ஆகிய மூன்று நாட்களும் பிரபாகரன் உண்ணாவிரதம் இருப்பார். 26 அவரது பிறந்த நாள். 27 மாவீரர் நாள். அன்று மாலை மட்டும் தான் திரையில் தோன்றி அனைவருக்குமான உரையை நிகழ்த்துவார்!

11.‘இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது தத்துவாசிரியன்; வரலாறு எனது வழிகாட்டி’ என்ற வார்த்தைகளைத்தான் அவர் தனது நாட்குறிப்பேட்டில் எழுதிவைத்திருப்பார்!

12.போரில் யார் காயமடைந்து பார்க்கப் போனாலும், பொன்னியின் செல்வனில் வரும் பெரிய பழுவேட்டரையருக்கு 64 வீரத் தழும்புகள் உண்டு’ என்று சொல்லித் தைரியம் கொடுப்பாராம் பிரபாகரன்!

13.ஆறு கோடியே 43 லட்சம் ரூபாய் பிரபாகரனுக்கு எம்.ஜி.ஆர். கொடுத்திருக்கிறார். பிரபாகரன் கொடுத்த துப்பாக்கி ஒன்றைத் தனது தலையணைக்குக் கீழ் எம்.ஜி.ஆர். வைத்திருந்தார்!

14.பேனாவை மூன்று விரல்களால் பிடித்துத்தான் அனைவரும் எழுதுவார்கள். பிரபாகரன் எழுதும்போது ஐந்து விரல்களாலும் பிடித்திருப்பார்!

15.பிரபாகரனுக்குப் பிடித்த புராணக் கதாபாத்திரம் கர்ணன். தன்னிழப்புக்கும் உயிர்த் தியாகத்துக்கும் ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தவன் கர்ணன். அவனை எப்போதும் நினைப்பேன் என்பார்!

16.தமிழீழம் கிடைத்த பிறகு எனது பணி காயம்பட்ட போராளிகளைக் கவனிப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் பற்றியதாகவும் மட்டுமே இருக்கும் என்று பிரபாகரன் பகிரங்கமாக அறிவித்திருந்தார்!

17.பிரபாகரன் குறித்து தங்களது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் மிக உயர்வாக எழுதிய இந்திய இராணுவத்தின் உயர் அதிகாரிகள்

மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங், ஜெனரல் சர்தேஷ் பாண்டே, ஜெனரல் திபேந்திரசிங். இவர்கள் மூவரும் இந்திய அமைதிப் படைக்குத் தலைமை வகித்து பிரபாகரனுடன் மோதியவர்கள்!

18.போரில் பெற்றோரை இழந்த குழந்தைகள் மீது அளவுக்கு அதிகமான பாசம் வைத் திருந்தார் பிரபாகரன். அவர்களைப் பராமரிக்க, செஞ்சோலை சிறுவர் இல்லம், காந்தரூபன் அறிவுச் சோலை ஆகிய காப்பகங்களை வைத்திருந்தார். பெற்றோர் இல்லாத பிள்ளையாக அமைப்புக்குள் வந்து பெரிய போராளியாக ஆகி மறைந்தவர் கரும்புலி காந்தரூபன்!

19. ‘உயிர் பறிக்கும் சயனைட்தான் எங்கள் இயக்கத்தை வேகமாக வளர்த்த உயிர்’ என்றார் பிரபாகரன்!

20.பிரபாகரனைச் சிலர் குறை சொன்ன போது, அமைப்பில் இருந்து ஒன்றரை ஆண்டுகள் விலகி இருந்தார்!

21.பிரபாகரனிடம் நேரடியாக போர்ப் பயிற்சி பெற்ற முதல் அணி: கிட்டு, சங்கர், செல்லக்கிளி, பொன்னம்மான். இரண்டாவது அணி: சீலன், புலேந்திரன். மூன்றாவது அணி: பொட்டு, விக்டர், ரெஜி. இவர்கள்தான் அடுத்து வந்தவர்களுக்குப் பயிற்சி கொடுத்தவர்கள்!

22.தன் அருகில் இருப்பவர் குறித்து யாராவது குறை சொன்னால் பிரபாகரன் பதில் இப்படி இருக்குமாம், நான் தூய்மையாக இருக்கிறேன். இறுதி வரை இருப்பேன். என்னை யாரும் மாற்ற முடியாது. நீங்கள் குறை சொன்னவரை என் வழிக்கு விரைவில் கொண்டு வருவேன்!

23.ஒன்று நான் இலட்சியத்தில் வென்றிருக்க வேண்டும். அல்லது போராட்டத்தில் இறந்திருக்க வேண்டும். இரண்டும் செய்யாத என்னை எப்படி மாவீரன் என்று சொல்ல முடியும்? என்றுஅடக்க மாகச் சொல்வார்!



24.மிக நெருக்கடியான போர்ச் சூழல் நேரங்களில் பெற்றோல் அல்லது அசிட்டுடன் ஒருவர் பிரபாகரனுடன் இருப்பார். அவருக்கு ஏதாவது ஆனால், உடனேயே உடலை எரித்துவிட உத்தர விட்டிருந்தார். எதிரியின் கையில் தன் சாம்பல் கூடக் கிடைக்கக் கூடாதுஎன்பதில் தெளிவாக இருந்திருக்கிறார்!

25.‘தமிழீழ இலட்சியத்தில் இருந்து நான் பின்வாங்கினால் என்னுடைய பாதுகாவலரே என்னைச் சுட்டுக் கொல்லலாம்’ என்று பகிரங்கமாக அறிவித்திருந்தவர்.

## அழிப்பின் அவதாரம் அத்துலத்

1987 காலப்பகுதில் இவரை அறியாதவர்கள் என்று யாருமே இருக்க முடியாது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை விட ரணசிங்க பிரமேதாசாவை லலித்அத்துலத் முதலியலேயே சிங்கள தேசத்தின் படுகொலைவாதியாக - பாதுகாப்பு அமைச்சராக -வலம் வந்தவர்.

லலித்அத்துலத்முதலி 26 ஏப்ரல் 1936 ஆம் ஆண்டு கொழும்பிலேயே பிறந்தார். இவர் பிறந்தபோது இலங்கை பிரித்தானியாவின் பிடிகளுக்குள் இருந்தது. இவரின் 15 ஆவது வயதில் இலங்கை சுதந்திரமடைந்தது. ஆயினும் அப்போதுதான் சிங்கள தேசத்திடம் தமிழினத்தின் சுதந்திரம் அடகு வைக்கப்பட்டது. கல்லூரிக் காலத்திலேயே இனவாதம் கக்கும் அளவுக்கு இனவாதியாக வளர்ந்த- வளர்க்கப்பட்ட இவர் கொழும்பு றோயல் கல்லூரியில் இணைந்து தன் இளமைக் கல்வியை கற்றார். பின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பிரிவான இயேசுக் கல்லூரியில் தன் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அப்போதைய ஆட்சியாளர்கள் இனவாதத்தையே கருப்பொருளாய் வைத்து அரசியல் நடத்தியதால் இனவாத அரசியல் மீது நாட்டம் கொண்டு அதற்காகத் தன்னை தயார் படுத்திக் கொள்ள சட்டத்துறை சார்ந்த கல்வி நோக்கித் தன் பார்வையைத் திருப்பினார். 1957 ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுதுகளில் ஒரு சட்டத்தரணியாக வெளியேறினார். இக்காலப் பகுதி தான் தமிழினம் மீது சிங்கள பயங்கரவாதம் துளிர் விட்ட காலப்பகுதி. இதன் பின் மேற் படிப்புக்காக வெளிநாடு சென்றார்.

1977 ஆம் ஆண்டு ஜே. ஆர் ஜெவர்த்தனாவின் பயங்கரவாத அவசர கால சட்ட விதிகள் தமிழ்மக்கள் மீது ஏவிவிடப்பட்ட போது மாபெரும் இனவாதியாக நாடு திரும்பினார் அத்துலத். இனவாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் பிரதான சிங்களக் கட்சியான ஐக் கியதேசியக்கட்சி இவருக்கான அடைக்கலத்தை வழங்கியது. டட்லியின் அழைப்பில் அகலவத்தை தேர்தல் தொகுதிக்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டார். பின் ஜே. ஆரின் அடக்குமுறை ஆட்சி தலைவிரித்தாடத் தொடங்கிய காலப்பகுதியான 1978 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் இரத்மனாலை தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்ற சிங்கள தேசத்தின் இனவாத நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிக் கதிரையில் அமர்ந்தார்.

நாடாளுமன்ற அரசியலில் இனவாதத்தைக் கக்கும் சிங்கள அரசியல் வாதிகளுக்கு இவரே முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

இவரின் இனவாத விசுவாசத்தை இரசித்த ஆட்சி யாளர்கள் இவரை அழைத்து முதலில் வர்த்தக அமைச்சையும் பிறகு பாதுகாப்பு அமைச் சையும் ஒப்படைத்து அழகு பார்த்தனர். பாது காப்பு அமைச்சு கைவசம் கிடைத்த மறுகணமே இவரின் ஊழித்தாண்டவம் ஆரம்பமாகத் தொடங்கியது. தமிழர் பிரதேசம் மீதுபல்வேறு திசைகளிலும் அடக்குமுறைகளையும் அராஜகத்தையும் ஏவத் தொடங்கினர். மனிதப் படுகொலைகள் நிகழ்த்தும் பெருமெடுப்பிலான படையெடுப்புகளுக்கான உத்தரவுகளையும் அள்ளி வழங்கத் தொடங்கினர். தமிழினம் மீது சிங்களக் காடைக்கும்பல்கள் ஏவி விடப்பட்டு இனக்கலவரங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டன. யாழ். நூலகம் உட்பட பெரும் தொகையான தமிழர் உடைமைகள் எரியூட்டப்பட்டன. தெருவுக்குத் தெரு தமிழ் இளைஞர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் இனக்கலவரங்கள் என்ற பெயரில் வேட்டையாடப்பட்டு சிதைக்கப்பட்டு கொன்று வீழ்த்தப் பட்டனர். அடக்குமுறைக்கு எதிராக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும் கிளர்ந்தெளவும் , ஆயுதங்களை கைகளிலும் சயனைட் குப்பிகளை கழுத்திலும் மாட்டவும் பிரதான தூண்டுகோல் அத்துலத்தின் அராஜ படை நடவடிக்கைகள் தான்.

(21 ஆம் பக்கம் பார்க்க)

# கவிதைப் புனல்

## உன்னை நினைத்தேன்

உன்னை நினைத்த
மனதுக்குள்ளெ
உன்னை நினைத்தேன்

கன்னயிதழ் பேசுகையில்
கழுத்து நகை
மின்னுகையில்
உன்னை நினைத்தேன்

கட்டி வந்த
சேலையிலே
உடல் வளைவு நெளிவு
சுளிவு கண்டு
உன்னை நினைத்தேன்

இராத்திரி சாம
கனவுகளில்
தனித்திருக்கும்
வேளைகளில்
உன்னை நினைத்தேன்

ஊர் உலகத்தில்
நீயெல்லாம்
நடந்து வரும்
அழகைக் கண்டு
உன்னை நினைத்தேன்

சேவகியாய் நீ இருந்து
உதவிகள் புரிகையிலே
உன்னை நினைத்தேன்

கட்டியணைத்து
முத்தமழை
பொழிகின்ற
வேளையிலே
உன்னை நினைத்தேன்

கவிதை எழுதி
காலங்களை
கடத்துகின்ற வேளையிலே
உன்னை நினைத்தேன்

தர்மசங்கடமாய்
தாலி ஒன்று
மாற்றாளுக்காய்
கட்டிய வாழ்க்கையிலே
உன்னை நினைத்தேன்

மனதுக்குள்ளே
உன்நினைப்பு
போலியான என் வாழ்க்கை
கண்ணீருக்குள்ளே
குடியிருப்பு
காதல் தேவதை
நீ எங்கே?

வே. வே. அகிலேஸ்வரன் மருதங் கேணியூர்



## தாய்

வாசிப்பறியா
பருவத்தில்நான்
கண்ட முதல்
கவிதையவள் ஆனாலும்
மெதுவாகவாசித்தேன்
கற்றுக் கொண்டேன்
வாழ்வை அறிந்து
கொண்டேன்அவளை
அவளின் நேசிப்பு
தான் எனை
வாசிக்கப் பழக்கியது

அவள் புன்னகை
எனக்கு அரிச்சுவடியானது
அவள் கண்ணிமைத்தால்
எனக்கு விசிறியாகியது
அவள் கண்ணீர் துளி

என் கலக்கம் நீக்கியது
தென்றலான அவள்
அரவணைப்பு எனக்குத்
தாலாட்டாகியது

ஆனால் இன்னும்
சில விதிகள்
வினாக்குறிதான்
விளங்க முயல்கின்றேன்
விளக்குவார்
யாருமில்லை
அவள் எழுத்துக்கள்
எதுகை மோனைகளான்றி
உணர்வுகளால்
எழுதப்பட்டதாலே
என்னவோ?

ஹப்ஸா பஹார் . மள்வானை.

## கார்த்திகைப் பூக்களுக்கு...

ஆகாயம் கடல்
வெளியெங்கும்
காவலாயிருந்த
கடவுள்களே


ஆழவேரூன்றி
அகலக் கிளை பரப்பிய
ஆலமரத்தின் வீர
விழுதுகளே நீங்கள்

ஆண்ட பொழுதுகள்
கண்ட கனவுகள்
என்றும் கானல்
நீராகாது

கவலையின்றி
கண்ணுறங்குங்கள்
உங்கள் வரலாறுகள்
என்றும் முளைதிறனுள்ள
வித்துக்களாய்-எம்
மனங்களில் வாழும்!

நீங்கள்துயில் கொள்ளும்
பூங்காக்கள் இன்றுகளில்
புழுதியாகலாம்- ஆனால்
ஈழமண்ணில் என்றும்
புனிதச் சிலைகளே...!

புலோலியூர் காவியா



## விடுதலைத் தீபங்கள்

காலத்தை வென்று
காவியம் படைத்து
கல்லறையில் விழிமூடிய
காவிய நாயகர்கள்
கார்த்திகை தீபங்கள்

சாவினுள் சரித்திரம் படைத்து
சாதனை புரிந்த சதோரர்கள்

எம் குடும்பத்து குல விளக்குகள்
தேசத்திற்காய் எரிந்த
ஒளி வீச்சுக்கள்

எம் உயிர் காக்க
உங்கள் உயிர் துறந்து
விடுதலைத் தீயை அணைத்து
மண்ணை முத்தமிட்ட
மறவர்களே!

மறவோம் என்றும்
நீங்கள் தடம் பதித்த பாதையில்
தொடர்ந்திட்ட எம் பயணம்
முடிவின்றி தொடர்கின்றது.....

தமிழ்ப்பிரியன்

## இவள்



" இவள்........!"
தமிழ் அன்னையின்
வாழையடி வாழையாக
"வளர்ந்த வாரிசு"

" இயல் - இசை-
நாடகத்தையும்
மதுரமான
குரல்வளத்தையும்
கல்வித் தாயிடம்... சுற்று .
படியேறி வந்தவள்"

" தமிழ்க் மொழிக்
கடலில்" அலையாக
உயர்ந்து,கரையோடு
மோதுபவள்"

" செய்திகளை சேகரித்து"
பைந்தமிழ் கிளியின்...,
ஓசை நயத்தில்....,
செய்திகளை வாசிப்பவள்"

'எதிரிகள்" "........"
சுற்றி வளைத்த......,
கணப்பொழுதிலும்....,
களத்தில் கெளரிமானாக
துணிந்து நின்றவள்..."

"வாள் இருந்தால்"
சீவியிருப்பாள்
தீ-இருந்தால்
குளித்திருப்பாள்,
நஞ்சு- இருந்தால்
உண்டிருப்பாள்"

" முடியாத முடிவில்"
அடிமையான இவளை,
கைகள் கால்கள் கட்டி..
கட்டுடலின் உதிரத்தை
குடித்த,காம வெறியர்களின்
வலையில்,இவள்
என்ன செய்வாள்-?

வி. அருள்ராஜா வவுனிக்குளம்



## சோகம்

தென்னிலங்கையின் - சோகம்
தெருவெங்கும் கோலாகலம்
வடகிழக்கின் - சோகம்
வாழ வழியின்றிய அலங்கோலம்
சோகம் கான வரும்
உலக விருந்தினர்- இரு
சோகத்தையும் காண்பாரா...?
இல்லை- ஒரு
சோகத்தை புகழ்வாரா...?

விவேகானந்தனூர் சதீஸ்.



# விளையாட்டு

தொகுப்பு : வரு

## ஒதுக்கப்படும் சேவாக், சகீர், ஹர்பஜன்

சில வருடங்களுக்கு முன்னர் வரை இந்தியக் கிரிக்கெட் அணியின் தூண்களாக விளங்கிய வீரேந்தர் சேவாக், ஹர்பஜன் சிங்,சகீர் கான் ஆகியோர் புதியவீரர்களின் வருகையாலும்,அவர்கள் வெளிப்படுத்தும் திறமையாலும் அணியிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள். தற்போதுஇந்திய தேசியக்கிரிக்கெட் அணிக்கான வருடாந்த ஒப்பந்தங்களில் இருந்தும் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

2013-14 பருவகாலத்திற்காக இந்திய அணிவீரர்களின் ஒப்பந்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில்,25 வீரர்களுக்கு வருடாந்த ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏ,பி,சி என மூன்று வகையான ஒப்பந் தங்கள் வழங்கப்பட்டுள்ளன. குழு ஏ இனைச் சேர்ந்த வீரர்களுக்கு வருடாந்தம் ஒருகோடி இந்திய ரூபாக் களும், குழு பி இனைச் சேர்ந்த வீரர்களுக்கு வரு டாந்தம் 50 இலட்சம் இந்தியரூபாக்களும், குழு சி இனைச் சேர்ந்த வீரர்களுக்குவருடாந்தம் 25 இலட்சம் இந்தியரூபாக்களும் ஊதியமாகக் கிடைக்கப்பெறும்.

கடந்தமுறை ஒப்பந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்காத வீரர்களானபுவனேஷ்வர குமார்,மொஹமட் ஷமி,அம்பத்திராயுடு, ஜெய்தேவ் உனத்கட்,மோகித் சர்மாஆகியோருக்கு இம்முறை ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.கடந்தமுறை ஒப்பந்தம் வழங்கப்பட்ட சிரேஷ்ட வீரர்களானசகீர் கான்,விரேந்தர் சேவாக், ஹர்பஜன் சிங் ஆகியோருக்கு ஒப்பந்தம் வழங்கப் படவில்லை. அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வுபெறும் சச்சினுக்கு குழு ஏ இல் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

வீரேந்தர் சேவாக், இவ்வருட ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும், மார்ச்சில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரானடெஸ்ட்



தொடரிலும் இறுதியாகப் பங்கேற்றிருந்தார். 20-20 அணியிலிருந்து அவர் கடந்த வருடமே நீக்கப்பட்டு விட்டார். ஒருநாள் போட்டியொன்றில் அதிகஓட்டங்களை (219) பெற்றவீரர் என்றசாதனையுடன்,டெஸ்ட் போட்டிகளில் 49.34 என்ற உயரிய சராசரியையும் சேவாக் கொண்டுள்ளார்.

ஹர்பஜன் சிங்,கடந்த 2011ஆம் ஆண்டே ஒருநாள் போட்டிகளில் இருந்து ஒதுக்கப்பட்டதுடன், இவ்வருட ஆரம்பத்தில் டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் நீக்கப் பட்டார். இந்தியகிரிக்கெட் அணிக்குக் கிடைத்த சிறந்த சுழல்பந்து வீச்சாளர்களில் இவர் முதன்மை யானவர். அதேபோல், சகீர் கான் கடந்த 2012 உடன் சகலவிதமான சர்வதேசகிரிக்கெட் போட்டிகளிலிருந் தும் ஓரங்கட்டப்பட்டுவிட்டார். இந்திய அணியில் தற்போது அசத்திக்கொண்டிருக்கும் பிரக்ஜன் ஒயா, அஸ்வின், புவனேஸ்வர் குமார்,மொகமட் சமி, ஷீகா தவான், ரோகித் சர்மா ஆகியோர் அணியில் இருக்கும் வரை சிரேஷ்ட வீரர்கள் மூவருக்குமான வாய்ப்புக்கள் தேசிய அணியில் மிகக்குறைவு.

## தவறு யார் மீது?

இஷாந்த் ஷர்மா கிரிக்கெட்டில் ஒரு வேகப்பந்து வீச்சாளராக - இளம் வீரனாக - அறிமுகமாகி ஆஸ்திரேலியா போன போது யாரும் அவரைக் கவனத்தில் எடுக்கவில்லை. அவருக்கு இந்திய அணியில் இடம் கிடைக்கும் என்று , அவரே நினைத்திருக்க மாட்டார். ஆனால் ஏதோவிதத்தில் அவருக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வாய்ப்பைச் மிகச் சரியாகப் பயன் படுத்திக் கொண்ட அந்த உயர்ந்த இளைஞன் மிக வேகமாக ஓடி வந்து பந்து வீசுகின்றான்.

ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா ,இங்கிலாந்து. மே.இந்திய தீவுகள் போன்ற கிரிக்கெட் அணிகளே கால காலமாக வேகப்பந்து வீச்சில் சிறந்து விளங்குகின்றன. இந்த அணிகளின் வேகப்பந்து வீச்சாளர்களில் பொதுவான ஒற்றுமை ஒன்று உண்டு. அவர்களில் பெரும்பாலானோர் உயரமானவர்கள். ஆனால் இந்திய, இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஒப்பீட்டளவில் உயரம் குறைந்தவர்கள் ..ஆனால் இஷாந்த் உயரமாகக் காணப்பட்டார். வேகப் பந்து வீச்சாளர்கள் உயரமானவர்களாக இருப்பதன் அனுகூலம் என்னவென்றால், வேகமாக ஓடி வந்து அவர்கள் போடும் பந்து அவர்களின் உயரத்தைப் பொறுத்தே பிட்ச்சில் பட்டு உயரமாக எழும்பும். எனவே மிகவும் உயரமாகக் காணப் பட்ட இஷாந்தின் பந்து வீச்சு வேகப் பந்து வீச்சுக்கு சாதகமாகவும் நேர்மையாகவும் உருவாக்கப்படும் ஆஸ்திரேலிய மைதானங்களில் அவருக்கு மிகவும் கைகொடுத்தது.

வேகப்பந்து வீச்சை மிக லாவகமாக எதிர் கொள்ளும் ஆஸ்திரேலிய வீரர்கள் இஷாந்தின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திண்டாடினர். அதிலும், உலகின் கிரிக்கெட் வரலாற்றில் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான பொண்டிங் இஷாந்தின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறி ஆட்டமிழக்கத் தொடங்கினார்.

இஷாந்தின் பந்து வீச்சைப் பார்த்த ஆஸ்திரேலியாவின் முன்னை நாள் கிரிக்கெட் வீரர்கள் இஷாந்த் எதிர்காலத்தில் சர்வதேசக் கிரிக்கெட்டில் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என உறுதியுடன் தெரிவித்தார்கள்.

ஆனால் சமீப வருடங்களாக ஆஸ்திரேலியாவில் சோபித்த.. பொண்டிங்கையே திகைக்க வைத்த.... இஷாந்த்தால் இந்தியாவில் சோபிக்க முடியவில்லை. கண்டவர்கள் எல்லாம்அவரைக் கேலி செய்கிறார்கள்..இதற்கான காரணம் என்ன ?? இஷாந்த் அவ்வளவுதானா? அவரிடம் திறமையில்லையா ? அவரைக் கிண்டலும் கேலியும் பண்ணும் புத்திசாலிகள் எப்போதாவது அவரின் இந்த நிலைமை ஏன் எப்படி எதனால் ஏற்பட்டிருக்கலாம் என சிந்தித்து இருப்பீர்களா ?

உண்மையில் இஷாந்தின் இன்றைய நிலைக்குக் காரணம் இஷாந்த் அல்லர். பணத்தாசை பிடித்த இந்தியாவின் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையே (B.C.C.I) இப்படியான இளம் வீரர்களின் வீழ்ச்சிக்கு முழுப்பொறுப்பும்.

அதிக ரசிகர்களை இழுத்து அதன் மூலம் தொலைக்காட்சிகளிடம் கோடிக்கணக்கான டொலர்களைப் பெறுவதற்காக பி.சி.சி.ஐ. திட்டமிட்டு உருவாக்கும் சமாந்தர ஆடுகளத்தில் ஆடும்போது இஷாந்த் போன்ற வேகப் பந்து வீச்சாளர்களால் சோபிக்க முடியாது. அவர்கள் எவ்வளவு வேகமாகப் போட்டாலும்,பந்து தன் பாட்டுக்கு எந்த ஆட்டம் அசைவும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கும். அப்படிப்பட்ட பந்தை அடிப்பதென்பது எந்தத் துடுப்பாட்ட வீரனுக்கும் இலகுவானது.. எவராலும் முடியும்... ஆகவே இதில் குறை சொல்ல கண்டிக்கப்பட வேண்டியவர் யார் ? இஷாந்தா அல்லது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையா?



## எழுச்சிபெறும் ஆபிரிக்கா

ஸ்பெயின், ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, கொலம் பியா, பெல்ஜியம், உருகுவே சுவிஸ்சாலண்ட், நெதர் லாந்து, இத்தாலி, இங்கிலாந்து ஆகியநாடுகள் முறையே தற்போது முதல் 10 இடங்களை ஃபீபாகால் பந்து தரப்படுத்தலில் பிடித்திருக்கின்றன. ஆண் டாண்டு காலமாக ஐரோப்பியமற்றும் தென் அமெரிக்க நாடுகளே கால்பந்து தரவரிசையில் ஆட்சி செலுத்தி வருகின்றன. ஆனால்,அண்மையில் நடந்து முடிந்த 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கால்பந்துதொடரில் நைஜீரிய அணி சம்பியனாகி ஆபிரிக்காக் கண்டத்துக்கு ஒளிமயமான தொரு எதிர் காலத்தை ஆரம் பித்திருக்கின்றது.

ஐக்கியஅரபுஎமிரேட்சில் இடம்பெற்ற இத்தொடரின் இறுதிப்போட்டியில் நைஜீரியா,மெக்சிகோஅணிகள் மோதின. இதன் முதல் பாதிமுடிவில்,ஒருகோல் அடித்து நைஜீரியா அணி முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் நைஜீரியாஅணி இரண்டு கோல்களை அடித்தது. முடிவில் நைஜீரியாஅணி 3-0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்று,கிண்ணத்தைவென்றது. இதன் மூலம்,நைஜீரியாஅணி (1985,93, 2007, 13) நான்காவது முறையாகச்சம்பியன் பட்டத்தைத் தட்டிச் சென்றது. மூன்றாவது இடத்திற்கானபோட்டியில் சுவீடன் அணி 4-1 எனஆர்ஜென்டீனாவை வீழ்த்தியது.

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(15.10.2013 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஓவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஓவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஓவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சீ
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14 கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றிலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
33. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

*இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477120, 2477129, 2398539 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk







**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

சுறுசுறுப்பாக பணிபுரிந்து, வாழ்வில் முன்னேறும், மேஷ ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு பாக்ய ஸ்தானத்தில் உள்ள சுக்கிரன் மற்றும் தினகதி சுழற்சி கிரகமான சந்திரன் நற்பலன் தருகின்றனர். குடும்ப நலனில் கூடுதல் அக்கறை கொள்வதால், மனதில் நிம்மதி உருவாகும். பணச் செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள். இல்லறத்துணை குடும்ப சூழ்நிலை உணர்ந்து, ஒற்றுமை குணத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். குடும்ப பெண்கள், பணிகளில் நிதானம் பின்பற்றுவர்.



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

இனிய வார்த்தை பேசி நற்பெயர் பெறுகின்ற, ரிஷப ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், கேது, சூரியன் தவிர மற்ற கிரகங்கள் அத்தனையும் அளப்பரிய நற்பலன் வழங்குகின்றனர். பணவரவு அதிக அளவில் பெறுவதற்கான, புதிய வழிவகை உருவாகும். பூர்வ சொத்தில் கிடைக்கிற பண வருமானம் கூடும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் குடும்ப நலன் பேணுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர், நிர்வாகத்திடம் நற்பெயர் பெற அனுகூலம் உண்டு.



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

தன் தகுதி உணர்ந்து செயலில் ஈடுபடுகின்ற, மிதுன ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், சூரியன், கேது நற்பலன் தருகின்றனர். இஷ்ட தெய்வ அருள் பலத்துடன், முருகப் பெருமானின் பரிபூரண அருள், நற்செயல்கள் இனிதாக நிறைவேற துணை நிற்கும். எதிரியால் வரும் சிரமங்களை, சமயோசிதமாக சரி செய்வீர்கள். சமூகத்தில் கூடுதல் அந்தஸ்து கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் சில மாற்றங்களை பின்பற்றி உற்பத்தி, விற்பனையில் சராசரி இலக்கை அடைவீர்கள்.



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

அடுத்தவரின் நற்குணத்தை, தயக்கமின்றி பாராட்டுகின்ற, கடக ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு நவகிரகங்களில் புதன், சந்திரன் மட்டுமே நற்பலன் வழங்குகின்றனர். எதிரியினால் சிரமம் அணுகாமல் இருக்க மவுனமாக விலகுவது நல்லது. இல்லறத்துணை மனதில், உங்கள் மீதான நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். பணியாளர்கள், குறைபாடு வராத அளவில், ஒருமுகத் தன்மையுடன் பணியில் ஈடுபட வேண்டும். பெண்கள், சேமிப்பு பணத்தை சிறு செலவுகளுக்கு பயன்படுத்துவர்.



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

காலத்தை பொன் போல கருதி செயல்படும், சிம்ம ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், சூரியன், புதன், கேது அனுகூலக் குறைவான இடங்களில் உள்ளனர். இதனால், வாழ்வில் முன்னர் பெற்ற நற்பெயர் மற்றும் பணவரவைக் கொண்டு, மனதில் உத்வேகமுடன் செயல்படுவீர்கள். தொழிலில் அபிவிருத்திப் பணி மேற்கொள்ள தேவையான நிதியுதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகைப் பயன் பெற அனுகூலம் உண்டு. குடும்ப பெண்கள், தெய்வீக வழிபாடு நடத்துவதில் ஆர்வம் கொள்வர்.



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

குடும்ப பெருமை காப்பதில் அக்கறை மிகுந்த, கன்னி ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சூரியன், சுக்கிரன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். வாழ்வில் முன்னர் செய்த நற்செயல்களின் பலன், இப்போது கிடைத்து, மனதில் ஆறுதல் தரும். உறவினர் புதிய சொந்தங்களை அறிமுகப்படுத்துவர். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணம், செயலை பாராட்டுவார். தொழிலில் வளர்ச்சி பெற, சிலரது உதவியை நாடுவீர்கள். குடும்ப பெண்கள், உறவினர்களை நன்கு உபசரித்து நற்பெயரை பாதுகாத்திடுவர்.



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

நல்லவர்களின் வழிகாட்டுதலை, ஏற்று நடக்கும், துலாம் ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு, சுக்கிரன், குரு, சந்திரன், செவ்வாய் நற்பலன் வழங்குகிற வகையில் உள்ளனர். பூர்வ சொத்தில் பெறுகிற பணவருமானம் அதிகரிக்கும். இல்லறைத் துணை, உங்களின் முயற்சி நிறைவேற உதவுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை திருப்திகர அளவில், முன்னேற்றம் பெறும். பணியாளர்கள், கூடுதல் வேலை வாய்ப்பை பயன்படுத்துவதால், உபரி பணவரவு கிடைக்கும். பெண்கள்,



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நேர்மை வழியில் வாழ்ந்து, கூடுதல் நற்பலன் பெறுகிற, விருச்சிக ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சுக்கிரன், கேது, சந்திரன் மட்டுமே நற்பலன் தருகின்றனர். வழக்கு விவகாரத்தில், உரிய தீர்வு பெறுவதில் தாமதம் இருக்கும். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் வருகிற இடையூறினை, தாமதமின்றி சரி செய்ய வேண்டும். பணியாளர்கள், சலுகைப் பயன்பெற கூடுதல் முயற்சி உதவும். குடும்ப பெண்கள், கணவருக்கு நல்ல ஆலோசனை வழங்குவர்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

ஒருமுகத்தன்மையுடன், பணிகளில் ஈடுபடும், தனுசு ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு குரு, சனி, ராகு, புதன், சந்திரன், சுக்கிரன் அளப்பரிய நற்பலன் வழங்குகின்றனர். வாழ்வியல் நடைமுறை சிறந்து, உறவினர், நண்பர்களிடம் கூடுதல் அந்தஸ்தை பெற்றுத் தரும். மனதில் வடிவமைத்த திட்டங்களை செயல்படுத்தி, நன்மை அடைவீர்கள். தம்பி, தங்கையின், மங்கல நிகழ்ச்சியை நடத்த அனுகூலம் உண்டாகும். புதிய வாகனம் வாங்க, தாராள பணவசதி துணை நிற்கும்.



**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

பிறரது துன்பம் விலக, இயன்ற அளவில் உதவும், மகர ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு சூரியன், புதன், சுக்கிரன் நற்பலன் வழங்குகின்றனர். இல்லறத் துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் உருவாகிற மாறுபட்ட சூழ்நிலையை, மாற்று உபாயத்தினால் சரிசெய்வது அவசியம். பணியாளர்கள், பணி இலக்கு நிறைவேற்றுவதில், கால அவகாசம் தேவைப்படும். பெண்கள், தாய்வீட்டு சீர்முறை பெற அனுகூலம் உண்டு. மாணவர்கள், உடல்நல ஆரோக்கியம் சரிவர பாதுகாப்பதால் மட்டுமே, படிப்பில் ஆர்வமும், அதனால், முன்னேற்றமும் ஏற்படும்.



**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

பணவரவுக்கு ஏற்ப, செலவுகளை மேற்கொள்ளும், கும்ப ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு குரு, சூரியன், சுக்கிரன், சந்திரன், கேது நற்பலன் வழங்குகின்றனர். புதிய முயற்சிகளை நிறைவேற்றி, அதிக அளவில் நன்மை பெறுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறைத் துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபிவிருத்திபணி நிறைவேறும். உத்தியோகஸ்தர், சிறப்பாக செயல்பட்டு நிர்வாகத்திடம் பாராட்டு, வெகுமதி பெறுவர்.




**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தகுதிக்கு மீறிய செயல்களை தவிர்த்திடும், மீன ராசிக்காரர்களே!

இந்த வாரம், உங்கள் ராசிக்கு செவ்வாய், புதன், சந்திரன் நற்பலன் வழங்குகின்றனர். எளிதான பணியும் நிறைவேறுவதற்கு, கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். புத்திரர் பொறுமை குணம் பின்பற்றி, உங்கள் மனதில் நம்பிக்கையை உருவாக்குவார். இல்லறத் துணை கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால், குடும்ப ஒற்றுமை சிறப்பு பெறும். தொழிலில், அளவான மூலதனம் கடின உழைப்பு என்ற குறிக்கோளுடன் செயல்படுவீர்கள். அரசியல்வாதிகள், சமரசபேச்சு வார்த்தைகளை, சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து துவங்கவும். பெண்கள், கணவரின் சம்மதமின்றி, பணம், கடன் கொடுக்க, வாங்கக் கூடாது. மாணவர்கள், நண்பர்களின் நல் அன்பை பெறுவர்.

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!**

**நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

## கிரிஷ்ஷும் விஜயும்



'க்ரிஷ் 3' படத்தினை அண்மையில் பார்த்து ரசித்துள்ளார் நடிகர் விஜய். படத்தில் ஹிருத்திக் ரோஷன் உழைப்பை வெகுவாக பாராட்டியுள்ளாராம் விஜய். ஹிருத்திக் ரோஷன், ப்ரியங்கா சோப்ரா, விவேக் ஒப்ராய், கங்கனா ராவத் நடிப்பில் ராகேஷ் ரோஷன் தயாரித்து, இயக்கிய படம் 'க்ரிஷ் 3'.இப்படம் வெளியாகி இந்தியா முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. 200 கோடிக்கு மேல் வசூல், மொபைல் கேம் பதிவிறக்கத்தில் முதல் இடம் எனப் பல்வேறு சாதனைகளை இப்படம் பெற்றிருக்கிறது.
படத்தினை விளம்பரம் செய்யும் விதத்தில், சென்னை வந்திருந்தார் ஹிருத்திக் ரோஷன். அவ்விழாவில் விஜய்யின் செய்தித் தொடர்பாளர் கலந்து கொண்டு பேசுகையில்,
'க்ரிஷ் 3' படத்தினை விஜய் தனது குடும்பத்தினருடன் கண்டு ரசித்தார். மேலும் ஹிருத்திக் ரோஷனின் கடுமையான உழைப்பைப் பார்த்து மிகவும் வியந்து விட்டார். இதுபோன்ற ஒரு இந்திய சாகசப் படத்தினைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது எனவும் கூறியுள்ளார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஹிருத்திக் ரோஷனை நேரில் பாராட்ட வேண்டும் என்று நினைத்தார். ஆனால் தொடர்ச்சியாக 'ஜில்லா' படப்பிடிப்பு நடைபெற்று வருவதால் அவரால் கலந்து கொள்ள இயலவில்லை'' என்று தெரிவித் துள்ளார்.

## வந்தார் அபிராமி



'விருமாண்டி' உட்பட பல படங்களில் நாயகியாக நடித்தவர் அபிராமி. உச்சத்தில் இருக்கும்போதே திடீரென சினிமாவை விட்டு விலகி அமெரிக்கா சென்று விட்டார். இங்குள்ள ஒரு பிரபல இயக்குநரை இரகசியத் திருமணம் செய்துவிட்டார் என்று கூறப்பட்டது.
அபிராமி இப்போது மீண்டும் இந்தியா திரும்பி இருக்கிறார். புதுயுகம் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். இப்போது தான் அமெரிக்கா சென்றது ஏன் என்பது பற்றி விளக்கம் அளித்திருக்கிறார்.
அவர் கூறியிருப்பதாவது,
என் உறவினர்கள் நிறையப்பேர் அமெரிக்காவில் தான். எனக்கும் நிறையப் படிக்க வேண்டுமென்று ஆசை அது இங்கிருந்தால் முடியாது. அதனால் அமெரிக்க பல்கலைக்கழக புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பித்தேன். விஸா கிடைத்ததும் நடிகர் கமலிடம் சென்று, அமெரிக்காவில் படிக்கபோகிறேன் என்று சொன்னேன். ஆனால் அவர் உனக்கு சினிம நல்ல இடம் இருக்கிறது. அதனால் இங்கேயே இரு சொன்னார். நான் அவர் பேச்சை கேட்கவில்லை. சொல்லாமல் ஒருநாள் அமெரிக்காவுக்கு சென்று, நிறைய உழைத்து,மு வந்துவிட்டேன்.
படித்து முடிந்ததும் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். கை நிற சம்பளம், ஜாலியான வேலை. மொத்த அமெரிக்காவில முக்கால்வாசி இடங்கழு போயிட்டேன். இடையில் என்னை பற்றி வந்த வதந்திகள் தெரியும். அதைப் பற்றியெல் கவலைப்படவில்லை. இந்த நிமிஷம் வரைக்கும் சந்தோஷமாக இருக்கிறேன் இவ் அபிராமி கூறியுள்ளார்.

## காதலிக்க ஆசை



காதல் திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன் என்கிறார் அனுஷ்கா.
பி.வி.பி சினிமாஸ் தயாரிப்பில் செல்வராகவன் இயக்கும் திரைப்படம் 'இரண்டாம் உலகம்'.
இதில் ஆர்யா, அனுஷ்கா இரு வேடங்களில் நடிக்கின்றனர்.
22ஆம் திகதி வெளியாக உள்ள இந்தப் படத்துக்கான விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் கலந்துகொண்டு பேசிய அனுஷ்கா,
இந்தப் படத்தின் கதை வித்தியாசமாக இருக்கும். இதில் என் கதாபாத்திரம் சவாலானது, கடினமாக உழைத்திருக்கிறோம். ஆர்யாவுடனான எனது பொருத்தம் பற்றி எல்லாம் கேட்கத் தேவையில்லை, ஏனெனில் கதாபாத்திரத்திற்கு ஏற்ப நடித்துள்ளோம். மேலும் என் திருமணம் பற்றிப் கேள்விகள் வந்து கொண்டே இருக்கின்றன, ஆனால் இப்போது அதுபற்றி யோசிக்கவில்லை. நிச்சயமாக காதல் திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன் எனவும் கூறியுள்ளார்.
அதேபோல், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆர்யாவும், நயன்தாரா தான் எனக்கு சரியான ஜோடி என்று தன் பங்குக்கு வார்த்தைகளை தூவி விட்டுள்ளார்.

## "மதகஜராஜா"வும் மகத்தான வெற்றிபெறும்



விஷால், லட்சுமிமேனன், பாரதிராஜா நடித்த படம் 'பாண்டிய நாடு' தீபாவ வெளியான மூன்று படங்களிலும் நல்ல படம் என்ற பெயரை இந்தப்படம் வாங்கியது படத்துக்கு நல்ல வரவேற்பு இருப்பதால் நல்ல வசூலை அள்ளுகிறது.'பட்டத்து ய தந்த சறுக்கலை 'பாண்டிய நாடு' மூலம் சமாளித்து விட்டார் விஷால். அதற்கா 'பாண்டிய நாடு' படத்தை வெற்றிப்படமாக ஆக்கியதற்கு தெரிவித்துக்கொண்டிருக்கிறார் விஷால். திருவண்ணாமலை, பாண்டிச்சேரி, வே காஞ்சிபுரம், சிதம்பரம் என்று தமிழகம் முழுக்கச் சென்று ரசிகர்களை சந்தித்துக் கொ இருக்கிறார்.
''என் சினிமா வாழ்க்கையில் 'பாண்டிய நாடு' முக்கியமான படம். இய சுசீந்திரனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். 'மத கஜ ராஜா' படமும் போல வெற்றி பெறும். டிசெம்பர் அல்லது ஜனவரியில் படத்தை வெளியிட முயற் எடுப்பேன்'' என்கிறார் விஷால்.



வர் உனக்கு சினிமாவில்
நான் அவர் பேச்சையும்
றைய உழைத்து,முடித்து

ர்ந்தேன். கை நிறையச்
ல்வாசி இடங்களுக்கு
அதைப் பற்றியெல்லாம்
இருக்கிறேன் இவ்வாறு

பெறும்



நாடு' தீபாவளிக்கு
டம் வாங்கியது.
து.'பட்டத்து யானை'
ஷால். அதற்காகவே,
கியதற்கு நன்றி
ண்டிச்சேரி, வேலூர்,
சந்தித்துக் கொண்டே

படம். இயக்குநர்
ராஜா' படமும் இதே
வளியிட முயற்சிகள்

கேரளத்துக் கிளி லட்சுமி மேனன் தான் இப்போதைய கோடம்பாக்கத்தின் வெற்றி நாயகி. 'சுந்தரபாண்டியன்', 'கும்கி', 'குட்டிப்புலி', 'பாண்டியா நாடு' என்று லட்சுமி மேனன் நடித்த நான்கு படங்களுமே வசூலைக் குவித்துள்ளன.

இப்போது விமலுடன் 'மஞ்சப்பை', கௌதம் கார்த்திக்குடன் 'சிப்பாய்', சித்தார்த்துடன் 'ஜிகர்தண்டா' படங்களில் நடித்து வருகிறார் லட்சுமி மேனன்.

திரு இயக்கும் 'நான் சிகப்பு மனிதன்' படத்தில் லட்சுமிமேனனை நாயகியாக ஒப்பந்தம் செய்திருக்கிறார் விஷால்.'பாண்டிய நாடு' படம் வெற்றிபெற முன்பே, லட்சுமி மேனனுக்குக் கிடைத்த வாய்ப்பு இது.

இதனால் லட்சுமிமேனன் உற்சாகத்தில் இருக்கிறார். அம்மணியின் மகிழ்ச்சிக்கு இன்னொரு காரணமும் இருக்கிறது.

விஷால், லட்சுமிமேனன் சம்பளத்தைக் கணிசமாக உயர்த்தி இருக்கிறாராம். தற்போது நாற்பது லட்சம் சம்பளம் வாங்குகிறாராம் லட்சுமி மேனன்.



## உயர்ந்தது சம்பளம்

''உள்ளத்தை அள்ளித்தா'' படத்தின் மீளுருவாக்கத்தில் நடிக்கவிருக்கிறார் கௌதம் கார்த்திக்.

தமிழ்ச் சினிமாவின் என்றும் இளமை துள்ளும் நகைச்சுவைப்படம் தான் ''உள்ளத்தை அள்ளித்தா''

கார்த்திக், கவுண்டமணி, ரம்பா நடித்திருந்த இந்தப்படத்தை சுந்தர்.சி இயக்கியிருந்தார்.

படத்தின் ஆரம்பத்திலிருந்து காட்சிக்கு காட்சி ரசிகர்களின் வயிற்றைப் பதம் பார்த்த இந்தப்படத்தை தற்போது மீளுருவாக்கம் செய்யப்போவதாக ஒரு செய்தி வெளியாகி உள்ளது.

படத்தில் நாயகனாக நடிப்பது கார்த்திக்கின் மகன் கௌதம் கார்த்திகேதான். இதற்கான முறையான அறிவிப்பு விரைவில் வெளிவர இருக்கிறது.

தந்தை நடித்த படத்தின் மீள்பதிப்பில் மகன் நடிப்பது தமிழ்ச் சினிமாவில் இது இரண்டாவது முறை.

ஏற்கனவே தியாகராஜன் நடித்த ''மலையூர் மம்பட்டியான்'' படத்தின் மீள்பதிப்பில் அவரது மகன் பிரசாந்த் நடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளத்தை அள்ளும் கௌதம்



படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த போது விபத்தில் சிக்கியுள்ளார் நஸ்ரியா.

'காதலில் சொதப்புவது எப்படி' படப்புகழ் பாலாஜி மோகன் இயக்கத்தில் துல்கர் சல்மான், நஸ்ரியா ஜோடியாக நடிக்கும் படம் 'வாய் மூடி பேசவும்'.

## நஸ்ரியாவுக்கு காயம்

இப்படத்தின் படப்பிடிப்பு மூணாறு பகுதியில் நடந்து வந்தது. நஸ்ரியா சம்பந்தப்பட்ட காட்சிகளை இயக்குநர் பாலாஜி மோகன் படம்பிடித்து கொண்டிருந்தார்.

கதைப்படி நஸ்ரியா, மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்து திரும்புவது மாதிரியான காட்சியில் எதிர்பாராத விதமாக சறுக்கி விழுந்தார்.

சறுக்கி விழுந்ததில் அவருக்கு சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தம் கொட்டியதால் படக்குழுவினர் அவரை அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

## எதற்கும் தயார்

மலையாளப் படம் என்றால் குறைந்த சம்பளம் என்றாலும் ஒப்புக்கொள்கிறாராம் அமலாபால். காரணம் மண்வாசம். 'மோகன்லால், மம்முட்டி, திலீப் இவர்களுடன் நடிப்பதே பெரிய விஷயம். அவர்கள் படத்தை தியேட்டரில் பார்த்து விசில் அடித்து வளர்ந்தவள் நான்' என்று அமலாபால் காரணமும் சொல்கிறாராம்.

# விடைகொடுப்போம்

கிரிக்கெட்டின் கடவுள் என வணிக்கப்படும் சோ டொன் பரட்மன் விளையாடும் காலத்தில் வாழும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கவில்லையே என இளைய தலை முறைகிரிக்கெட் விரும்பிக்ள் ஏங்குவதுண்டு. சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அவர் நிகழ்த்திய சாதனைகள் அவ்விதம் காணப்படுகின்றன. ஆனால், வாழும் கிரிக்கெட் கடவுள் சச்சினின் காலத்தில் வாழ்ந்தமை - அப் போட்டிகளைக் கண்டு ரசித்தமை எங்கள் தலைமுறைக்கு பாக்கியமே! சச்சினின் ஆட்டத்தைத் தவறவிட்ட ஏக்கம் நிச்சயம் எதிர்வரும் சந்ததிக்கு உண்டு.



கடந்த 24 ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அவர் படைத்த சாதனைகள் ஏராளம். அதிக ஒருநாள் - டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். அதிக ஒருநாள் - டெஸ்ட் ஓட்டங்களைக் குவித்தவர். அதிகஒருநாள் - டெஸ்ட் சதங்களைக் குவித்தவர் எனச் சச்சின் துடுப்பாட்டத்தில் படைத்தசாதனைகள் எண்ணிலடங்காதவை. தேவைக்கேற்ப,தனது பந்து வீச்சுத்திறனையும் பிரயோகித்து இந்திய அணியை வெற்றிநோக்கி அழைத்துச் சென்றிருக்கின்றார்.

சச்சின், அவரது சாதனைகளுக்காகவும், அவரது நீண்டகால நிலைப்புக்கும்,கடின உழைப்புக்கும்,முக்கியமாக கிசுகிசுக்களில் சிக்காத தனிமனித ஒழுக்கத்துக்கும் நிச்சயம் போற்றிப் புகழப்படவேண்டியவர். இன்றைய தலைமுறையின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரர் என்ற மகுடம் இவரைத் தாண்டி இன்னொருவருக்குச் செல்ல முடியாது. ஆனால், ஓய்வு பெறும் ஒரு மேதையைப் புகழ்ந்து விடை கொடுக்க வேண்டும் என்பதற்காக சச்சினிடம் இல்லாதவிடயங்களையும் இருப்பதாகசில பொய்யுரைப்பதுசரியல்ல.


அணியின் வெற்றியைக்கூடக் கருதாது நடுவரின் தீப்புக்காகக் காத்திராமல் ஆட்டமிழப்பு எனத் தெரிந்ததும் ஆடுகளத்தை விட்டு வெளியேறும் கனவான் வீரர்கள் சில கிரிக்கெட் அரங்கில் இருந்திருக்கிறார்கள். அவுஸ்திரேலியாவின் அடம் கில்கிஷ்ஒஸ்ட், இலங்கையின் குமார் சங்கக்கார ஆகியோர் நாம் கண்ட உதாரணங்கள். ஆனால்,சச்சின் ஒருபோதும் அவ்வாறு நடந்ததில்லை. நடுவரின் தீர்ப்புக்காக பல தடவைகள் காத்திருந்திருக்கின்றார். ஆட்டமிழப்பின் பின்னும் ஆடுகளத்தில் நின்று ஆடியிருக்கிறார்.

இன்னொரு விடயம்,சச்சின் எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரணிவீர்களுடன் மோதியவரோ அல்லது அவர்களை அவதூறு பேசியவரோ இல்லை எனக் கூற முடியாது. ஆரம்பத்தில், பலவருடங்கள் அவர் எதிரணி வீரர்களுடனும் தர்க்கித்திருக்கின்றார். முன்னைய இந்தியப் போட்டிகளின் காணொலிகளைப் பார்த்தாலே அவை எமக்குப் புரியும். இருந்தும்,சச்சினிடம் காணப்படும் நிறைகளுக்கு மத்தியில் குறைகள் காணாமல் போய்விடுகின்றன. ஓய்வுபெறும் தருணத்தில் சச்சினின் சாதனைகளுக்கு கௌரவம் கொடுத்து விடைகொடுப்போம்.




தொலமியின் உலக வரைபடத்தில் இலங்கை

## பெரிதாக உள்ளது ஏன்?




உரோம தேசத்தவரான தொலமியினால் கி.பி. 150 ஆண்டுகளுக்கும் முன்னதாக வரையப்பட்ட உலகப் படத்தில் சரியான இடத்தில் 'தப்ரபேன்' என எங்கள் நாடு குறிக்கப்பட்டிருக்கிறது. எனினும், சிறிய வேறுபாடு ஒன்றுண்டு. நாடு குறிப்பிடத்தக்களவிற்கு பெருப்பிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அது உள்ளதிலும் பார்க்கப் பெரிதாகத் தெரிவதற்கு தொலமியின் கண்களில் ஏதும் மாஜாயாலம் இருந்திருக்குமா? அல்லது இச்சிறிய தீவு பட்டுப்பாதையின் மத்தியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு இடத்தில் அமைந்திருப்பதும் கிழக்கேயும் மேற்கேயும் இருந்துவரும் வர்த்தகர்களும் நாடுகளைக் கண்டுபிடிப்பவர்களும் சந்தித்துக்கொள்ளும் ஒரு மையமாகவும் அத்துடன் சர்வதேச வர்த்தக மையமொன்றாகவும் காணப்பட்டதனாலா, இதில் எது வெளியிலுள்ளவர்களுக்கு உண்மையான அளவிலும் பார்க்க இதனைப் பெரிதாக தோன்றச் செய்தது?

புதையல் தோண்டி எடுக்கப்பட்டு எதிர்காலத்திற்காக பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும் சரி, எமது செயற்றிட்டமென்னவெனில் இலங்கையின் பொருளாதார வரலாற்றின் கதையினை ஒரே கூரையின் கீழ் கொண்டுவருவதேயாகும்.

இலங்கை பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிச்சாலை

The Economic History Museum of Sri Lanka

(கட்டம் ஒன்று)

புராணவிலிருந்து ரூபாவிற்கு

நாணய பொருட்காட்சி

2013 நவெம்பர் 11ஆம் திகதி முதல்

சதாம் வீதியிலுள்ள சென்றல் பொயின்ட் கட்டடத்தில்

பொதுமக்களுக்காக திறந்து வைக்கப்படும்.

திறந்து வைக்கப்படும் நேரம் நாளாந்தம் மு.ப. 9.00 - பி.ப. 6.00

பள்ளிக்கூடங்களும் பெரிய குழுக்களும் வருவதற்கு முன்னரே பதிவுசெய்து கொள்ளமுடியும்

தொலைபேசி: 2477426, 2477421, 2477132, 2477257

தொலைநகல்: 1123463904






# நகரத் திட்டமிடலில் ஜேன்ஜேக்கப்



திட்டமிடல் என்பது இன்று எல்லா விதமான துறைகளையும் உள்ளடக்கிய பல்துறைசார் அணுகுமுறையாகக் காணப்படுகின்றது. திட்டமிடல் என்பது இன்று ஒரு முக்கியத்துவம் சார்ந்த துறையாக மாற்றம் பெறுவதற்கும் அதனுடைய உட்கூறுகள் விரிவடைவதற்கும் சில அறிஞர்கள் ஆய்வாளர்கள் பங்களித்திருக்கிறார்கள். அவர்களில் மிகவும் முக்கியமானவர் ஜேன் ஜேக்கப்.

பென்சில்வேனியாவில் 1916ஆம் ஆண்டு மே மாதம் 04ஆம் திகதி பிறந்த இவரின் ஆரம்பத்துறை ஊடகவியல் ஆகும். அமெரிக்காவின் பிரபலமான ஊடகவியலாளர்களில் ஒருவராக இருந்த இவர் பல்வேறு செய்திகளையும் அரசியல் நிலைமைகளையும் அபிவிருத்திசார் கட்டமைப்புப் பிரச்சினைகள், உட்கட்டமைப்பு வசதிகளின் பிரச்சினைகள் என்பவற்றை ஒரு ஊடகவியலாளராக இருந்து நன்கு கற்றுக் கொண்டதால் நகரம் சார் அபிவிருத்திப் பிரச்சினைகள் அனுபவரீதியாக உணர்ந்திருந்தார்.

இதன் பின்னணியில் அமெரிக்க நகரங்களின் வாழ்வும் சாவும் (The death and life of great American cities.) என்ற புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டார். அப்புத்தகம் வெளியான பின்பு நகர அபிவிருத்தியில் பாரிய மாற்றம் உணரப்பட்டது. சமூகமூலதனம் (Social capital) என்ற சொல்லின் அறிமுகம் இதன் போதே ஏற்பட்டது.

அடிமட்ட மக்களின் வாழக்கைத் தரத்தினை உயர்த்துதல் மற்றும் நகர சேரிக் குடியிருப்பு சார்ந்த பிரச்சினைகளையும் இவர் அனுபவரீதியாகப் பெற்ற அறிவினூடாக அணுகியிருந்தார்.

திட்டமிடல் துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த புத்தகமாக இது காணப் படுவதனாலும் அவருடைய சிந்தனைகள் திட்டமிடலில் சிறப்பாகக் காணப்பட்டதாலும் திட்டமிடல் துறையில் இவரின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. பெண்கள் சாதிக்கத் தடைகள் காணப்பட்டாலும் தடைகளைத்தாண்டி சாதித்தவர்கள் காலம் தாண்டியும் பேசப்படுவார்கள். ஜேன் ஜேக்கப் நகர அபிவிருத்தித்துறையில் பெண்களின் குறியீடு.

---

## புதுயுகத்தைத் தேடி......

### மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# சமூகசேவைக்குழுக்களில் பெண்களின் பங்களிப்பு

சமுகத்தில் பிரச்சினைகளும் சிக்கல்களும் இன்னல்களும் இடர்பாடுகளும் மிகுந்திருக்கின்ற இக்காலத்தில் சமூக சேவைக்குழுக்களின் தேவையும் அதிகரித்தே காணப்படுகின்றது. அதற்கேற்றாற் போல பல்வேறு சமூகசேவைக் குழுக்களின் தோற்றமும் சேவை வழங்கலும் காணப்படுகின்றது. இவ்வாறான பல்வேறு சமூகசேவைக்குழுக்களில் ஆண்களின் பங்களிப்பினையே அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் குறைவான அளவிலேயே பெண்களின் பங்களிப்பினைக் காணமுடியும். இவ்வாறான நிலையின் காரணம் என்ன...?

பெண்களிற்கு சமூக சேவைச் செயற்பாடுகளில் ஆர்வம் குறைவாகக் காணப்படுகின்றதா அல்லது அவர்களின் மனச் சிந்தனைகள் இத்தகைய சமூகச்செயற்பாடுகள் தவறானவை என்ற கற்பிதத்தைக் கொண்டிருக்கின்றதா... அதுவும் இல்லையெனில் அவர்களினைச் சூழவுள்ள சமூகக்கட்டமைப்புக்கள் அவர்களின் பங்களிப்பினில் தாக்கம் செலுத்துகின்றதா என்ற பல்வேறு வினாக்கள் எழலாம்.

உண்மையில் எங்களுடைய சமூகத்தில் சமூகசேவைக்குழுக்களில் இணைந்துள்ள பெண்களினைப் பற்றி பெரும்பாலும் தவறான முற்போக்கான சிந்தனை காணப்படவே செய்கின்றது. ஒரு பெண் சமூகசேவைச் செயற்பாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் அவளுடைய தந்தையோ , சகோதரனோ அல்லது கணவனோ அதில் ஆதிக்கம் செலுத்தவே செய்கின்றனர். அவர்களிற்குக் கட்டுப்பட்டு அனேக பெண்கள் தங்களினுடைய விருப்பத்தினை இடைநடுவில் கைவிட்டுவிடுகின்றனர். அதையும் மீறி தொடர்கின்ற பெண்கள் அவர்களின் வார்த்தைத் தாக்குதல்களிற்கு உட்பட்டு வீட்டில் நிம்மதியையும் இழந்துவிடுகிறார்கள்.

மற்றவர்களிற்கும் நல்லது நினைத்து அவர்களையும் மனிதராக மாற்ற முயற்சிக்கின்ற சமூகசேவைக்குழுக்களின் செயற்பாடுகள் சமூகவளர்ச்சிக்கு மிகவும் தேவையானது. அதில் பெண்களின் பங்களிப்பினை தடைப்படுத்துகின்ற செயற்பாடுகளை எங்களது சமூகம் எப்போது நிறுத்தும்...? நினைவு நல்லது வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும் என்ற வரிகளை எப்போது எம் சமூகம் நியத்தில் உறுதிப்படுத்தும்..?

---



# குழந்தைகளையும் கேளுங்கள்

இப்போதெல்லாம் வீடுகளில் குழந்தைகளை அதிக பெற்றோர்கள் எதற்கெடுத்தாலும் திட்டுவதை காணக்கூடியதாகவே இருக்கின்றது. பெற்றோர்கள் குழ்ந்தைகளைச் சினப்பதும் குழந்தைகள் பெற்றோரை வெறுப்பதும் இப்போது சகஜமாகி விட்டது. பெருசுகள் மாதிரி ஆளையும் கதையையும் பார். பெரியாக்கள் கதைக்கிற போது அதில மூக்க நுழைக்கக்கூடாது என்று எத்தின தடவ சொல்லியிருக்கிறன். எங்களுடைய அதிக தாய்மார்களின் வாயிலிருந்து வருகின்ற வார்த்தைகள் இவைதான். நிச்சயமாக அது நல்ல பழக்கமே. ஆயினும் சில விடயங்களில் குழந்தைகளிற்கும் சுதந்திரம் கொடுக்க வேண்டிய விடயங்களில் கூட நாங்கள் இப்படியே நடந்துவிடுகின்றோம்.

குடும்பம் ஒன்றின் மகிழ்ச்சிக்கு குழந்தைகளின் மனநிலை மிகவும் முக்கியமான விடயமாகும். அதனால் குழந்தைகளை சந்தோசமாக வைத்திருக்கின்ற பொறுப்பும் எங்களிடமே இருக்கின்றது. சில சில தேவையான விடயங்களில் குழந்தைகளினுடைய பேச்சையும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போது பெற்றோர்கள் தம்மில் எத்தகைய அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பது குழந்தைகளிற்குப் புரியும்.

உதாரணமாக விடுமுறை நாட்களில் ஒரு சுற்றுலா செல்ல நீங்கள் தீரமானிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். தனியே நீங்களாகவே முடிவெடுத்து ஒரு இடத்திற்கு குழந்தைகளைக் கூட்டிச்செல்வதனை விட குழந்தைகளிடமும் கேட்டு அவர்களிற்குப் பிடித்தமான இடம் எது..? எப்போது போகலாம் என்ற தகவல்களையும் கேட்டுவைத்துக்கொண்டு அதற்கேற்ப முடிவெடுக்கலாம். சிலவேளைகளில் நீங்களாக தீர்மானிக்கின்ற இடம் குழந்தைகளிற்குப் பிடிக்காமல்கூடப் போகலாம்.

எனவே குழந்தைகளையும் கலந்தாலோ சித்தால் விடுமுறைக் கொண்டாட்டம் சிறப்பாக இருக்கும்.

ஆதனால்தான் பொருத்தமான விடயங்களிற்கு குழந்தைகளுடனும் கலந்தோலோசிப்பதையும் அவர்களுடைய சொற்களையும் கவனத்திற்கொண்டால்



அவர்களின் அன்பு அதிகமாவதுடன் உங்கள் குடும்பத்தின் சந்தோசமும் முன்னையதைவிட இரட்டிப்பாவதோடு அவர்களின் எதிர்காலமும் வளமாக அமையும்.

# மரணத்தைக் கண்ட ஊடகவியலாளர்கள்

உண்மைச்சம்பவம் ஜெகன்

**மனிதநேயப் பணியாற்றும் சர்வதேச நிறுவனமொன்றின் அதிகாரியும், ஊடக வியலாளருமான மேரிகுயின் என்ற பெண்மணி 1998 ஆம் ஆண்டில் இஸ்லாமியத் தீவிர வாதிகளால் யேமன் நாட்டில் வைத்துப் பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்டு மரணத்தின் விளிம்பு வரை சென்று உயிர் தப்பிய திகில் அனுபவங்கள்.**

கடந்த ஒரு வருடமாக என்னிடம் ஒப்படைக்கப்பட்ட மூன்று மனிதநேயத்திட்டப்பணிகளை அவ்வப் பகுதிகளில் திருப்திகரமாகப் பூர்த்தி செய்துவிட்டேன். மனநிறைவு ஏற்பட்ட போதிலும், எனது உடலும், உள்ளமும் உடற்சோர்வினாலும், மன அழுத்தங்களினாலும் மிகவும் சலிப்படைந்திருந்தன. இந்த நிலையில் மன அமைதியும், ஓய்வும் எனக்கு இன்றியமையாதவையாகத் தோன்றின. எனது உறவினர்கள் அனைவரும், எனது இடத்திலிருந்து வெகு தொலைவிலுள்ள நியூஸிலாந்தில் வாழ்கின்றனர்.

எனது வீடோ அமெரிக்காவின் தலைநகரான நியூயோர்க்கிற்குச் சற்றுத் தள்ளி வடக்கில் அமைந் துள்ளது. அடுத்து வந்த கிறிஸ்மஸ் விடுமுறையைத் தனியே எனது இல்லத்தில் கழிக்க விரும்பாது ஓரளவு வெப்பம் நிலவக்கூடிய ,விரைவாகச் சென்று திரும்பக் கூடிய அத்துடன் ஓரளவேனும் தொலைத்தொடர்பு வசதிகள் உள்ள இடத்தையே எனது பயணத்திற்காகச் தெரிவு செய்ய எண்ணினேன்.

இத்தகைய எனது விருப்புக்களை உள்ளடக்கிய பயணத்துக்குரிய இடமாக யேமன் தேசத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கான விசாவுக்கும் விண்ணப்பித்தேன். வளர்முக நாடான யேமனின் பகுதிகளில் ஆங்காங்கே இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் பற்றி அறிந்திருந்தும் அப்பயணத்தை மேற்கொள்வது என்று முடிவெடுத்தேன்.

அப்பிரதேசங்களில் தீவிரவாதிகளால் உல்லாசப் பயணிகள் கடத்தப்படுவதும்,பின்னர் அவர்கள் பணயக்கைதிகளாக்கப்பட்டு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கங்களுடன் பேரம் பேசுவது அடிக்கடி நிகழ்வதைப் பத்திரிகைகள் வாயிலாக ஏலவே அறிந்திருந்தேன். ஆயினும் ஒருபோதும் பணயக்கைதிகளால் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றதில்லை.

எனக்கு விசா அனுமதி கிடைத்து பயணத்திற்கான பெட்டி, துணிமணிகளை ஆயத்தம் செய்கையில் 1998மார்கழி 17 ஆம் திகதி காலையில் ஈராக்கிய ஜனாதிபதி சதாம்ஹூசைன் ஐ.நாவின் ஆயுதப் பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்க மீண்டும் மறுப்புத் தெரிவித்திருந்தார். இதனால் அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து ஈராக்குக்கு எதிராக நான்கு நாட்கள் வான் தாக்குதல்களை மேற்கொண்டதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டேன்.

அக்கால கட்டத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் அமெரிக்காவுக்கெதிரான வன்முறைகள் வெளிப்படையாகவே மனதை அச்சுறுத்துபவையாக அமைந்திருந்தன.

யேமன் ஈராக்கிலிருந்து வெகுதொலைவில் அமைந்திருந்தது. நிலைமைகள் மோசமடைவது போலத் தென்பட்டாலும் நான் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். தைரியமாக என் வசமிருந்த நியூசிலாந்து மற்றும் அமெரிக்க நாடுகளின் இரண்டு கடவுச் சீட்டுக்களையும் எனது பையில் வைத்துக் கொண்டு பயணத்தை ஆரம்பித்தேன். இந்தக் கடவுச் சீட்டுக்களே பின்னர் என்னை உயிராபத்திலிருந்து விடுவிக்க உதவி புரியும் என்பதை நான் அப்போது அறிந்திருக்க வில்லை.

யேமனில் அப்போது கடுமையான வெப்பக் கால நிலை நிலவியது. கற்பாறைகளின் இடையிடையே மலை உச்சிகளில் மாளிகைகள், கோட்டை போன்று சுவர்களினால் சூழப்பட்ட பாலைவன நகரங்களில் ஆங்காங்கே களிமண்ணினால் உருவாக்கப்பட்ட கட்டடங்களும் , பரந்த பாலைவன வெளிகளில் நடமாடிக் கொண்டிருந்த ஒட்டகங்களும் மனதிற்குக் கிளர்ச்சியூட்டின.

நாங்கள் சென்ற வாகனத் தொடரணியில் யாவரும் இயற்கை அழகை இரசித்தவாறே பயணித்துக் கொண்டிருந்தோம்.

ஐந்து ரொயோட்டா லான்ட் குறூசர் வாகனங்களில் நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எமது பயணத்தில் மூன்றுஅமெரிக்கர்கள், இரண்டு ஆஸ்திரேலியர்கள், குழுத்தலைவர் மற்றும் உள்ளூர் சாரதிகளுடன் பிரிட்டிஷ்காரர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பதினெட்டு ஏனைய சுற்றுலாப் பயணிகளும் இருந்தனர்.

மார்கழி 28ஆம் திகதி , நாங்கள் அபியன்' மற்றும் சப்வா' மாகாணங்களின் பாலைவனப் பிரதேசங்களின் ஊடாக ஜேமனின் துறைமுக நகரான அப்பானை' அடைவதற்கான 320 கி.மீ தூரப் பயணத்தை ஆரம்பித்திருந்தோம்.

சமவெளி நிலங்களையும் , செங்குத்தான பள்ளத்தாக்குகளையும் ஓரிரு தடவைகள் இடையில் வாகனங்களை நிறுத்திப் படமெடுத்து விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம். நாங்கள் சென்ற பிரதான தரைவழிப் பாதையில் டிரக் வண்டிகளும் பழைய உருக்குலைந்து போன கனரக வாகனங்களும் பயணித்த வண்ணமிருந்தன. அப்போதுதான் விபரீதத்தின் முதற்புள்ளியை நாங்கள் சந்தித்தோம்.






எங்களில் எவரும் கனவிலும் எதிர்பாராத வகையில் திடீரென ஒரு வெள்ளை நிற பிக்அப்' வாகனம் எமது வாகனத் தொடரணியின் முதலாவது வாகனத்திற்கும் இரண்டாவது வாகனத்திற்கும் இடையில் குறுக்கே வந்து நின்றது. அதனுள் நிறைய ஆட்கள் இருந்தனர்.

திடீரென பிக்அப்' வாகனம் வெட்டித் திருப்பப்பட்டு பக்கவாட்டாகச் சென்று பாதையைத் தடை செய்தது.

பட்.பட்.பட்.பட்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் பாலைவனத்தின் நிசப்தமான அமைதியைக் குலைத்தன. அச்சமயத்தில், நான் நான்காவது குறூசர் வாகனத்தின் பின் இருக்கையில் வேறு மூன்று பெண்களுடன் அமர்ந்திருந்தேன். முன்னால் நின்றிருந்த வாகனத்தை ஆயுதபாணிகளான மூவர் சுற்றி வளைத்தனர். அதனைக் கண்ணுற்ற எமது வாகனச் சாரதியின் முகம் இறுக்கமடைந்தது. இடது கை கதவின் கைப்பிடியைப் பற்றிப் பிடித்த அதே வேளை சாரதியின் வலது கை ஆசனத்திற்கு அருகில் இருந்த அவனது றைபிளை நோக்கி நகர்ந்தது. எங்கள் உடல்களில் அச்சத்தின் அதிர்வலைகள் மின்சாரம் பாய்ந்தது போல் பிரமையை உண்டு பண்ணின.

ஒன்று மட்டும் தெட்டத் தெளிவாகப் புரிந்தது. நாங்கள் ஆயுதபாணிகளின் பதுங்கித் தாக்குதலுக்குள் அகப்பட்டு விட்டோம் என்பதே அது. அதுமட்டுமன்றி, எங்களைப் பணயக்கைதிகளாகக் கடத்திச் செல்லப் போகின்றார்கள் என்பதையும் உடனடியாக ஊகித்து விட்டோம். அந்நிலையிலும் எனது உள்ளுணர்வு தப்பிக்க முயற்சிக்கும் படி அறிவுறுத்தியது. ஆனால், நான் அமர்ந்திருந்த இருக்கையின் பக்கக் கதவு தாழிடப்பட்டிருந்தது. எனவே , திகைப்புடன் வாகனத்தில் இருந்தபடி பின்னுக்குத் திரும்பிப் பார்த்தேன். எமது வாகனத் தொடரணியில் பின்னால் வந்து கொண்டிருந்த கடைசி வாகனமும் அங்கு நின்று கொண்டிருந்தது.

மேலும் பல ஆயுதம் தரித்தவர்கள் எல்லாத் திசைகளிலும் இருந்து கத்தியபடியும், துப்பாக்கி வேட்டுக்களைஆகாயத்தை நோக்கித் தீர்த்தபடியும் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். நான் இயன்ற மட்டில் அவர்களின்எண்ணிக்கையைக் கணக்கிட்டேன். மொத்தமாகப் பதினெட்டுப் பேர். அவர்களில் ஒருவனைத் தவிர ஏனையோர் தமதுமுகங்களை சிவப்பும், வெள்ளையும் கலந்த முகமூடி போன்ற அமைப்புக் கொண்ட துணிகளால் மறைத்திருந்தனர்.

நேரம் முற்பகல் 11 மணி.பாலைவன வெயிலின் வெப்பம் முகத்தில் அனல் போலத்தெறித்தது. ஆயினும், அங்கு நடைபெறும் எதிர்பாராத நிகழ்வின் அதிர்ச்சியால் எமக்கு அது எதுவுமே பெரிதாகத் தோன்றவில்லை.

எமது ஐந்து லாண்ட்குறூசர் வாகனங்களில் முதலாவதாகச் சென்றுகொண்டிருந்த லாண்ட் குறூசர் இந்த விபரீதத்தில் அகப்படாது தப்பிச் சென்றுவிட்டதை அப்போது தான் நான் உணர்ந்தேன். அந்த வாகனத்தில் எமது பயணக் குழுவின் தலைவரும் , சாரதியும் மாத்திரமே இருந்தனர். குழுவின் தலைவர் ஒருவரால் மாத்திரமே ஆங்கிலமும் அரபுமொழியும் பேசமுடியும். அவர் இருந்தாலாவது உதவி கிட்டியிருக்கும் என்று கருதினேன்.

**(தொடரும்)**

ஔண்யன்

# இருளின் கதவைத் திறந்தவன்




இளங்கன்று பயமறியாது. வரப் போகும் விளைவுகளின் விபரீதத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் தமக்கு சரியென்று பட்டதைச் செய்வது இளயரத்தத்தின் வேலை. அதுவும் மக்களின் நலனுக்காக எதையும் செய்யத் துணிந்த பிராட்லே எனக்கு எது நேர்ந்தாலும் பரவாயில்லை. ஆனால் உண்மைகள் வெளிவந்தால் போதும்' என நினைத்தான். அதுவரையும் அப்பாவியாக இருந்தவன் புதிய அவதாரம் எடுத்தான். கிளர்ச்சிக் காரர்களைத் தேடுவதற்குப் பதிலாக ஈராக்கில் அமெரிக்கா செய்து வருகின்ற அக்கிரமங் களை மோப்பம் பிடிக்கத் தொடங்கினான். அந்த வெறியாட்டங்கள் தொடர்பான ஆதாரங்களைத் தனது பிரத்தியேகக் கணினியில் பதிவு செய்து, இரகசியமான இடமொன்றில் பதுக்கி வைத்தான்.

பூட்டி வைத்த இரகசியங்களை எப்படி உலகின் முன் திறப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. இந்தச்சந்தர்ப்பத்தில்தான் அவனுக்கு அமெரிக்காவில் உள்ள பாடசாலைக்கால நண்பன் ஒருவன் முக்கிய தகவல் ஒன்றைச் சொன்னான்.

இப்போது அமெரிக்காவில் எல்லோருக்கும் சுவாரசியமான இணையத்தளம் (விக்கிலீக்ஸ்) ஒன்று கிடைத்திருக்கிறது. மிகத் துணிச்சலாக -அரசுக்கு எதிராகக் கூட - தகவல்களைத் தக்க ஆதாரங்களோடு வெளியிடுகிறார்கள். அத்தோடு தங்களின் தகவலாளிகளின் விபரங்களையும் மிக இரகசியமாகப் பேணுவதோடு, தகவல்களை வழங்கவென ரீ.ஓ.ஆர்' என்ற விசேட மென்பொருளையும் பயன்படுத்துகிறார்கள் இதுவே நண்பன் சொன்ன செய்தி.

பிராட்லே இத்தகையதொரு ஊடகத்தின் வரவையே இதுநாள்வரையும் எதிர்பார்த்திருந்தான். நண்பன் சொன்ன மறுகணமே விக்கிலீக்ஸின் ஆதி முதல் இப்போதைய துகிலுரிப்புகள் வரை எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் பிராட்லே சேகரித்தான்.அந்த விபரங்களின் மூலம் விக்கிலீக்ஸே தான் மிகப்பாதுகாப்பாகப் பேணிவருகின்ற அமெரிக்காவின் கோர முகத்தைப் பிய்த்தெறியக் கூடிய பயங்கரமான ஆதாரங்களினை வெளியிடப்பொருத்தமான ஊடகம் என்ற முடிவுக்கு வந்தான்.

அடுத்த சிலமணித்தியாலங்களில் ரீ.ஓ.ஆர்' மென்பொருள் பிராட்லேயின் கணினிக்குள் பால் காய்ச்சி, குடிபுகுந்து கொண்டது. ஒருவித தயக்கத்தோடு அவனது அறைக்கதவு சாத்தி, தாழிடப்பட்டது. தன்னுடைய மிகநீண்ட நாளைய உழைப்பின் பயனாகச் சேகரித்து வைத்திருந்த ஆதாரங்களையெல்லாம் ஒன்றும் விடாமல் தரவேற்றினான். சுமக்கமுடியாத இரகசியங்களைச் சுமந்து நின்ற அந்த'பைல்கள்' சில நிமிடங்களில் விக்கிலீக்ஸின் பிரத்தியேக மின்னஞ்சலுக்குள் தஞ்சமடைந்தன. கூடவே தன்னைப் பற்றிய விபரங்கள் எதனையும் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளும் வண்ணம் ஒரு கடிதத்தையும் பிராட்லே இணைத்து அனுப்பியிருந்தான்.

வழக்கம் போல விக்கிலீக்ஸுக்கு வந்த நூற் றுக்கணக்கான மின்னஞ்சல்களைப் படித்துக் கொண்டிருந்த யூலியன், பிராட்லேயிடமிருந்து வந்திருந்த மின்னஞ்சலை முதலில் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதுவும் ஒரு அமெ ரிக்க இராணுவ உளவுப்பிரிவு அதிகாரியிட மிருந்து மின்னஞ்சல் வந்திருக்கிறதென்றால் அது நிச்சயம் விக்கிலீக்ஸை கிழிகிழியென்று கிழித்து எழுதப்பட்ட கடிதமாகவே இருக்குமென்பதே யூலியனின் எண்ணமாக இருந்தது. சரி,எதற்கும் ஒருமுறை படித்துத்தான் பார்ப்போமே' என்று பிராட்லேயின் மின்னஞ்சலைத் திறந்த யூலியனின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.


பிராட்லே அனுப்பியிருந்தது வசவுவார்த்தைகளால் பின்னப்பட்ட மொட்டைக்கடிதமல்ல. அது எண்ணிலடங்கா இரகசியங்களைக் கொண்ட ஒரு புதையல். விக்கிலீக்ஸுக்கு ஒரு அட்சய பாத்திரம் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் யூலியன் திக்குமுக்காடிப்போனான்.தன் மகிழ்வை வார்த்தைகள் வடிவில் பதில் மின்னஞ்சலாக பிராட்லேக்கு அனுப்பிவைத்தான். பிராட்லே - யூலியன் நட்பு துளிர்த்தது. முகம் பார்க்காத 'காதல் போல இது முகம் பார்க்காத நட்பு. இருவரும் தமக்கிடையே இணையவழி உரையாடல்களை நிகழ்த்தி எந்தெந்த இரகசியங்களை வெளியிடுவதென்று அட்டவணைப் படுத்தினர். அதில் முதலிடம் பிடித்ததுதான் சமகாலக் கொலைகள் என்ற வீடியோக் காட்சி. அது வெளிவந்த அதிர்வலைகள் அடங்க முன்னரே- தான் கொடுத்த மற்றைய இரகசியங்களை விக்கிலீக்ஸ் வெளியிட முன்னரே- எதிர்பாராதவகையில் பிராட்லே அமெரிக்காவின் சிறைப்பறவையாகச் சிக்கிக் 'கொண்டான். எப்படி நேர்ந்தது இந்தத் துன்பியல்?

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்!

## செல்லப்பா!! எழுதுவது.....

ஒருவரின் மரணவீட்டிற்குச் சென்றிருந்தேன்.



இறுதிக்கிரியைகள் நடைபெற்று அஞ்சலிக் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர் முதலாவதாகத் தமது அஞ்சலி உரையைத் தொடங்கினார்.

அவர் தமது அஞ்சலி உரையில், தான் கற்ற பாடசாலை, பின்னர் தான் பட்டம் பெற்றமை, தான் உத்தியோகம் பார்த்தமை பற்றி உரையாற்றி,

தற்போது பட்ட மேற்படிப்பைத்தான் மேற்கொண்டு வருவதாகவும், தான் பாடசாலைக்குச் செல்லும்போதே அன்று இறந்தவரின் வீட்டின் முன்வீதியால் சென்று வருவதாகவும், தமது இரங்கலுரையை, கண்ணீர் அஞ்சலி உரையை நிறைவு செய்தார்.

எனக்குப் பக்கத்தில் நின்றவர் என்னிடம் இரங்கலுரை யாரைப் பற்றி நிகழ்த்தப்பட்டது என்று என்னிடம் கேட்டார்.

உரை நிகழ்த்தியவர் தன்னைப் பற்றியும், தனது பெருமைகள் பற்றியும், முன்னேற்பாடாகவே இங்கு நிகழ்த்திச் சென்றிருக்கிறார். அதனால் என்ன?

இப்போ உரையாற்றியவருக்கு என ஒரு கண்ணீர் அஞ்சலிக் கூட்டம் நடத்தும் போது, இதெல்லாம் பிரயோசனப்படும் அல்லவா? என்று இன்னொருவர் சொன்னார்.

# பதவிஉயர்வு பெறுவது எப்படி?

அவர் சொல்கிறார், "எங்களுக்குத் தெரிந்த வரையில் ஒன்றன்பின் ஒன்றாக அடுத்தடுத்து யோசனைகளைக் கொண்டு பரிசோதனை செய்து வந்தோம். இதுதான் வழி வெற்றிகர மான வழி" என்று.

எனவே உங்கள் யோசனைகளை அரை குறை பாடுள்ளவை என்பதால் அவற்றை சமர்ப்பிக்க- அறிமுகப்படுத்தத் தயங்காதீர்கள். பரிபூரண மான - குறைகளே என அஞ்சினால் உங்கள் யோசனை என்ற ஒன்று கிடையாது. அப்படி அஞ்சினால் உங்கள் யோசனையானது பரி சோதனை என்கிற முதல் கட்டத்தையே அடையாது போய்விடலாம். அது சீர்திருத்தப்படும்.சில பகுதி கள் எடுத்துக்கொள்ளப்படும். சேர்க்கப்படும்; செம்மையாக் கப்படும். அறிவு, தொழினுட் பம், அனுபவம் இவற்றின் வழி காட்டுதலின் மீது எல்லா யோச னைகளும் மதிப்பீடு செய்யப் படும்.

ஒரு இத்தாலிய பழமொழி சொல்வது போல்" வெற்றி பெறத் தவறுகின்றவனே பணக்காரன் ஆகிறான்.'' எனவே சீக்கிரம் செல்வந்தராவதற்கான ரகசியம் -வெற்றியை இழந்தால், வெற் றியை தவறவிட்டால் முன் னேற்றம்; முன்னேற்றம்.

உங்கள் யோசனையைக் ' கண்டுபிடிப்பு' என்று அறி வித்து- அதற்கு காப்புரிமை பெற்று, கோடீசுவரர் ஆனார் ஒருவர். வாழ்நாள் முழுவதும் அவருக்குப் பங்குப் பணம் வந்து கொண்டு இருந்தது. இது பற்றி உங்களுக்குத் தெரிந் திருக்கும்.

தனக்குத் தோன்றுகின்ற யோசனைக்கு காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பாளர் ஒரு புறம். ஆனால் தங்களுக்குத் தோன்றுகின்ற யோசனைகளுக்குக் காப்புரிமைபெறாதவர் கள், லட்சக்கணக்கில் இருக்கலாம். என்றாலும் பலர் தங்கள் யோசனைகளைப் பற்றி தொடர்ந்து சிந்தித்தனர். அவற்றை எழுதி வைத்தனர். பிறகு வெளிப்படுத்தினர்.

உற்பத்திப் பொருள்கள்- மூலப் பொருள் கள் - சேவைகள் - முறைகள் - அமைப்புக்கள் - புதியமுயற்சிகள் - திட்டங்கள் ஆக எந்தத் துறைகளில் எல்லாம் மேம்பாடு தேவையோ, அவற்றைப்பற்றி எல்லாம் தங்கள் யோசனை களைத் தெரிவித்தனர். அதன் வாயிலாக அப்படி யோசனை தெரிவித்தவர்களை நிர்வா கம் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அவர் கள் பெரும் வருவாய் தருகின்ற பதவிக்கு உயர்த்தப்பட்டனர். யோசனை கூறியதற்கான ரொக்கப் பரிசுகள் அளிக்கப்பட்டன. உருப் படியான யோசனைகளை வெளிப்படுத்திய தன் வாயிலாக அவர்களின் மதிப்பு உயர்ந்தது. இந்த சுலபமான வழியின் மூலமாக அவர்கள் சீக்கிரம் செல்வந்தரானார்கள்.

முற்றிலும் புதுமையான வேறு எவரும் கண்டுபிடிக்காத ஒருயோசனை என்றால், அதனால் மிகப்பெரிய விளைவுகள் ஏற்படும் என்றால், சட்டபூர்வமான அம்சங்களைத் தாக் குப் பிடிக்கத்தக்கதாக அந்தக் கண்டுபிடிப்பு இருக்குமானால், அதற்குக் காப்புரிமை பெற் றுக் கொள்ளலாம். இவ்வாறு காப்புரிமை பெறுவது அதிக காலத்தையும் பணத்தையும் விழுங்கிவிடும். ஏன் என்றால் உங்களுடைய யோசனையைப் போன்றே வேறு சிலரும் சில கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பித்து, அவற் றுக்கு காப்புரிமை மிரட்டல்கள் வரலாம். சட் டரீதியாக வழக்குகள் போட்டு உங்களை அலைக்கழிக்கலாம்.

காப்புரிமை பெற்றுத் தருவதற்கென்று அத் துறையில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய கண்டுபிடிப்பை பதிவு செய்வதற்குப் போதுமான காரணங்கள் இருக்குமானால், சட்டபூர்வமான உங்கள் கண்டுபிடிப்பை பதிவு செய்ய எல்லாம் சரியாக இருக்குமானால் நீங்கள் அத்துறையில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர் வாயிலாக காப்புரிமையை பதிவு செய்யலாம். முறையாக செய்யப்படு கின்ற அத்தகைய விண்ணப்பதாரர்களின் உற்



சாகத்தை நான் கெடுக்க விரும்பவில்லை.

இந்த அத்தியாயத்திலும் முந்தைய அத்தியா யத்திலும் நான் கூற விரும்புவது என்ன வென்றால் - திடீர் கண்டுபிடிப்பாளர்களை நான் உருவாக்க விரும்பவில்லை. அப்படி ஒரு வர்க்கம் உருவாகி - காலத்தையும் பணத்தையும் செல வழித்து, போதுமான தயாரிப்பு இன்றி அவர்கள் காப்புரிமைக்கு விண்ணப்பம் செய்வதை நான் ஊக்கப்படுத்த விரும்பவில்லை.

ஆக நாம் இங்கு சுருக்கமாக இதை மறு படியும் நினைவு கொள்வோம்.

1. இந்தப் புத்தகத்தின் நோக்கம் உங்களை சீக்கிரம் செல்வந்தர் ஆக்குவது தான்.

2. மேலும் பயன்மிக்கவராக உங்களை ஆக்குவது.

3.மேலும் உங்கள் அதிக மதிப்பு மிக்கவராக ஆக்குவது.

4.அவ்வாறு ஆவதற்கு இதற்கு முன்பும் இதற் குப் பிறகும் உள்ள அத்தியாயங்களில் கூறப் பட்டுள்ள வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழி களை நாங்கள் மேற்கொள்ளுமாறு செய்வது.

5. அதற்காக நீங்கள் திடீர் நிபுணர் ஆக வேண்டுமென்றோ இதில் எந்த வழிமுறையும் கூறவில்லை.

6.இதில் கற்பிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் எல்லாம் சுலபமானவை. நிச்சயமானவை. பல லட்சக்கணக்கான மனிதர்கள் உங்களைப் போன் றவர்கள் இந்த வழிமுறையின் வாயிலாகவே சீக்கிரம் செல்வந்தராகியிருக்கிறார்கள்.

ஏதோ ஒரு அற்புதத்தைக் கண்டுபிடித்து, அதற்குக் காப்புரிமை பெற்று, ஒரே இரவில் கோடீசுவரர் ஆகிவிடலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது இந்தப் புத்தகத்தின் நோக்கம் அல்ல; இதன் நோக்கம் என்னவென்றால்,

1. சிந்தியுங்கள் . 2.எழுதி வையுங்கள்

3.வெளிப்படுத்துங்கள்

- என்று உங்களை ஊக்கப்படுத்துவதே இந்தப் புத்தகத்தின் நோக்கம். உற்பத்திப் பொருள்களை - மூலப்பொருள்களை - புதிய முயற்சிகளை - திட்டங்களை - இவ்வாறு உங் களுடைய சொந்த உலகில் உள்ள எதையும் எல்லாவற்றையும் மேம்படுத்திட சிந்தியுங்கள்- எழுதி வையுங்கள் - வெளிப்படுத்துங்கள். அதன் மூலம் நீங்கள் முன்பைக்காட்டிலும் பயன்மிக்வராக ஆவீர்கள். அதன் வாயிலாக மேலும் மதிப்பு மிக்கவராக மாறுவீர்கள். நீங் கள் சீக்கிரம் செல்வந்தராகி விடுவீர்கள். உங்கள் யோசனை களை வெளிப்படுத்துவதன் வாயிலாகவே மேலே சொன்ன முன்னேற்றம் அனைத்தும் உங் களுக்கு கிட்டும்.நீங்கள் தெரி விக்கும் யோசனைகளுக்கு- இவ்வளவு பணம் வேண்டும் என்று உரத்த குரலில் கேட்டு வாதம் செய்யாதீர்கள். இப்படி நடந்து கொண்டால் உங்களுக் குப் பணம் கிடைப்பதை விட - உங்களுக்கு எதிர்ப்புத் தான் வளரும்.

நீங்கள் தெரிவிக்கும் யோச னைக்கு விலை வைக்காதீர்கள். எல்லா யோசனைகளுக்கும் பணம் வேண்டும் என்பது உங் கள் நோக்கம் அல்ல.

'மேம்பாட்டுக்கான யோச னைகளைத் தொடர்ந்து வழங்கி வருபவர்' என்கிற பெருமை மிக்க மதிப்புதான் உங்களுக் குத் தேவை.

ஒவ்வொரு யோசனைக்கும் இவ்வளவு தொகை என்று விலை வைத்து அதில் ஊன்று கொண்டிருப்பதை விட - நீங்கள் பெறும் மதிப்பும், பெருமையும் உங்களை சீக்கிரம் செல்வந்தராக்கும்.

போட்டியில் மற்றவர்களைவிட முந்தியிருப் பதற்கான யோசனைகளை ஒரு தொழில் வர்த் தக நிறுவனத்துக்கு தொடர்ந்து வழங்கி வருகிற ஒரு தொழிலாளி - கூடுதலாக வெகு மதிகள் பெறுவார். முதலில் அந்த தொழிலாளி நிர்வாகத்தின் கவனத்தைக் கவர்ந்திடுவார். அவருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். அதிக வருமானம் கிடைக்கும். யோசனை கூறிய தற்கான விசேட போனஸ் கிடைக்கும். இவ் வாறு யோசனை கூறியவர் கம்பெனிக்கு அத் தியாவசியமானவர்என்பதால் அவருடைய வேலைக்கு நிச்சயமான பாதுகாப்பு உறுதி செய்யப்படும்; வேலை உத்தரவாதமாக இருக்கும். (வளரும்)

சுடர் ஒளி வாசகர்களே!
குடத்துள் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.
சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள்.
தரமானவை பிரசுரிக்கப்படும்.
படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி,
இல.361 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



# சிறுவர் உலகம்




இளவரசர்களும், இளவரசியும் மாய மாளிகையினுள் ஒளிந்திருப்பதை அறியாதவளாய் தனது எதிர்காலக் கனவுகளை உரத்த குரலில் தனக்குத் தானே கூறிக்கொண்டிருந்தாள். மாயக்கிழவி. எனினும் அவளது மகிழ்ச்சி நீண்டநேரம் நிலைக்கவில்லை. படபடவென மாளிகைக் கதவு தட்டப்பட்டது. "மாட்சிமை பொருந்தியவரே! உங்கள் அடிமைகள் வந்திருக்கின்றோம்" என்ற குரலோடும், குனிந்த தலையோடும் இரு இராட்சதர்கள் உள்ளே நுழைந்தனர்.

"ஏனடா! இங்கே வந்தீர்கள்? நான் மாளிகையில் இருக்கும்போது உங்களை உள்நுழையக் கூடாது என்றல்லவா சொல்லியிருக்கிறேன்" என்றாள் மாயக்கிழவி.

"நடக்கக் கூடாது நடந்துவிட்டது. அதனால் தான் நாங்கள் வரவேண்டிய தாகிவிட்டது என்று குற்றவாளிகள் போல் கூவினார்கள் இராட்சதர்கள்" "அப்படி என்னதான் நடந்துவிட்டது?" என்றாள் மாயக்கிழவி.

"மாட்சிமை தாங்கியவரே! அந்த இரு இளவரசர்களும் மாயமாய் மறைந்துவிட்டார்கள்" என்றனர் இராட்சதர்கள்.

"அவ்வளவு தானே? அவர்கள் இந்த மாயத் தீவை விட்டு வெளியேறவே முடியாது என்னுடைய மந்திரக் கண்ணாடியின் உதவியோடு அவர்கள் எங்கிருக்கிறார்கள் என நொடியில் கண்டுபிடிக்கிறேன்" என்று கூறிவிட்டு மந்திரக் கண்ணாடியின் முன்னால் அமர்ந்தாள் மாயக்கிழவி. ஆனால் அவள் எதிர்பார்த்ததைப் போல இளவரசர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை மாயக் கண்ணாடியால் காட்ட முடியவில்லை. மாயக் கிழவியின் முகத்தில் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியது.

(மந்திரக் கிழவி வருவாள்...)

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 28.11.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).

**கேள்வி:-** 55 ஆவது பொதுநலவாய மாநாடு எங்கே நடைபெறவுள்ளது?

பதில்:- ..............................................................

பெயர் :- ..............................................................

தரம் :- ..............................................................

பாடசாலை :- ..............................................................

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.**
சுடர் ஒளி
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**12**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 11**

சரியான விடை - **ஹையான் சூறாவளி**

இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -

**அ. பவித்திரா**
மட்/ விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயம். கல்லடி

01. நீ.குறிஞ்சிகன். தரம் - 9. கிளி/சிவநகர் அ.த.க. பாடசாலை.
02. நி.டிசாந். தரம் - 4. க.மு/ சரஸ்வதி வித்தியாலயம், பெரிய நீலாவணை. கல்முனை
03. ச.கயான் . தரம் - 3. இ/ பர்துசன் உயர் பாடசாலை. இரத்தினபுரி.
04. அ.பாத்திமா நசுஹா. தரம் -7. த/ சென்மேரிஸ் கல்லூரி.
05. இ. திஷாந் . தரம் - 11. யா/ இந்துக்கல்லூரி.

# அறிந்து கொள்வோம்

மனித உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை - 200 000
சராசரி மனிதனின் குருதியின் அளவு - 5.5 லீற்றர்
மனித உடலில் இருந்து வெளியேறும் சிறுநீரின் சராசரி அளவு - 1.5 லீற்றர்
சராசரி மனிதன் ஒரு நாளில் அருந்த வேண்டிய நீரின் அளவு - 6 லீற்றர்
மனித உடலில் உள்ள இரத்த நாளங்களின் மொத்த நீளம் - 100 000 கிலோமீற்றர்
மனித உடலில் மிகவும் குளிரான பகுதி - மூக்கு
மனித உடலில் வியர்க்காத உறுப்பு - உதடு
மனித உடலின் சிவப்பு அணுவின் சராசரி ஆயுட் காலம் - 120 நாட்கள்
இறந்த மனிதனின் இதயத்தின் உயிர்த்துடிப்பு அடங்கு நேரம் - 20 நிமிடங்கள்
மனித நகம் வளரும் வருட சராசரி அளவு - 12.5 அங்குலம்


# கோபம் கொடியது

காட்டை அடுத்து மலைக்கோட்டை என்ற சிற்றூர் இருந்தது. அங்கே ஒரு உழவன் வாழ்ந்து வந்தான். அவன் மான் ஒன்றை அன்பாக வளர்த்து வந்தான். அந்த மானும், அவனிடம் அன்பாக இருந்தது. வேலை முடிந்து அவன் வீட்டிற்கு வருவான். அவனை வரவேற்க, மான் துள்ளிக் குதித்தபடியே ஓடி வரும். அவனைச் சுற்றி, சுற்றி வந்து தன் மகிழ்ச்சியைக் காட்டும்.

அவனும் அதைக் கட்டிப் பிடித்துக் கொஞ்சுவான். அன்றும் வழக்கம் போல, வீட்டிற்கு வந்தான் அவன். அவனை வரவேற்கும் மான் வராததைக் கண்டான். பரபரப்புடன் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்றான். அங்கும் மான் இல்லாததைக் கண்டான். மானைத் தேடி ஊர் முழுவதும் அலைந்தான். எங்கும் கிடைக்க வில்லை. கோபத்தால் துடித்தான் அவன்.

இங்கே உள்ள எவனோதான் என் மானைக் கொன்று இருக்க வேண்டும். அவன் எங்கே இருந்தாலும் கண்டு பிடித்துக் கொல்ல வேண்டும். அப்போதுதான் என் உள்ளம் ஆறும்' என்று நினைத்தான்.

அவன் செய்த முயற்சி எதுவும் பயன் தரவில்லை. மானைக் கொன்றது யார்? என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவன் கோபம் அதிகம் ஆனது.




மானைக் கொன்றவனைக் கண்டுபிடிக்க அவனுக்கு நல்லவழி தோன்றியது. கடவுளை நினைத்து கடுமையான தவம் செய்தான். அவன் முன் கடவுள் தோன்றினார்.

கடவுளே! என் மானைக் கொன்றவனை இங்கே கொண்டு வந்து நிறுத்துங்கள். நான் அவனைக் கொன்று பழி தீர்க்க வேண்டும்," என்று கோபத்துடன் சொன்னான் அவன்.

அன்பனே! கோபம் கொடியது. யார் கோபம் கொள்கிறாரோ... அவரை அந்தக் கோபமே அழித்து விடும். கோபத்தை விடு. உன் மானை வேண்டுமானாலும் தருகிறேன். வேறு எந்த வரம் வேண்டுமானாலும் கேள் தருகிறேன்," என்றார் அவர்.

கோபம் சிறிதும் அடங்காத அவன், எனக்கு மானும் வேண்டாம், வரமும் வேண்டாம். மானைக் கொன்றவன்தான் வேண்டும்," என்றான்.

அப்படியே ஆகட்டும்." என்ற அவர் அங்கிருந்து மறைந்தார்.

பயங்கரமாக கர்ஜித்தபடி சிங்கம் ஒன்று அவன் முன் தோன்றியது.

ஐயோ! என் மானைக் கொன்றது இந்தச் சிங்கமா? கோபத்தால், இப்படி ஒரு வரம் கேட்டு விட்டேனே. என்ன செய்வேன்?" என்று அலறினான் அவன்.

அதை பொருட்படுத்தாத சிங்கம், அவன் மேல் பாய்ந்து அவனைக் கொன்று தின்றது.

# இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகள்

**பன்னிரண்டு தமிழ்ச்சிறுகதைகளின் ஆங்கில மொழியாக்கத் தொகுப்பு.**

**மொழிபெயர்ப்பு- சோ. பத்மநாதன் (சோ.ப)**

எமது மண்ணின் படைப்பாக்க முயற்சிகளில் முதன்முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பதினொரு பேரின் சிறுகதைகள் ஒரு தொகுப்பாக வெளிவந் திருக்கின்றன.




பெருமிதமும் நிறைந்த மகிழ்ச்சியும் தருகிற ஒரு விஷயம் இது என்பது மாத்திரமன்றி காலத்தின் ஒரு அவசிய தேவை. ஒரு பொருத்தமான காலகட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மிகப் பொருத்தமான எமது மண்ணின் படைப் பாளியொருவரால் இந்த அரிய சேவை நிறை வேற் றப்பட்டிருக்கிறது. இதற்காக எமது எழுத்து லகில் தவிர்க்க இயலாத் தனித்துவத்தோடு தொழிற்பட்டு வரும் கவிஞரும் கல்விமானும் மொழிபெயர்ப் பாளருமர்கிய சோ.பத்மநாதன் அவர்களுக்கு இலக்கிய இதயங்கள் அனைத்தும் கடைமைப்பட்டிருக்கின் றன.

ஓட்டமாவடி அரபாத், உமாவரதராஜன்,செழியன், ஶ்ரீதரன், அல்அஸீமத், ராஜேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ரஞ்சகுமார், திருக்கோவிலூர்கலியுவன், நந்தி, கோகிலா மகேந்திரன் ஆகியோரது சிறுகதைகள் தொகுப்பிலடங்குகின்றன.

தமிழ்ப்படைப்புக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்கின்ற பணி எமது மண்ணின் தமிழ்ப் படைப்புக்களின் தனித்துவத்தையும் படைப்பாளிகளின் ஆற்றலையும் வெளிக்கொண ருகின்ற, இன்னுமொரு அகலித்த பரப்புக்கு அறிமுகம் செய்து வைக்க உதவுகின்ற ஒரு சிறந்த சேவை.அதனை நிறை வேற்றி வைக்க முன்வந் திருப்பவர் சோ.ப.வாக இருப்பதும் நயந்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி படைப்பாக்கங்களின் உள்ளார்ந்த பண்புகளை நன்கறிந்த நயந்து பாராட்டுகின்ற ஒருபடைப் பாளியால் இச்சிறுகதை கள் மொழி பெயர்க்கப்பட் டுள்ளமைக்காக நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும். குழந்தை ம. சண்முகலிங்கம் அவர் களது மூன்று நாடகங் களின் ஆங்கில வடி வத்தை அடுத்து இச் சிறுகதைகளின் மொழிபெயர்ப்பு முயற்சி, மேலுமொரு அரிய நூலை எமக்கு வழங்கியிருக்கிறது. சோ.ப. அவர்களின் பணி தொடர மனதார வாழ்த்துவோம்.

## ஒரு பெரு வெளியிருப்பில்

*ஒளியின் நேர்ப் பொருள் நானறிந்ததே*
*ஒளி பற்றிய விஞ்ஞான உண்மைகளும் அவ்வாறே*
*ஒளி பற்றிய புரிதல்களும் வியாக்கியானங் களும் கூட.*

*ஒளி தருவதான அனுபவ உணர்வுக்கும்*
*எனதிருப்புக்குமிடையே உள்ளதோ*
*பாதாள இடைவெளி?*

*நான் ஒளியின் பிரதியீடுகளை உபயோகிக் கிறேன்*

*சிலசமயம் ஸ்பரிசம்*
*சில சமயம் கேட்டல்*
*சில சமயம் நுகர்தல்*
*அரிதாக இவை மூன்றினையுமே...*

*எனதான இன்மையின்வெளி*
*என்னை உள்ளீர்க்கையில்*
*விண்ணில் தறிகெட்டுப் பறக்கிறதோர்*
*நூலறுந்த பட்டம்!*

*எனினும்,*
*ஒளியுலகோர் விரிக்கும் கனவுகளும்*
*சமர்ப்பிக்கும் அறிக்கைகளும்*
*நொந்துரைக்கும் அனுபவங்களும்*
*ஒளிக்குப் பிரதியாய் நான் உபயோகம் கொள்ளும்*

*அனைத்தினதும் அர்த்தத்தை*
*இன்னுமின்னுமாய் ஆழச் செய்கையில்*
*தோளழுத்தும் விரல்களின் தீண்டலும்*
*இறுக்கும் தழுவலின் திணறலும்*
*இனிதெனப் பதியும் முத்தத்தின் கிறக்கமும்*

*குரல் வழிசுரந்து பெருகித் தவழும்*
*வார்த்தைகளின் பிரியமும்*
*பிரகாசமாய் விஹாசம்*
*கொள்கிறதென் உலகில் !*

**ந.சத்தியபாலன்**

# நெஞ்சக்கிளர்வு

வசியன்

மனம் திறந்த உரையாடல் ஆரோக்கியமான உறவுகளின் ஸ்திரத்தன்மைக்குத் தேவைப்படு கின்ற ஒரு தொழிற்பாடு. அன்பின் பெயரால் நிலை கொண்டிருக்கிற நமது உறவுகளிடையில் பல சந்தர்ப்பங்களில் மனம்விட்டு வெளிப் படையாகக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள் ளும் பண்பு அருகி வருகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. பரஸ்பரம் இருக்கிற அக் கறையை - ஈடுபாட்டை - கரிசனையை நிதானமான சொற்களால் வெளிப்படுத்துவது ஒரு அவசிய தேவை. அதனை நம்மில் எத்தனை பேர் பிரக்ஞை பூர்வமாக நிறைவேற்றுகின் றோம்?

ஏதாவது ஒரு உணர்ச்சிக் கொந்தளிப்பில் (பெரும்பாலும் கோபத்தில் - எரிச்சலில்) வார்த்தைகளைக் கொட்டும் தன்மை உடையவர்களாகவே பலரும் இருக்கிறோம். நமக்கு ஒரு தாக்கம் - ஒரு எதிர்மறை விளைவு ஏற்பட் டுப் போகக் கண்டுவிடும் அடுத்த கணத்தில் எதிராளி யாராக இருப்பினும் வார்த்தைகளைத்





# செய்க தவம் நெஞ்சே

தேர்ந்தெடுத்து அவர்களை நோக்கி குறுவாள் களை வீசுகிறோம். எதிராளி காயப்பட்டு நிலை குலைந்து போவதனைக் கண்ணுறும் போது அல்லது உணரும் போதுதான் நாம் திருப்தி யடைகிறோம். அந்தக் கணங்களில் எங்கே போகிறது எமது அன்பு?

நம்மீது அன்பு பூண்டிருக்கின்ற நமது அன்புக்குப் பாத்திரமாகியிருக்கின்ற எத்த னையோ சந்தர்ப்பங்களில் தமது அன்பினால் எமது மனக் காயங்களுக்கு மருந்திடுகின்ற ஒருவரைத்தான் நாம் காயப்படுத்தியிருக்கிறோம் என்பதை நாம் உணர்வதேயில்லை. இத்தகைய பிபத்துக்கள் தான் உறவுகள் உடையவும் சிதையவும் கார ணமாக அமைகின்றன. இவ் வாறு பொறுப்பற்ற போக்கி னால் அன்பை உடைத்துப் போட்டுவிட்டு எல்லா உற வும் போலிதான். எல்லோ ருமே வேடதாரிகள் தான் என்று குறை கூறிக் குறுகிப் போவதில் எவருக்கு என்ன இலாபம்?

நிதானமாக பொறுமை யாக அடுத்தவரின் உணர்வு களையும் கௌரவித்துப் பேசும் போதுதான் உறவுகள் உறுதியாகின்றன. அன்பு அடையாளம் காணப்படு கிறது. பொழுது போகாமல் யாருடனாவது சும்மா கதைத்துக் கொண்டி ருக்கப் பிரியப்படுகின்ற நாமெல்லாம் உணர்வு பூர்வமாக அறிவோடு வார்த்தைகளின் கனமும் அழகும் புரிந்து உரையாடுவோமானால் எமது உரையாடல்கள் பலரது மனங்களுக்கு மருந் தாகி உதவும் என்பதை யாவரும் உணர வேண்டும். இந்த உலகில் புரிந்துகொண்டு இதமாய் அன்பு காட்டப் பெறாத - அன்புக்கு ஏங்குகின்ற - ஜீவன்கள் எங்கும் உள்ளன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

# நவம்பர் - 26;...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக வடமராட்சியை ஆக்கிரமிக்க வேண்டும் என்ற வெறியோடு மாபெரும் மனிதப் படுகொலைகளுடன் சிங்களப் படைகளால் அரங்கேற்றப்பட்ட ஒப்பரேசன் லிபிரேசன் படைநடவடிக்கைக்கான பிரதான திட்டமிடலாளராகவும் உத்தரவாளராகவும் அத்துலத் முதலியே செயற்பட்டார். இப்படை நகர்வாலேயே ஏராளமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டும் அங்கவீனர்களாகவும் மாற்றப்பட்டனர். எனினும் மில்லரின் கரும்புலித்தாக்குதல் மூலம் இந்த நடவடிக்கை பிசுபிசுத்துப்போனது.

'அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்' என்பதைப் போல இனவாதவெறி பிடித்திருந்த இவரைப் பதவியாசையும் பிடித்துக் கொண்டதால் பிரதமர் கதிரைக்கு ஆசைப்பட்டு வளர்ந்த கடா போன்று ஐ.தே.க.வின் மார்பில் பாய்ந்ததால் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். இவரை ஆளாக்கிய ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராகக் குற்றப்பிரேரணை ஒன்றை திசநாயக்கவுடன் இணைந்து கொண்டு வந்ததால் பதவியில் இருந்து தூக்கப்பட்டு கட்சியில் இருந்தே துரத்தப்பட்டார். பின் தானே ஒரு கட்சி தொடங்கி அக்கட்சிக்கு மக்களாட்சி ஐக்கிய முண்ணனி என பெயரிடப்பட்டு மேல் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்கத் தயாரானார்.

23 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 1993 ஆம் ஆண்டு அன்று ஒரு வெள்ளிக்கிழமை. மேல்மாகாண சபை பரப்புரைக் கூட்டங்கள் தலைநகரமெங்கும் அமோகமாக நடந்துகொண்டிருந்த காலப்பகுதி. கிருலப்பனையில் மாலை வேளையில் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. கூட்டத்தை தலைமை தாங்கிய அத்துலத்முதலியின் நண்பர் ஒருவர் பேசி முடிய, அடுத்து தான் பேசுவதற்காக அத்துலத் ஒலிவாங்கி நோக்கி நகர்ந்து கொண்டிருந்தார். அப்போது அந்த விபரீதம் நடந்தது.

கூட்டத்தின் மத்தியில் மர்ம நபர்கள் இருவரின் நடமாட்டங்கள் தெரிந்தன. அவர்களை அவதானித்தவர்களுக்கும் நீங்கள் யாரெனக் கேட்கத் துணிவு வரவில்லை. ஒருவர் நீல நிற ஜீன்சும் பச்சைநிற ரீசேட்டும் அணிந்திருந்தார். மற்றையவர் முகத்தைக் கட்டியபடி கறுத்த நிறமழைக்கவசமும் அணிந்திருந்தார். கூட்டத்தின் மத்தியில் இருந்து கரகோசம் செய்தபடி மேடையின் முன்பக்கம் நோக்கி ஓடி வந்தவர்களில் பச்சை நிறரீசேட் அணிந்திருந்தவர் வந்த வேகத்தில் மேடையில் பாய்ந்தேறினார்.

இந்த திடீர்ப் பாய்ச்சலை அவரின் மெய்ப் பாதுகாவலர்கள் உட்பட யாருமே எதிர்பார்க்கவில்லை. மேடையில் ஏறியநபர் எந்தவித தயக்கமும் இன்றி ரீசேட்டுக்குள் மறைத்து வைத்திருந்த 9மில்லிமீற்றர் தானியங்கி பிஸ்ரல் துப்பாக்கியை எடுத்து அத்துலக் முதலியை நோக்கி வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினார். வெடிபட்டு சுருண்டுவிழுந்த அத்துலத் முதலியை மெய்ப்பாதுகாவலர் காப்பாற்ற முயன்ற போது கீழே இருந்த நபரும் துப்பாக்கியை எடுத்து சரமாரியாகச் சுடத் தொடங்கியதால் அது முடியாமற் போனது. வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அத்துலக்முதலியின் உயிரைப் பாதுகாக்க முடிய வில்லை.

ஆனாலும் இவரின் படுகொலைக்கான பொறுப்பை அன்றைய அரசும் புலிகள் மீது கட்டிவிட முயன்றது. அனைத்து அரச ஊடகங்களும் அத்துலத்முதலி புலிகளால் சுட்டுக் கொலை என்ற செய்தியாலேயே தம் பக்கத்தை நிரப்பிக் கொண்டன. கொலையாளியின் சடலம் ஒன்று மீட்கப்பட்டதாகவும் அவர் தான் அத்துலத்முதலியை சுட்டவர் என்றும் கதை கட்டி விட அரச அதிகார தரப்பு முயன்றது. சடலமாக மீட்கப்பட்டவர் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த அப்பையா பால கிருஸ்ணன் (வயது20) என்ற புலி உறுப்பினர் என கற்பூரம் அடித்துச் சத்தியம் பண்ணியது ஆளும் தரப்பு. அவரின் அடையாள அட்டை மீட்கப்பட்டதாகவும் அதிலிருந்தே பெயரை அறிந்து கொள்ளக் கூடியதாக அமைந்ததாக விசாரணை பெறுபேறுகளை வெளியிட்டது பொலிஸ் தலைமையகம். புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தால் கொல்லப்பட்டவர் பொது வீதியொன்றில் அடையாள அட்டை உட்பட ஆவணங்கள் அகப்படும் அளவுக்கு சயனைட்டை உட்கொண்டு உயிரிழக்கும் அளவுக்கு திட்டமிடல் இல்லாதவராக இருக்க முடியாது என்பதை அன்றைய சிங்கள ஊடகங்களே பின்னர் வெளியிட்டன. ஆனால் மறுநாள் குற்றவாளிகள் யாரென்ற உண்மையைப் போட்டுடைத்தது இராணுவம். ஊடகங்களுக்கு சாட்சியமளித்த கிருலப்பனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெஸ்லி ரணதிலக அத்துலத்முதலியின் கூட்டத்திற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் செய்ய வேண்டாமென தனக்கு உயர்பொலிஸ் அதிகாரிகளால் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும் இது கடவுள் மீது ஆணை எனவும் வெளிப்படையாக தெரிவித்து அன்றைய ஆட்சியாளர்களின் முகத்தில் கரியைப் பூசினார். அத்துலத்முதலி கொல்லப்பட்டு 20 வருடங்களை கடந்திருக்கின்ற போதிலும் அவர் வளர்த்துவிட்ட இனவாதப்பேய் இன்னமும் தலைவிரித்தாடிய படியேதான் உள்ளது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 596

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | 5 | 6 |
| | ■ | 7 | | | | | |
| 8 | 9 | | | ■ | 10 | | ■ |
| 11 | | | ■ | 12 | | ■ | 13 |
| ■ | | ■ | 14 | | ■ | 15 | |
| 16 | | 17 | | ■ | 18 | | |
| | ■ | 19 | | 20 | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

**மேலிருந்து கீழ்**

1. கணவன் - மனைவி.
2. சாதகமானது அல்ல.
3. நாள்.
4. முன்னைய நிறுவை அளவையில் ஒன்று.
5. ரூபாயின் நூறு
6. சாப்பிடு.
9. சாவி.
12. பிற்பகல் தாண்டி வருவது.
13. தாய்,தகப்பன், பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து உருவாவது.
14. அடுப்படியில் காணப்படும் கருவி.
15. நடந்து செல்லுமாறு விடுக்கப்படும் பணிப்புரை.
16. இந்த மாவும் உணவுக்கு அவசியம்.
17. சோறுக்கு சுவையூட்டுவது.
18. தங்குமிடம்.
20. ஈரலிப்பான இடத்தில் வளரும்.

**இடமிருந்து வலம்**

1. உழைத்துப் பெறு.
4. அலுப்பால் வருவது.
7. செல்வந்தன்.
8. பத்து பாடல்களைக் கொண்டது.
10. தங்களது, தமது என்பதை வெளிப்படுத்தும்.
11. உயர்வானது.
12. நெஞ்சுப் பகுதி.
14. இது ஓய்வதில்லை.
15. மத்தி.
16. கோவில்களில் அமைவது.
18. நஞ்சு.
19. சாப்பிடும் உணவு உடலில் சேர்வது இதன் மூலம்.
21. நடுப்புள்ளி.
22. சேதமுற்றபின் எஞ்சுவது.

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 596

சொற்சிலம்பம் போட்டி 596ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 04ஆம் ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் 11ஆம் மற்றும் டிசெம்பர் 18ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 594க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.விநாசம், 2.வாகரை,3.திரி, 4.அம்மா, 5.சாசனம்,6.மையம், 8. கசகசா , 12. தாரம், 13. சற்று, 15.உயர்வு , 16. கவலை, 17.விரும்பு,19.தனம், 20.பாகு, 21.வதி,

**இடமிருந்து வலம்**

1.விவாதி, 4.அஞ்சாமை, 7. நாகரிகம், 9.சய,10.சரை 11.சமாதானம், 13.சக, 14.ரம், 15.உற்சாகம், 18. பயறு, 19.தரு, 20. பாலைவனம், 22. சவுக்கு, 23.திம்பு

### போட்டி இல. 593இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — சல்மா சாஜஹான், இல- 153/ ஏ - மஜீத் ஆலிம் வீதி, வாழைச்சேனை.

**2ஆம் பரிசு** — பா. நிரஞ்சனா, இல81, 2ஆம் பகுதி, அணிஞ்சியன் குளம்.

**3ஆம் பரிசு** — எஸ். ஜீவா, இல-15/4, கல்லூரி ஒழுங்கை, திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்
(2) பா. வசந்தபிரியன், இல: 64/22, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
(3) ராபியா கலீல், இல: 66/17, ஈ. வாரணவீதி, திஹாரிய, கலகெடிஹேன.
(4) திருமதி. எஸ். கலைவாணி, இல: 265/2(A), பார் வீதி, மட்டக்களப்பு.
(5) இ. யூஜீனா மரியா, இல: 85/4, கார்மல்வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(6) உ. யனோஜா, ஆண்டு 5 (C), புனிததெரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி.
(7) யோ. டொறிஸ்யோகேந்திரன், இல :52/9, புகையிரத வீதி, மட்டக்களப்பு.
(8) வே. சரஸ்வதி, அம்பன், குடத்தனை.
(9) தவகுலன் ஹரிஸ்ராம், காளிகோவிலடி,துர்க்காபுரம்,தெல்லிப்பழை.
(10) த.தயன்சிகா, புதுக்குளம் , கனகராயன்குளம் தெற்கு, கனகராயன்குளம்.

# அவன் வாழ்க்கை

● செ. செந்றோஜி
புன்னாலைக்கட்டுவன்

லிங்கம் அவசர அவசரமாக பஸ்தரிப்பிடம் நேரக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் அரசாங்கப் பாடசாலை ஒன்றில் கணக்கியல் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். "பாடசாலைக்கு பஸ்சிலேயே சென்று வருவது வழக்கம். அன்றும் அவ்வாறே சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த கார் ஒன்று அவரருகே கிறீச்சிட்டு நின்றது. அக்காரிலிருந்து அளவான உயரமும் திடகாத்திரமான தோற்றமும் கொண்ட கோட்சூட் அணிந்த வாலிபன் ஒருவன் இறங்கினான். அவன் பார்க்க மிகவும் அழகாகவும் கவர்ச்சியாகவும் காணப்பட்டான். அவன் ஆசிரியரைப் பார்த்து புன்னகைத்தவாறே அவரின் கால்களைத் தொட்டு வணங்கினான். எல்லா சுகமும் பெற்று வளமுடன் வாழ்க என வாழ்த்தியவாறு தம்பி யாரென்று எனக்குத் தெரியல்லையே'' என்றார். உடனே "நான் தான் ஆசிரியர் கதிர். உங்களுடைய பழைய மாணவன் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறேன்" எனக் கூறினான். "பார்க்க அடையாளமே தெரியவில்லை எப்படி இருக்கிறாய்" என ஆசிரியர் வினவினார். "சுகமாக இருக்கிறன்" என்றான். "என்ன திடீர் என்று இலங்கைக்கு வந்திருக்கிறாய்?" "அமெரிக்கா போனதற்குப் பிறகு இங்கு திரும்பி வரவில்லை அதனால் திரும்பி வந்தேன்" என்றான். ஆசிரியருக்கு 'பாய்' சொல்லி விட்டு காரில் ஏறிக் கொண்டான். காரோ முன்னோக்கிச் சென்று கொண்டிருக்க அவனின் நினைவுகளோ பின்நோக்கிச் சென்று கொண்டிருந்தன. சிறு வயதில் எண்ணெய் வைக்காத பறட்டைத் தலையும் பழுத்துப் போன பழையகாற்சட்டையும் அணிந்து பாடசாலை செல்லும் போது அவனைக் கேலி செய்யாதவர்களே இல்லை. ஆசிரியர்கள் கூட அவனை "உனக்கென்னத்துக்கடா படிப்பு" என்று திட்டுவார்கள். அப்பொழுது பொங்கி வருகின்ற அழுகையை அடக்கிக் கொண்டு இருப்பான். வீட்டிற்கு வந்ததும் தாயிடம் கூறி அழுவான். அவன் குடும்பத்தில் தாயும் தங்கையும் கதிரும் மட்டுமே.கதிர் சிறு வயதிலேயே தந்தையை இழந்து விட்டான்.தாய் தையல்தொழில் செய்து குடும்பத்தை காப்பாற்றினாள்.


கதிருக்கு பாடசாலையில் சுவேதா என்னும் ஒரு சிநேகிதி இருந்தாள். அவள் மட்டும் எந்நேரமும் அவனுடன் அன்பாகப் பழகுவாள். அவனுக்கு வேண்டிய நேரத்தில் எல்லாம் ஆறுதல் வார்த்தைகள் கூறுவாள். இருவரும் சாதாரண தர பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர். பரீட்சைக்குச் செல்லும் போது தாயிடமும் தனக்குக் கற்பித்த ஆசிரியர்களிடமும் ஆசி பெற்றுச் சென்றான். சிறிது காலத்தின் பின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. இருவருமே சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர். அதன் பின் அவர்கள் தாம் விரும்பிய துறைகளைத் தெரிவு செய்து உயர்தரத்தினைக் கற்றனர். கதிர் விடுமுறை தினங்களில் நூலகம் சென்று பல விதமான நூல்களைக் கற்று தன்னை மேன் மேலும் வளர்த்துக் கொண்டான். அத்துடன் நின்றுவிடாது தனது தாய்க்கும் தன்னாலான சிறு உதவிகளையும் அவ்வப்போது செய்து குடும்ப வருமானத்தை உயர்த்தினான். அவனை வெறுத்த ஆசிரியர்களே அவனது உயர்தரப் பரீட்சைக்கு பெரும் ஊக்கம் அளித்து கற்க வைத்தனர்.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளும் வெளியாகின.கதிர் அகில இலங்கை ரீதியில் முதலாவது மாணவனாகத் திகழ்ந்தார்.கதிரின் புகைப்படங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி போன்றவற்றை அலங்கரித்தன. கதிரை தமது நாட்டிற்குச் கூட்டிச் சென்று படிப்பிக்க பல நாடுகள் போட்டி போட்டன. கதிரின் படிப்பு முடியும் வரை அவனுடைய படிப்புச் செலவையும் குடும்பச்செலவையும் சில நாடுகள் ஏற்றுக் கொண்டன. அந் நாடுகளுக் குள்ளே அவன் தெரிந்து எடுத்துக் கொண்ட நாடு தான் அமெரிக்கா. அமெரிக்கா செல்லும் முன் தனக்குக் கற்பித்த ஆசிரியர்களிடமும் தாயிடமும் ஆசி பெற்றான். கதிரின் வீட்டிற்கு பொதுவாகவே யாரும் செல்வதில்லை. ஆனால் கதிர் அமெரிக்கா போவது என்று அறிந்த உடனே அவ்வூரே சேர்ந்து அவனை வழியனுப்பி வைத்தது. இதை நினைக்க அவனுக்கு ஒரு பக்கம் கவலையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதே நேரம் அவனுக்கு சுவேதாவை விட்டுப் பிரியப் போகிறோமோ என்ற கவலையும் அவனை வாட்டிக் கொண்டிருந்தது. சுவேதாவிடம் விட்டுப் பிரிய மனமின்றி விடைபெற்றான். சுவேதாவும் கலங்கிய விழிகளுடன் விடை கொடுத்தாள். காரில் கூட ஏறியிராதவர்கள் அன்று விமானத்தில் பறந்து சென்றார்கள். அமெரிக்காவில் கதிர் தனது மேற்படிப்பைத் தொடர்ந்தான். அங்கு அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருந்தது. அவன் அங்கும் சிறந்த முறையிலே கல்வி கற்று முதல் மாணவனாகத் திகழ்ந்து பொறியியலாளர் என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டான். அங்கிருந்தே சுவேதாவுடன் அடிக்கடி தொடர்பு கொண்டான். சுகதுக்கங்களினை பரிமாறிக் கொண்டனர். இவ்வாறு இவர்களின் உறவு விரிவடைந்து விரிவடைந்து சிறிது காலத்தின் பின் நட்புக் காதலாக மாறியது. ஆனால் இருவரும் தமது காதலை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தவேயில்லை. கதிர் தனது தங்கைக்குத் திருமணம் செய்து வைத்தான். அதன் பின் சுவேதாவிடம் தனது விருப்பத்தை தெரிவித்து அவளும் சம்மதம் தெரிவித்து விட்டாள். எனினும் பெற்றோரின் சம்மதத்துடனே சுவேதாவை திருமணம் செய்ய தீர்மானித்திருந்தான். இருவரும் மகிழ்ச்சிக் கடலில் குதித்தனர். எனினும் அவ் சந்தோசம் பலகாலங்களுக்கு நீடிக்கவில்லை. சிறிது நாட்களின் பின் சுவேதாவிடம் இருந்த தொடர்பு இல்லாமல் போனது. கதிரோ அனலாயத் துடித்தான். உடனே அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்தான்.

தனது வீட்டுக்கு வந்த மறுநாளே சுவேதா வீட்டிற்குச் சென்றான். வழியில் லிங்கம் ஆசிரியரைச் சந்தித்தான். அவர் கூறியவற்றைக் கேட்டதும் அப்படியே சுயநினைவிழந்து போகும் நிலையிலிருந்தான். அவனது கார் சுவேதா வீட்டை அடைந்தது.

தமது வீட்டின் முன்னால் கார் ஒன்று வந்துநிற்பதை கண்ட தாய் ஓடி வந்து வரவேற்றாள்.சுவேதாவின் வீடு முன்னைய நிலையிலிருந்து எவ்வித மாற்றமும் கண்டிருக்கவில்லை.அவ் வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டவனுக்கு கண்கள் ஓரிடத்தில் அப்படியே நின்று கொண்டது. அது தான் சுவேதாவின் வீட்டு சுவரில் மாட்டியிருந்த பிறேம் போட்ட மாலையுடனான படம். அவனால் பொங்கி வந்த அழுகையை நிறுத்த முடியவில்லை. அழுகையைக்கட்டுப்படுத்திக் கொண்டு சுவேதாவுக்கு நடந்ததை விசாரிச்சான். அதற்கு சுவேதாவின் தாய் சுவேத்தா வேலை பார்த்த இடத்தில் மக்களுக்குச் சேர வேண்டிய பணத்தை அங்கு பொறுப்பாக இருந்தவர்கள் அபகரித்து மோசடி செய்ததை மேலதிகாரிக்குக் கூறியதால் அவர் அவர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டார். அதனால் ஆத்திரப்பட்டு சுவேதாவை கடத்தி சித்திரவதை செய்து கொன்றுவிட்டார்கள் என்று அழுதவாறே கூறினார்.

சுவேதாவின் தாய் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சி தாங்காமல் கதிர் மயக்கமடைந்தான். சுவேதாவைக் கடத்தி எவ்வளவு கொடுமைப்படுத்தினார்களோஎன எண்ணி எண்ணிக் கலங்கினான். சுவேதாவின் தாயிடம் விடை பெற்று மீண்டும் அமெரிக்காவுக்கே சென்றான். தனது தாயிடம் நடைபெற்ற எல்லாவற்றையும் கூறி அழுதான். தாய் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினாள். ஆனால் சுவேதாவை அவனால் மறக்க முடியவில்லை. அவன் சுவேதாவின் நினைவுகளுடனேயே வாழத் தொடங்கினான். அவன் வாழ்வில் எந்தச் சர்ந்தர்ப்பத்திலும் இன்னொரு பெண்ணுக்கு இடமே இல்லை.



**சிறு வயதில் எண்ணெய் வைக்காத பறட்டைத் தலையும் பழுத்துப் போன பழைய காற்சட்டையும் அணிந்து பாடசாலை செல்லும் போது அவனைக் கேலி செய்யாதவர்களே இல்லை. ஆசிரியர்கள் கூட அவனை "உனக்கென்னத்துக்கடா படிப்பு" என்று திட்டுவார்கள்.**

# நாகரீகம் தெரியுமோ?

கடந்த வாரத்தோடை பம்பல் பரமசிவம் உங்களையெல்லாம் 'சுடர் ஒளி' ஊடாகச் சந்தித்தது என்பதாவது வாரம். ஓமோம் சொன்னால் நம்ப மாட்டீர்கள் எண்பதாவது வாரம் அது. அதனாற்றான் நகைச்சுவை பற்றி அதில் சொல்ல வெளிக்கிட்டனான். சிரித்திரன் பற்றியும் சொல்லியிருந்தன்.

நானும் ஒருவாறாக இந்த நகைச்சுவைப் பக்கத்திலை எண்பதாவது வாரத்தைத் தாண்டியதிலை ஒரு சந்தோசம்தான். என்ரை நகைச்சுவை வித்தியாசமானது. நகைச்சுவை என்றால் சிரிப்பு + சிந்தனை என்று சொல்லியிருந்தன். என்ரை ஆக்கங்கள் சிரிப்பை வரவழைக்காவிட்டாலும், சிந்திக்க வைக்கும் திறன் படைத்தவை. பரமசிவத்தின்ரை விசேட தகுதியே அது தான். இவர் என்னத்தை எழுத வருகிறார்? என்னத் தைச் சொல்ல முயற்சிக்கின்றார்? என்று உங்களை அப்பிடிக் கொஞ்ச நேரம் சிந்திக்க வைக்கும். அதுவும் வாசிச்சால்தான் அப்படி யோசிக்க வைக்கும். மற்றும்படி ஒன்றிற்கும் பயப்படத் தேவையில்லை.

நகைச்சுவையைப் பற்றி சொல்ல வந்த நான், இலங்கையில் வெளியாகிய ஒரு சில நகைச்சுவை எழுத்தாளர்களைப் பற்றியேனும் சில குறிப்புக்களை இங்கு பதிய விரும்புகின்றேன். 1975, 1976 இல் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசலையில் பயின்றபோது, எனது செயற்றிட்ட வேலைக்கென்று சிரித்திரன் பற்றி ஒரு ஆய்வு மேற்கொண்டிருந்தேன். அதன் பிரதி என்னிடம் இல்லை. அப்போதைய போக்கில், இத்தகைய செயற்பாடுகளை வரவேற்போரும் குறைவு. தற்போது, இவற்றை பிரக்ஞை பூர்வமாக மேற்கொள்கின்ற போக்கும், அதனைத் தேடி வாசிப்போரும் உள்ளமை மகிழ்வைத் தருகின்றது.

சிரித்திரன் சஞ்சிகையால் தூண்டப்பட்டு நகைச்சுவை இதழ் தொடங்கிய சம்பவங்களும் அப்போது தலை தூக்கியிருந்தன. அவற்றில் ஒரு தொடரை எழுதத் தொடங்கி, மீதி அடுத்த இதழில் தொடரும் என்று வெளியிட்டிருப்பர். ஆனால் அடுத்த இதழ் வெளிவராது. அந்தத் தொடரும், தொடராத தொடர் - துயரங்களும் உள்ளன. தொடங்கிய பல சஞ்சிகைகள், அற்ப ஆயுளில் நிறைவை எட்டியிருந்தன.

இணுவில் கேதீஸ்வரன் என்னும் என்னுடைய வகுப்பு சக மாணவன், ஓரளவு வெற்றிகண்டு கலகலப்பு எனும் எனும் நகைச்சுவை இதழைத் தொடராக வெளியிட்டு வந்துள்ளார். சும்மா பம்பலாக வாசிக்கலாம். சிரித்திரனில் எழுதிவந்த திக்கவயல் தர்மகுலசிங்கம் என்பவர், சுவைத்திரள் என்ற சஞ்சிகையை வெளியிட்டு வந்திருந்தார். அதுவும் நகைச்சுவை இதழாக உலா வந்திருந்தது.

புலோலியுர் க.தம்பையா என்பவர் "ஐம்பதிலும் ஆசை வரும்" என்ற ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார். 06.07.2013 இல், மீரா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

இத் தொகுதியைப் படித்து முடித்ததும், மனதிலிருந்த புற நிலை இறுக்கங்கள் தளர்ந்து மனதே இலேசான மாதிரி உணர்வு ஏற்பட்டது என்று செங்கை ஆழியான் தனது முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.

மானிப்பாய் பொ.சண்முகநாதன், மட்டக்களப்பு பாக்கியநாதன் ஆகியோர் நகைச்சுவைச் சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்பையாவின் சிறுகதைகளைத் தனியே இருந்து வாசித்தால் மனதிற்குள் சிரிக்கலாம். சேர்ந்து வாசித்தால் மனம் விட்டே சிரிக்கலாம் என்றும் முன்னுரை எழுதியுள்ளவர் தெரிவித்திருக்கின்றார்.

புலோலியுர் க.தம்பையா அவர்களின் விசிறியான சீமாட்டி புடவைக் கடல் த.சற்குணராசா முழுக்க முழுக்க சிரிப்பை வரவழைக்கவேண்டி, தம்பையா நகைச்சுவை சிறுகதைகளை, சீமாட்டி புடவைக் கடல் நிறுவனத்தின் சார்பாக புத்தகமாக வெளியிட்டார். இதனை நான் இங்கு ஏன் குறிப்பிடுகின்றேனென்றால், நல்ல விடயங்களை வெளிக் கொணர புரவலர்கள் செயற்பட்டார்கள் என்பதனை உணர்த்தவே.

'சரசக்கா வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறா' போன்ற சிறுகதைகள் வரிக்கு வரி சிரிப்பை மூட்டுகிறது. வாசித்து முடிந்ததும் சிந்திக்கவும் வைக்கின்றது. உண்மையில் எமது வாழ்வில் சந்திக்கும் சிலரைப் பார்த்து பரிதாபப் படவும் வைக்கின்றது. அங்கதச்சுவை, எள்ளல் என்றால் என்ன என்பது பற்றி இதனை வாசித்தால் புரிந்து கொள்ளலாம்.

இதில் ஒரு விடயம் மனதில் கொள்ள வேண்டியது என்னவென்றால், சிரித்திரன் ஆசிரியர் சுந்தரும், க. தம்பையாவும், வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். சமூகத்தின் மீதான, சமூகத்தின் நடவடிக்கைகள் மீதான, பார்வை அலாதியானது. அதனை எழுத்து உருவில் வைத்து சமூகத்தை வழிப்படுத்தும் பாணியும் வித்தியாசமானது.

அங்கதச்சுவை, எள்ளல் என்ன? நகைச்சுவை என்ற பரப்புக்குள் அடக்கலாமா? என்கின்ற ஒரு ஐயம் எழுகின்றது. சிரிப்பையும் வரவழைத்து, சிந்தனையையும் தூண்டுவது நகைச்சுவை என்பதனால் அதனை இங்கு பதிந்துள்ளேன். தவறாயின் சுட்டிக் காட்டுங்கள்.

இப்பதான் ஞாபகம் வருகின்றது.. பம்பல் பரமசிவம் எழுதத் தொடங்கிய காலத்தில், பத்திரிகைக்கு பொறுப்பான ஆசிரியர் சொன்னது என்னவென்றால், எதனையும் "லைற்றாக" எழுதுமாறு. ஆனால் இது கொஞ்சம் "ஹெவி" போல உள்ளது. ஆனாலும் தவிர்க்க முடியவில்லை. அதற்காக பரமசிவம் அண்ணர் கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திக்கிறவர் என்று நீங்கள் நினைத்து குழம்பிக் கொள்ளக் கூடாது. என் வழி தனி வழி ..நானும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி விடுவது. தொடர்ந்து வாசித்திருந்தால் விளங்கியிருக் கும். தொடர்ந்து நீங்கள் வாசிக்காததும் நல்லதாப் போயிற்று. அல்லது நீங்களும் குழம்பிப் போயிருப்பீர்கள்.

'சரசக்கா வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறா' என்ற கதையை வாசித்ததும், நண்பர் ஞானேந்திரன் கூறிய ஒரு கதை ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு பதினெட்டு ஆண்டுகளுக்கு முன், தனது 18 வயதில் வெளிநாடு சென்ற ஒருவர், குடும்பமும் குடித்தனமுமாகி, கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்திற்கு, தனது மனைவி, மற்றும் பராயமடைந்த இரண்டு பிள்ளைகளுடன் வந்திருந்தாராம். அவர்களது நெருங்கிய உறவினர் ஒருவர் அவர்களை மத்தியானச் சாப்பாட்டிற்கு அழைத்திருந்தனர். விசேடமாக பல அயிற்றங்கள் தயாரித்திருந்தனர்.

வந்தவருக்கு அதில் ஒரு கறி நன்றாகப் பிடித்துப் போயிற்று. மீண்டும் மீண்டும் வாங்கி உண்டார். உண்ணும் போது, தொடக்கத்தில், அதனை எப்படிச் சாப்பிடுவது என்று கேட்டார். அவர்களும் வஞ்சகமில்லாமல், 'வலது கைப்பெருவிரல், நகத்தால் இவ்வாறு அதன் உட்பகுதியை அகழ்ந்து எடுத்துச் சாப்பிடலாம். இல்லாவிட்டால், பல்லால் கார்ந்தும் சாப்பிட்டு அதன் வெளித் தோலை எறியலாம்' என்று சொல்லியிருக்கிறார்கள்

வந்தவருக்கு அப்பவும் திருப்தியில்லை. இது என்ன கறி 'அன்ரி' என்று பரிமாறிக்கொண்டிருந்த வீட்டுக் கார அன்ரியைக் கேட்டிருக்கின்றார். பார்த்துக் கொண்டிருந்து வீட்டுக்கார 'அன்ரி'யின்ரை மாம னாருக்கு - அதுதான் - அந்த 'அன்ரி'யின்ரை கண வரின்ரை தகப்பனாருக்கு, அந்த மாதிரி ஏறிக் கொண்டு வந்து. தம்பி உதுக்குப் பேர்தான் முருங்கைக்காய். உங்களை வளர்க்கிறதுக்கு, உங்கடை 'கொம்மா' (கொம்மா என்று அவர் சொல் லேல்லை.. வேறையொரு சொல்லுப் பாவிச்சவர் நாகரிகம் கருதி அச் சொல்லைத் தவிர்த்து, 'கொம்மா' என்று போட்டிருக்கிறன்), தலையிலை சுமந்து கொண்டு திரிஞ்சு வித்த முருங்கைக்காய். உதைப் போய் என்ன கறி என்று கேட்கிறாய்? என்ன? எண்டிருக்கிறார்..வந்த வெளிநாட்டினர் அங்கையிங்கை பாராமால், மள மள வெண்டு வெந்தயம், பெரிய வெங்காயம், இறால் போட்டுக் காய்ச்சிய அந்த முருங்கைக்காய்க் கறியை சாப்பிட்டுப்போட்டு எழுந்து சென்று விட்டனர்.

இந்த பகுதியை வாசிச்சிட்டு நீங்கள் என்ன யோசிக்கிறியள் எண்டுறது எனக்கு விளங்குது. நாகரிகம் கருதி பரமசிவம், 'கொம்மா' என்ற சொல்லை மாற்றிப்போட்டிருக்கிறன் என்று எழுதியிருந்தன்.

'அட! பரமசிவத்துக்கும் நாகரீகம் தெரியுமோ?' எண்டதுதானே உங்கடை யோசினை. எப்பிடி? சரியாகக் கண்டு பிடிச்சிட்டன். அதுதான் பரமசிவம்.

பம்பல் பரமசிவம்

# புகைப்படங்களில் தேடுதல்



சும்மாயிரம்மா..எனக்குத் தெரியா..தொப்பென்று பாயில் விழுந்து நித்திரையாகிவிடுவான் அவன். மனிசியும் விடாது. தினமும் அவனுக்கு சாப்பாட்டைப் போட்டுக் கொடுத்துவிட்டு, குசினி வாசலில் குந்தியிருக்கும் போதும், நித்திரையாகும்வரை அவனின் தலை நெருடும் போதும் அதையே கேட்கும். ஆக்கினைதாங்காத அவன், அழகா தலைமயிர் கட்டையா வெட்டி, மூத்த அண்ணர் மாதிரி கிளீன் சேவ் எடுத்து, போன தீபாவளிக்கு இவனுக்குப் பிடிக்காட்டியும் அம்மா ...வாங்கிக் கொடுத்த ரீசேர்ட்ட போட்டு ஸ்ரூடியோவுக்குப் போனான். அழகா, கொஞ்சமா சிரிச்சபடி, கழுத்த சரிச்சி,நிமித்தி போட்டாவும் எடுத்துக் கொண்டான். அன்றைக்கு சாப்பாடுகொடுக்கும்போது அம்மா அதை கேட்க மறந்திருந்தார். தலைநெருடி நித்திரையாக்கும்போது அவன் நினைவுபடுத்தினான். ஶ்ரீயரின்ர ஸ்ரூடி யோவில போட்டோ எடுத்திருக்கிறன். படத்தட்டுக்குப் பின்னால பில் வச்சி ருக்கிறன். நாளன்டைக்கு கறி வாங்க போகேக்க, அத எடுத்துக் கொண்டுபோய் போட்டோவ வாங்கி வா என்னன என்ற தும், அம்மா தன் வாழ்வின் இறுதி சந்தோசத்தை அந்த இரவில் அனுபவித் திருக்கக் கூடும். செல்லமாய் ஒரு முத்தத் தோடு அவனை உறங்கவைத்து விட் டாள். மறுநாளே அவசரப்பட்டு ஓடிப்போய் அந்தப் போட்டோவை வாங்கி வந்தாள். அப்பாவுக்கு அடிக்கடி எடுத்துக் காட்டி னாள். அந்த நேரத்தில் வெறுப்பைக் கொட்டிய அப்பா, அம்மா இல்லாத நேரத் தில் திருட்டுத் தனமாக தன் மகனை ரசித்தார். அவன் 07 வயதைத் தொட்ட பின் வெட்கம் துறந்து அவனது போட் டோவுக்கு ஆசைதீர முத்தமிட்டும் கொண்டார். அந்தப் போட்டோ குறித்து அவனிடம் சொல்ல அம்மாவிடம் விமர் சனங்களிருந்தன. இன்னுங்கொஞ்சம் சிரிச்சிருக்கலாமடா.. அந்தக் கன்னக்குழிதானாடா எனக்குப் பிடிக்கும்.. தலைமுடிய ஏனடா இப்பிடி வெட்டின்னீ..என்று அவனோடு கதைக்கவேண்டிய கதைகளை தேங்காய் துருவும்போதும், புட்டுக்கு மா பிசறும்போதும், புகையும் அடுப்பை ஊதும்போதும், அப்பாவுக்கு தேத்தண்ணி ஆக்கின தீர்க்கும்போதும் நினைவுபடுத்திக் கொண்டாள். இன்று இரவு நேரம் இரவு 10ஐக் கடந்தும் அவன் வீடு திரும்பவில்லை. இன்னமும்தான் திரும்பவில்லை. போட்டோவுக்கான விமர்சனத்தோடு, போட்டோவைத் தாங்கி அவனைத் தேடிக் கொண்டிருக்கிறாள் அம்மா.

# சிம்பு என்றால் வம்பு தானா?

### சிலம்பரசனுடன் ஒரு நேர்காணல்


கேள்வி:-எப்போதும் உங்களைப் பற்றி ஊடக உலகம் பரபரப்போடு எதையாவது சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக தனுஷு டன் மோதல், ஹன்சிகாவுடன் காதல் என்று நீங்களே ஏதாவது பரபரப்பு கிளப்பிவிடுகிறீர்களா?''

சிம்பு:- ஏன் என்னிடம் மட்டும் இந்தக் கேள்வியை எல்லோரும் கேட் கிறீர்கள்? என்னைப் பற்றித் தினமும் ஊடகங்களில் பிரதான செய்தியா வந்து கொண்டிருக்கிறது?

ஆறு வயதுக் குழந்தையாக இருக்கும் போதே 'எங்க வீட்டு வேலன்' படத்தில் நடித்த சம்பளத்தில இந்திய அரசாங்கத்துக்கு வருமான வரி கட்டியவன் நான். 'காதல் அழிவதில்லை' படத்தில் நாயகனாக அறிமுக மாகும் வரைதான் 'டி.ராஜேந்தர் மகன்' என்று எனக்கு ஒரு அடையாளம் இருந்தது. அதற்குப் பிறகு அந்த அடையாளத்தை நான் பயன்படுத்தியதே இல்லை. 'சிம்பு' மட்டும்தான் என் இப்போதைய அடையாளம்.

சினிமாவில் என் மேல் அன்பு காட்டியவர்களைவிட, அம்பு விட்டவர் கள்தான் அதிகம். என்னைக் கிண்டலடித்த மாதிரி இதுவரை எந்த நடிகரையும் ஊடகங்கள் விமர்சித்ததில்லை. 'அந்த நடிகையோடு சுற்று கிறேன்... அவரின் அக்காவோடு சுற்றுகிறேன்' என்று ஏதோ காதல் மன்னன் போல கேவலப்படுத்தினார்கள். 'சிம்புவா..? அவன் திமிர் பிடித்தவன் ஆயிற்றே! நம்பியவர்கள் வாழ்க்கையை அழித்துவிடுவானே' என்று அவதூறு கிளப்பி என்னை சினிமா உலகில் ஓரங்கட்ட நினைக் கிறார்கள்.ஆனால் 'நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்?' என்று இப்போது வரை எனக்குப் புரியவில்ல.





கேள்வி: உங்களால் படப்பிடிப்பு தாமதமாகின்றது. மற்றவர்களின் நேரமும், தயாரிப்பாளரின் பணமும் வீணாகின்றது என்று சொல்வது பிழை என்கிறீர்களா?

சிம்பு:- நான் நடித்த கடைசியாக நடித்த படம் எப்போது வெளியான தென்று எனக்கே மறந்து போய்விட்டது. இந்த வயதில் கடகட என்று படங்களில் நடிக்காமல் ஆறு மாதத்துக்கு ஒரு படத்தில் நடிப்பது எனக்கு நல்லதா? என் படத்தைத் தயாரிப்பவர்கள், சரியாகத் திட்டமிடாமல் சொதப்பிவிட்டு, எல்லாப் பழியையும் என் மேல் போடுகிறார்கள். படப் பிடிப்பு நடத்தப் பணம் இல்லாத தயாரிப்பாளர்கள், அவர்களின் பிரச்சி னையை மறைத்துவிட்டு, 'சிம்பு படப்பிடிப்புக்கு வரவில்லை, அதனால் தான் படப்பிடிப்பு ரத்தானது. இதனால் தயாரிப்புச்செலவில் லட்சக் கணக்கில் நஷ்டம்' என்று கொஞ்சம்கூட கூச்சம் இல்லாமல் சொல்கிறார் கள். இப்படி நான்தான் மற்றவர்களை நம்பி நிறைய ஏமாந்திருக்கிறேன். அதனால், இப்போது என் அப்பாவின் தயாரிப்பு நிறுவனத்தில் ஒரு படம் தயாரித்து நடிக்கலாம் என்று முடிவு பண்ணியிருக்கிறேன். இந்தப் படம் எவ்வளவு வேகமாக முடிகிறது என்று பாருங்கள். அதன்பின் என் மேல குற்றம் சொன்ன எல்லோரிடமும் வைத்துக் கொள்கிறேன் என் கச்சேரியை!''

கேள்வி: விஜய் சேதுபதி, சிவகார்த்திகேயன், விமல், சிவா என்று ஏகப்பட்ட புதிய நாயகர்கள் உருவாகிவிட்டார்களே... ?

சிம்பு:- நீங்கள் குறிப்பிட்ட நடிகர்கள் நடித்த எல்லாப் படங்களையும் பார்த்திருக்கிறேன். அவர்களில் என் மனதில் இடம் பிடித்தவர் விஜய் சேதுபதி மட்டும்தான்.

ஒவ்வொரு படத்திலும் ஏதோ ஒன்றை வித்தியாசமாகச் செய்து பாராட்டு வாங்குகிறார். எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியையும் நின்று நிதானமாக வைக்கிறார். அது அழுத்தமா இருக்கு. முக்கியமா, சினிமா உலகத்தின் இன்னொரு முகத்தை தெளிவாகப் புரிஞ்சு கொண்டு நடிக்கிறார்.

சினிமாவில் நிறையப் பேர், திறமை, உழைப்பு எதுவுமே இல்லாம, ஒரு படம் ஓடினதும் தலைகீழா ஆடுகிறார்கள். இங்கே எப்போதும் திறமை, உழைப்பு மட்டும்தான் நிலைத்து நிற்கும். அது இல்லாதவர்கள் எவ்வளவு விரைவாக உயர்ந்தார்காளோ, அதைவிட வேகமாகக் கீழே விழுந்து விடுவார்கள்.


ஹரே கிருஷ்ணா

**ISKCON ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்**

**சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்**

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

**ரூபா.3,000/-**

**ஒரு செங்கல்லுக்காக செலுத்தி**

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ் சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக் கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப் பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத் திருக்கும்.




உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

**வங்கி விபரங்கள்**

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No. : 1120017042

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iskcon@slt.lk
www.iskcon.lk